# சவால்களை வெல்லும் ஆண்டாக அமையட்டும்

சித்திரை புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் ஜனாதிபதி



02 பக்கம்


# தமிழன்

THAMILAN தமிලන්

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 02, இதழ் : 500 பிலவ வருடம், பங்குனி மாதம் 30ஆம் திகதி புதன்கிழமை
(13.04.2022) ஹிஜ்ரி - 1443, ரமழான் - 11 , 0115886187 - பக்கங்கள் 12

விலை ரூ.30


## பிரபல பாடகர் ஷிராஸ் மரணம்

**அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டிருந்தபோது சம்பவம்**



அரசாங்கத்திற்கு எதிராக கொழும்பு காலி முகத்திடலில் முன்னெடுக்கப்பட்டுள்ள போராட்டத்தில் கலந்து கொண்டிருந்த பிரபல (சொல்லிசை) ரெப் பாடகர் ஷிராஸ்...

02 பக்கம்

‘தமிழன்’ வாசகர்கள், விளம்பரதாரர்களுக்கு இனிய சித்திரைப் புத்தாண்டு வாழ்த்துகள்!



# அரசுடன் இனி பேசமாட்டோம்!

## மைத்ரி நேற்று பகிரங்க அறிவிப்பு

### சாந்த பண்டார அரசியல் தற்கொலை செய்து கொண்டாரெனவும் சாடல்

யோ.தர்மராஜ்

மக்கள் வீட்டுக்குச் செல்லுமாறு கூறுமளவிற்கு எதிர்ப்பை சம்பாதித்து, ஆட்சி கவிழ்ந்துள்ள தற்போதைய அரசாங்கத்துடன் எவ்வித தொடர்பையோ அல்லது கொடுக்கல் வாங்கலையோ முன்னெடுக்க மாட்டோம். இனியும் பேச்சுவார்த்தையையும் முன்னெடுக்கமாட்டோம் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

கொழும்பு மாவட்ட அமைப்பாளர்களுடன் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

ராஜபக்ஷக்களின் ஆட்சியை பாதுகாப்பதற்கு எங்களுக்கு எவ்வித தேவையுமில்லை. அன்று என் உயிர், குடும்பம் என அனைத்தையும் அச்சுறுத்தலுக்குட்படுத்தியே ராஜபக்ஷக்களின் ஆட்சியிலிருந்து வெளியேறினேன். அப்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவையும் தோல்வியடைச் செய்தேன். இதுவே அவர்கள் ஆட்சியிலிருந்து வெளியேறிய முதல் தடவையாகும்.

அதன்பின்னர், நான் புதிய அரசாங்கத்தை அமைத்து ஜனநாயகம், மனித உரிமைகளை உறுதிப்படுத்தியதுடன்,...

02 பக்கம்



# சிங்கள பௌத்த நிலைப்பாட்டில் கைவைக்க வேண்டாமென பேரணி

## அரசுக்கு ஆதரவாக பிக்குகள் களத்தில்





போலியான போராட்டங்கள் என்ற போர்வையில் சிங்கள பௌத்த மக்களின் நிலைப்பாட்டில் கை வைக்க வேண்டாம் என்ற தொனிப்பொருளில் நேற்று கொழும்பில் பேரணியொன்று முன்னெடுக்கப்பட்டது.

பௌத்த பிக்குகளை அடிப்படையாகக் கொண்டு கொழும்பு தாமரைத் தடாகம் அரங்கத்திற்கு அருகிலிருந்து கொழும்பு கோட்டையை நோக்கி இந்த பேரணி நடைபெற்றது. ஜனாதிபதி மற்றும் அரசாங்கத்திற்கு ஆதரவாக பிக்குகள் தலைமையிலான இந்த ஆர்ப்பாட்டப் பேரணி நடத்தப்பட்டது.

கமெண்ட் கந்தர்..



சித்திரை வந்தது... நித்திரை போனது...

# அந்தர் பல்டி அடித்த சாந்த பண்டார; கட்சிப்பதவியை பறித்த சுதந்திரக்கட்சி!

## ஜனாதிபதியுடனான சந்திப்பும் புறக்கணிப்பு

**"மனச்சாட்சிக்கு கட்டுப்பட்டே எனது முடிவு" - சாந்த பண்டார அறிவிப்பு**

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன அரசுக்கு நேசக்கரம்நீட்டி, இராஜாங்க அமைச்சுப் பதவியை பெற்றுக் கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாந்த பண்டார - கட்சியில் வகித்த அனைத்து பதவிகளையும் பறிப்பதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அதிரடியாக தீர்மானித்துள்ளது.

இதன்படி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பிரசார செயலாளர், உப செயலாளர் மற்றும் தம்பதெனிய தொகுதி அமைப்பாளர் பதவிகள் அவரிடமிருந்து பறிக்கப்பட்டுள்ளன.

அத்துடன், மத்திய செயற்குழு உறுப்பினர் என்ற...

02 பக்கம்

## அதிக விலைக்கு எரிபொருள் விற்பனை செய்த நபர் கைது

வத்தளை - ஹெந்தலவத்தை பிரதேசத்தில் வைத்து சட்டவிரோதமான முறையில் எரிபொருளை அதிக விலைக்கு விற்பனைசெய்து, மோசடியில் ஈடுபட்ட நபரொருவரை பொலிஸார் கைதுசெய்துள்ளனர். பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலையடுத்து சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டதுடன், சந்தேகநபரிடமிருந்து 30 லீட்டருக்கும் அதிகமான பெற்றோல் கைப்பற்றப்பட்டுள்ளது.

அண்மையில் நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது, அதிக விலைக்கு எரிபொருள் விற்பனைசெய்யும் 68 இடங்களைக் கண்டறிய பொலிஸார் நடவடிக்கை மேற்கொண்டிருந்தனர். இந்நிலையில் 8,025 லீட்டர் பெற்றோலும் 726 லீட்டர் டீசலும் கைப்பற்றப்பட்டதாக, பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

## சர்வதேச ரீதியாக பெற்ற கடன்களை மீள்செலுத்தும் செயற்பாடு நிறுத்தம்

**சர்வதேச நாணய நிதியத்தின் கோரிக்கையை ஏற்று நிதியமைச்சு அதிரடி**

சர்வதேச ரீதியாக இலங்கை பெற்ற கடன்களை திருப்பிச்செலுத்தும் செயற்பாட்டை தற்காலிகமாக இடைநிறுத்தவுள்ளதாக நிதியமைச்சு அறிவித்துள்ளது.

இதன்படி 2022 ஏப்ரல் 2ஆம் திகதி வரையிலான கடன் நிலுவைகளே இடைநிறுத்தப்படவுள்ளதாக நிதியமைச்சு தெரிவித்துள்ளது. எனினும் எந்தளவு காலத்துக்கு இந்த கடன் மீள்செலுத்தல் இடைநிறுத்தப்படுகிறது என்ற விடயத்தை நிதியமைச்சு தெரிவிக்கவில்லை. எனினும் குறிப்பிட்ட திகதிக்கு...

02 பக்கம்

## இராஜாங்க அமைச்சராக சாந்த பண்டார நியமனம்

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சாந்த பண்டார, கரிம உரங்களின் உற்பத்தி மற்றும் விநியோகத்தை ஒழுங்குபடுத்தும் இராஜாங்க அமைச்சராக நேற்று முன்தினம் பதவியேற்றுள்ளார்.

சஷீந்திர ராஜபக்ஷவின் இராஜினாமாவால் ஏற்பட்ட வெற்றிடத்திற்கே அவர் நியமிக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

02 பக்கம்





# நெருக்கடி சூழ்நிலை முடிவுற்று, செழிப்புகள் மேலோங்க வேண்டும்

## புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித்

02 பக்கம்





அமைச்சரவை நியமனம் எதிர்வரும் 18ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

இதில் பல புதிய முகங்கள் இடம்பெறவுள்ளன. ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் எம்.பிக்களை உள்ளே ஈர்க்க அவர்களுக்கு அமைச்சுப் பொறுப்பொன்றும், இரண்டு இராஜாங்க அமைச்சுப் பொறுப்புகளும் வழங்க பேச்சு நடத்தப்பட்டுள்ளது.

பிரதமர் மஹிந்த என்பதில் மாற்றமில்லையாம்.

புத்தாண்டு விடுமுறை காரணமாக ‘தமிழன்’ பத்திரிகை 14, 15 மற்றும் 16ஆம் திகதிகளில் வெளிவராது. 17ஆம் திகதி வார வெளியீடு தொடக்கம் பத்திரிகையை வாசகர்கள் பெறலாம்.

## காலிமுகத்திடல் ஆர்ப்பாட்டம் மக்கள் ஆதரவுடன் தொடர்கிறது

**பிரபல பாடகி நந்தா மாலினி உட்பட்ட கலைஞர்கள் நேற்று பங்கேற்பு**

ஜனாதிபதி உட்பட அரசாங்கத்திற்கு எதிராக இளைஞர், யுவதிகள் உட்பட மக்கள் காலிமுகத்திடலில் நடத்தும் ஆர்ப்பாட்டம் தொடர்ந்தும் இரவுபகலாக நீடித்துவருகிறது.

நேற்று பிரபல பாடகி கலாநிதி நந்தா மாலினி, திரைப்பட இயக்குநரும்...

02 பக்கம்



## காலிமுகத்திடல் ஆர்ப்பாட்டம்...

பாடலாசிரியருமான பேராசிரியர் சுனில் ஆரியரத்ன, நடிகை சுவர்ணா மல்லவாராச்சி உட்பட பிரபல கலைஞர்கள் கலந்துகொண்டனர்.

சுனில் ஆரியரத்ன மற்றும் நந்தா மாலினி ஆகியோர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதுடன், நந்தா மாலினி பாடல் ஒன்றையும் பாடியமை அங்கு பெரும் வரவேற்பைப் பெற்றது.

இதேவேளை, கொழும்பு காலி முகத்திடலில் இன, மத பேதமின்றி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வரும் இளைஞர், யுவதிகள் உட்பட பொது மக்களுக்கு ஆதரவு தெரிவித்து, கலைஞர்கள், மருத்துவர்கள் என பல தரப்பினர் ஆதரவளித்து வருகின்றனர். அவர்களுக்கு தேவையான உதவிகளையும் செய்துவருகின்றனர்.

## சவால்களை வெல்லும்...

மலர்ந்துள்ள சிங்கள மற்றும் தமிழ் புத்தாண்டு, நிலவுகின்ற சவால்களை வெற்றிகொள்ளும் சுபீட்சம் நிறைந்த இனிய புத்தாண்டாக அமைய வேண்டும் என்று பிரார்த்திப்பதாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

சித்திரை புத்தாண்டு வாழ்த்துச்செய்தியில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

தற்போது நிலவுகின்ற பொருளாதார மற்றும் உலகளாவிய நெருக்கடியான நிலையில், வரலாற்றில் மிகப்பெரிய சவாலை இலங்கையர்களாகிய நாம் எதிர்கொள்ள வேண்டியுள்ளது. ஒற்றுமையுடனும், சரியான புரிந்துணர்வுடனும் நாம் அதனை வெற்றிகொள்ள வேண்டும். சவால்களுக்கு முகங்கொடுப்பதில் நீங்கள் எதிர்கொள்ளும் சிரமங்கள் ஏராளம். எமது அரசாங்கத்தின் மூலம் தற்போதைய நெருக்கடியான நிலையில் இருந்து மக்களின் இயல்பு வாழ்வை பாதுகாக்க நடவடிக்கை எடுத்து வருகின்றோம்.

எவ்வாறாயினும் சிங்கள, தமிழ் புத்தாண்டுப் பிறப்பை புதிய எதிர்பார்ப்புகளுடன் வரவேற்பது பழங்காலத்திலிருந்தே இடம்பெறும் நமது பாரம்பரியமாகும். இந்த ஆண்டும் அந்த எதிர்பார்ப்புகளுடனும், புதிய நம்பிக்கைகளுடனும் புத்தாண்டுப் பிறப்பைக் கொண்டாடுகிறோம்.

புத்தாண்டின் உண்மையான உரிமை நமது குழந்தைகளுக்கே உண்டு. குழந்தைகளுக்கு புத்தாண்டு தினத்தின் மகிழ்ச்சியைப் பாதுகாத்துக் கொடுப்பதில் நீங்கள் அதிக அக்கறை செலுத்துகிறீர்கள் என்பது எனக்குத்தெரியும்.

அதேபோன்று, புத்தாண்டு கொண்டாட்டங்களை அனுபவிப்பதற்காக தமது பிள்ளைகளுடன் இணைவதற்கான வாய்ப்பை இழந்த, விசேட கடமைகளில் ஈடுபட்டு இருப்பவர்களைப் போன்று, வெளிநாடுகளில் இருக்கும் அனைவரினதும் அர்ப்பணிப்பை நினைவு கூருகிறேன்.

மலர்ந்துள்ள சிங்கள மற்றும் தமிழ் புத்தாண்டு, நிலவுகின்ற சவால்களை வெற்றிகொள்ளும் சுபீட்சம் நிறைந்த இனிய புத்தாண்டாக அமைய வேண்டும் என்று பிரார்த்திப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

## பிரபல பாடகர்...

யூனுஸ் நேற்று காலை உயிரிழந்தார்.

நேற்று அதிகாலை காலிமுகத்திடலில் உள்ள அரசாங்க எதிர்ப்புப் போராட்ட களத்தில் கூட்டத்தினருக்காக நிகழ்ச்சியை நிகழ்த்திய பின்னர் அவர் திடீரென ஏற்பட்ட மாரடைப்பினால் உயிரிழந்தாரென தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சர்வதேச ரீதியாக...

பின்னர் பெறப்பட்ட கடன்களுக்கு இந்த நடவடிக்கை செல்லுபடியாகாது.

இந்நிலையில், இலங்கைக்கு கடன் வழங்கிய தரப்புக்களுக்கு செலுத்தவேண்டிய தொகை மற்றும் அதற்கான வட்டி ஆகியன பின்னர் செலுத்தப்படும் என்றும் நிதியமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்கமைய நிலுவையிலுள்ள அனைத்து பாதிக்கப்பட்ட சாதாரண வெளிநாட்டு கடன் மீள்செலுத்துகையை இடைநிறுத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக சர்வதேச நாணய நிதியத்தின் உதவியை அரசாங்கம் நாடியுள்ளது. அதற்கான நடவடிக்கை தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இராஜாங்க அமைச்சராக...

இலங்கையில் ஒரு புறத்தில் அரசியல் நெருக்கடி தலைதூக்கியுள்ள நிலையில், மறுபுறத்தில் குதிரை பேரமும், கட்சித்தாவும் படலமும் ஆரம்பமாகியுள்ளது.

இதன்படி நாடாளுமன்றத்தில் சுயாதீனமாகச் செயற்படுவார் என அறிவிப்பு விடுத்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஊடகப் பேச்சாளரான நாடாளுமன்ற உறுப்பினர் சாந்த பண்டாரவுக்கு விவசாயத்துறை இராஜாங்க அமைச்சுப் பதவி வழங்கப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியானது கடந்த பொதுத் தேர்தலின்போது யாழ்ப்பாணம் உட்பட சில மாவட்டங்களில் தனித்தும், ஏனைய மாவட்டங்களில் கூட்டணி அமைத்தும் மொட்டு சின்னத்திலும் களமிறங்கியது.

அக்கட்சியின் சார்பில் 14 பேர் நாடாளுமன்றம் தெரிவாகினர். அங்கஜன் மட்டுமே சு.கவின் சார்பில் சபைக்கு வந்தார். ஏனையோர் மொட்டு சின்னத்தில்தான் சபைக்குத் தெரிவாகினர்.

அரச பங்காளிக் கட்சியாகச் செயற்பட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி கடந்த 5ஆம் திகதி அரசுக்கான ஆதரவை விலக்கிக்கொண்டது. கட்சியின் தலைவரான மைத்ரிபால சிறிசேன உள்ளிட்ட 14 எம்.பிக்களும் சபையில் சுயாதீனமாகச் செயற்படுவார்கள் என்ற அறிவிப்பும் விடுக்கப்பட்டது.

இந்நிலையிலேயே தற்போது அரசுக்கு ஆதரவைத் தெரிவித்து, இராஜாங்க அமைச்சுப் பதவியை சாந்த பண்டார பெற்றுள்ளார்.

ராஜபக்ஷ குடும்ப உறுப்பினரான சஷீந்திர ராஜபக்ஷ இராஜாங்க அமைச்சுப் பதவியிலிருந்து விலகியதையடுத்து ஏற்பட்ட வெற்றிடத்துக்கே சாந்த பண்டார உள்வாங்கப்பட்டுள்ளார்.

சுதந்திரக் கட்சியின் 14 பேர், இ.தொ.காவின் இருவர் உட்பட நாடாளுமன்றத்தில் சுயாதீனமாகச் செயற்படப்போவதாக 42 பேர் கடந்த 5ஆம் திகதி அறிவித்திருந்தனர். இதனால் அரசின் சாதாரணப் பெரும்பான்மைகூட ஆட்டம் காணும் மட்டத்தில் இருந்தது.

அதேவேளை, அரசுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையொன்றை முன்வைக்கும் முயற்சியில் ஐக்கிய மக்கள் சக்தி தீவிரமாக இறங்கியுள்ளது.

இந்நிலையிலேயே தமது இருப்பைத் தக்கவைத்துக்கொள்ளும் முயற்சியில் ஆளுங்கட்சியினர் தீவிரம் காட்டி வருகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

தமிழன் தமிழன் ஜூனியர்
கொழும்பு 01
முதல் 15 வரையிலான
பகுதிகளில் தமிழன்
(தினசரி, வாரஇதழ்),
ஜூனியர் பத்திரிகை
வீடுகளுக்கே விநியோகம்
செய்யப்படும்.
தொடர்பு - சந்திரகுமார்
0777983308

மரண அறிவித்தல்,
நினைவஞ்சலி,
மற்றும் பிறந்தநாள்
விளம்பரங்களை
குறைந்த கட்டணத்தில்
பிரசுரிக்க
வெறும் 1000/=
மட்டுமே...
அழையுங்கள்
0761393805

தமிழன் வாசகர்களே!
தமிழன் இணையத்தளத்தில்
வெளியாகும் செய்திகளை
www.thamilan.lk
ஊடாக மாத்திரமின்றி
www.thamilannews.com
மூலமாகவும் உடனுக்குடன்
அறிந்துகொள்ளலாம்
தமிழன் தமிழன்

## அரசுடன் இனி ...

சமூகத்திலிருந்து பிரச்சினைகளை தீர்த்து, பொருளாதார ரீதியில் மக்கள் பாதிக்காத வகையில் பொருளாதாரத்தையும் நிர்வகித்தேன். இலங்கை பேராசிரியரின் தலைமையில் தேசிய பொருளாதார சபையை நியமித்து, பொருளாதார ரீதியில் மக்கள் பாதிக்காத வகையில் அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பை வழங்கினோம்.

எனினும், மற்றொரு தரப்பு என்னுடன் முரண்பட்டதால் பொருளாதாரம் மற்றொரு திசைக்கு தள்ளப்பட்டது. ஊழலை ஒழிக்க வேண்டும் என வந்த என்னுடைய ஆட்சியிலும் பிணைமுறி மோசடி தொடர்பாக ஊழல்களும் இடம்பெற ஆரம்பித்தன. அதன் பிரதிபலனே ராஜபக்ஷக்கள் மீண்டும் ஆட்சிக்கு வந்தனர்.

இன்று, நாட்டில் முதலில் ஆரம்பித்த பொருளாதார நெருக்கடி, சமூக நெருக்கடியாக மாறி அரசியல் நெருக்கடியாக மாறியுள்ளது. முறையற்ற பொருளாதார கொள்கைகளினாலேயே இன்று பொருளாதாரம் சீர்குலைந்துள்ளது. பொருளாதார பிரச்சினையை தீர்ப்பதற்கு தவறான முடிவுகளை அரசாங்கம் எடுத்ததுடன், அரசாங்கம் விவசாயிகளுக்கு தேவையான உரத்தை வழங்காததைத் தொடர்ந்து விவசாயிகள் அரசாங்கத்திற்கு எதிராக செயற்படுவதற்கு ஆரம்பித்தனர். இங்கிருந்தே ஏனைய அனைத்து பொருளாதார நெருக்கடிகளும் ஆரம்பித்தன. எனவே, பொருளாதார, சமூக மற்றும் அரசியல் நெருக்கடியை நாம் எவ்வாறு தீர்க்க போகின்றோம் என்பதை முதலில் ஆராயவேண்டும்.

அரசாங்கத்தின் முறையற்ற பொருளாதார கொள்கை, எமக்கு உதவும் நாடுகளை இழந்தது போன்ற செயற்பாடுகளே பொருளாதார நெருக்கடிக்கு முக்கிய காரணமாகியுள்ளன. உதாரணமாக ஜப்பான் அரசானது இலங்கைக்கு சுமார் 70 ஆண்டுகளாக உதவிசெய்து வரும் நாடு எனவும், ஆனால் தற்போதைய அரசு அந்த நாட்டை புறக்கணித்து செயற்பட்டது. எங்களுடைய ஆட்சியில் சர்வதேச நாணய நிதியத்தின் உதவியுடனே பொருளாதாரத்தை நிர்வகித்தோம். எனினும், இந்த அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்துடன் இணைந்து செயற்பட முடியாது என அறிவித்தது.

ஜனநாயகம், மனித உரிமைகள், ஊடக சுதந்திரம் என்பவற்றை பாதுகாப்பதுடன், மக்களை மகிழச்சியாக வைத்திருக்கும் நாடுகளுக்கே சர்வதேச நாணய நிதியம் உதவிகளை செய்யும். ஐக்கிய நாடுகள் சபையும் மக்களுக்கு தேவையான நிவாரணங்களை வழங்கும். இந்த அரசாங்கம் அவர்களிடம் இதுவரை எவ்வித உதவிகளையும் பெற்றுக்கொள்ளவில்லை. இதனால் நாளுக்கு நாள் நாடு சீரழிய ஆரம்பித்தது.

ஒரு வருடமாக எங்களை ஆட்சியிலிருந்து வெளியேறுமாக மத்தியகுழு கோரியது. மக்களை பாதுகாப்பதற்கு நாங்கள் பல்வேறு யோசனைகளையும் முன்வைத்தோம். அரசின் தவறுகளை கேட்கவில்லை. மக்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பை எவ்வாறு தீர்ப்பது என்பதே நாங்கள் கோரினோம். எனினும், அதற்கு முக்கியத்துவம் கொடுக்காததுடன், இடைக்கால அரசாங்கம் அமைப்பதற்கான யோசனைக்கு ஆதரவளிக்காதமையினாலேயே நாங்கள் சுயாதீனமாக செயற்பட தீர்மானித்தோம்.

இன்று நாங்கள் அரசாங்கத்தின் உறுப்பினர்களோ, எதிர்க்கட்சி உறுப்பினர்களோ அல்ல. தற்போது, சுயாதீனமாக எங்களுடைய கருத்துக்களை தெரிவிக்க முடியும். புத்தாண்டுக்கு பின்னர் முஸ்லிம் கட்சிகளும் எங்களுடைய பேச்சுவார்த்தை நடத்தவுள்ளனர்.

மக்களின் பொறுமை, அவர்களின் போராட்டங்கள் என்பன நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொடக்கம் உயர் தலைவர்கள் வரை எதுவும் தெரியவில்லை என்றே தோன்றுகிறது. மொட்டு கட்சியினர் மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக பேசுவதில்லை. பொருளாதார நெருக்கடி தொடர்பாக கடந்த வாரம் நாடாளுமன்றத்தில் இரு நாள் விவாதம் நடத்தப்பட்ட போதிலும் எந்தவொரு யோசனையையும் ஏற்றுக் கொண்டதாக தெரியவில்லை. எதிர்க்கட்சிகள் முன்வைத்த யோசனைகளுக்கு மிக மோசதான கூச்சலிட்டு, கீழத்தரமாக நடந்துகொண்டனர். நாடாளுமன்றத்தில் அவர் பெரியவர்களாக இருந்தாலும் கிராமத்துக்குச் செல்லவும் வீதிகளிலும் செல்ல முடியாது என்பதை அவர்கள் உணரவில்லை.

இவ்வாறான நிலையில் இந்த அரசாங்கத்துடன் எந்தவொரு தொடர்பையும் நாங்கள் பேண மாட்டோம். அரசாங்கத்திற்கு கடிதம் எழுதி, யோசனைகள் முன்வைத்ததும் முடிந்துவிட்டது. இனி பேச்சுவார்த்தைகளையும் முன்னெடுக்க மாட்டோம்.

நாங்கள் பேச்சுவார்த்தை நடத்துவது அரசாங்கத்தை பாதுகாப்பதற்கானதாகக் கூறும் கருத்தை முற்றாக நிராகரிக்கின்றோம்.

தற்போது நாட்டிலுள்ள மக்கள் எரிபொருள், எரிவாயு, மின்சாரம் இன்றி பெரும் இன்னல்களுக்கு முகங்கொடுத்து வருகின்றனர். இந்த நாட்டிலுள்ள சுமார் 2 இலட்சம் பேருக்கு எந்தவொரு பிரச்சினையும் இருக்காது. ஆனால் ஏனைய அனைவருக்கும் பொருளாதார பிரச்சினை இருக்கிறது. அவர்கள் நாளாந்தம் மிகவும் சிரமப்பட்டே வாழ்ந்து வருகின்றனர். இது எமக்கு நன்றாக தெரியும், ஆனால் அரசு தெரிந்தும் தெரியாததுபோல இருக்கிறது. சிறிய, நடுத்தர மற்றும் உயர் வர்க்கத்தினரும் போராட்டத்தை முன்னெடுக்க ஆரம்பித்துள்ளனர். ராஜபக்ஷக்களின் ஆட்சி வேண்டாம் எனக் கூறும் மக்களுடனே ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி இருக்கும்.

சாந்த பண்டார எம்.பி செய்த செயல் எமக்கு கவலையளிக்கிறது. அவருடைய அரசியல் வாழ்க்கையை அவரே அழித்துக்கொண்டுள்ளார். அவர் செய்தது அரசியல் தற்கொலை. கவிழ்ந்துள்ள ஆட்சியில், மக்கள் எதிர்ப்பை சம்பாதித்துள்ள ஆட்சியில் அமைச்சுப் பதவிகளை பெற்றுக்கொள்வது குறித்து அவருக்கு தெளிவில்லை. அமைச்சு பதவிகளை பெறுவதாகக் கூறியிருந்தால் அவரை நான் தடுத்திருப்பேன்.

நாட்டு மக்கள் வீட்டுக்கு போகச்சொல்லும் ஒரு அரசாங்கத்தின் அமைச்சுப் பொறுப்பை வகிக்க ஒருவர் சென்றால் அதனை அனுமதிக்கும் அளவிற்கு நான் முட்டாள் இல்லை – என்றார்.

## அந்தர் பல்டி அடித்த...

அந்தஸ்த்தையும் இழந்துள்ள சாந்த பண்டார, விரைவில் கட்சியின் அடிப்படை உறுப்புரிமையில் இருந்தும் நீக்கப்படுவாரென ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலாளர் தயாசிறி ஜயசேகர நேற்று அறிவிப்பு விடுத்தார்.

தற்போதைய சூழ்நிலையில் கட்சி செயற்பாடுகள் எதிலும் சாந்த பண்டார பங்கேற்கமுடியாது, கட்சியையும் பிரதிநிதித்துவம் செய்யமுடியாது. அரசியல், மத்திய மற்றும் நிறைவேற்றுக்குழு கூடிய பின்னர் பதவிகளை பறிக்கும் முடிவுக்கு ஒப்புதல் வழங்கப்படும்.

அரச பங்காளிக்கட்சியாக செயற்பட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி கடந்த 5ஆம் திகதி அரசுக்கான ஆதரவை விலக்கிக்கொண்டது. கட்சியின் 14 எம்.பிக்களும் சபையில் சுயாதீனமாக செயற்படுவார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் கட்சி முடிவை மீறி, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன அரசுக்கு ஆதரவை வழங்கி, விவசாயத்துறை இராஜாங்க அமைச்சை சாந்த பண்டார பெற்றுக்கொண்டார்.

“சர்வக்கட்சி இடைக்கால அரசமைக்கும் முயற்சி கைகூடாத நிலையில், நாட்டில் அரசியல் ஸ்தீரத்தன்மையை ஏற்படுத்தும் நோக்கிலேயே மக்கள் பக்கம் நின்று, மனச்சாட்சியின் பிரகாரம் அரசை ஆதரிக்கும் முடிவை எடுத்தேன்.” என்று அறிவித்து கட்சித் தாவலுக்கு நியாயம் கற்பித்துள்ளார் இராஜாங்க அமைச்சர் சாந்த பண்டார.

தமது கட்சி உறுப்பினரை வளைத்துப்போட்டு, அமைச்சுப் பதவி வழங்கியதால் ஜனாதிபதி மீது சுதந்திரக்கட்சி கடும் அதிருப்தியில் உள்ளது.

“அதிகார மோகத்தில், பழைய விளையாட்டை ராஜபக்ஷக்கள் ஆரம்பித்துள்ளனர். இதனை அனுமதிக்க முடியாது.” என சு.க. செயலாளர் தயாசிறி ஜயசேகர நேற்று கடுந்தொனியில் அறிவிப்பு விடுத்தார்.

அத்துடன், ஜனாதிபதியுடன் நேற்று நடைபெறவிருந்த சந்திப்பையும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி புறக்கணித்துள்ளது. அத்துடன் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியுடன் சேர்ந்திருந்த இதர 10 கட்சிகளும் ஜனாதிபதியுடனான சந்திப்பை புறக்கணித்துள்ளன.

## நெருக்கடி சூழ்நிலை...

மகத்தான தியாகங்களை செய்த மக்களை மீண்டும் மீண்டும் தியாகம் செய்ய கூறுவதை விட, நடைமுறையில் ஆட்சியாளர்கள் அந்த செயற்பாட்டை முன்னெடுப்பது மிக அவசியமானது என்பதை சுட்டிக்காட்டுவதுடன், இந்த நெருக்கடியான சூழல் முடிவுற்று, வளமான அமைதியான, நல்லிணக்கம் மற்றும் செழிப்பு நிறைந்த நாளைய நாள் பிறந்து, கனவுகள் நனவாக பிரார்த்திக்கின்றேன்.

இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாஸ விடுத்துள்ள புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது,

யுகத்தில் மாபெரும் கலாசார நிகழ்வாக கருதப்படும் சிங்கள, தமிழ் புத்தாண்டு அனைத்து இலங்கை பிரஜைகளுக்கும் சுபீட்சமான புத்தாண்டாக அமைய வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சூரிய பகவான் மீன ராசியிலிருந்து மேஷ ராசிக்கு செல்வதே சிங்கள, தமிழ் புத்தாண்டு பிறப்பாக கருதப்படுகிறது. சிங்கள மக்களைப் போன்று தமிழ் மக்களின் பாரம்பரிய சூரிய நாட்காட்டியின் முதல்நாள் உதயமாகுவது ஏப்ரல் மாதத்திலாகும். இருவேறு மதங்களை உருவாக்கிக் கொண்ட இரு இனத்தவர்கள் ஒன்றோடு ஒன்றாக கொண்டாடும் அபூர்வமான கொண்டாட்டமாக சிங்கள, தமிழ் புத்தாண்டை அடையாளப்படுத்த முடியும்.

இந்நாட்டு மக்கள் சிதிரை மாதத்தை சுபீட்சமான மாதமாகக் கருதுகின்றனர். இதனை அடிப்படையாகக் கொண்டு இலங்கை மக்கள் நீண்டகாலமாக வெகுவிமர்சையாக சிங்கள, தமிழ் புத்தாண்டை கொண்டாடிக்கொண்டிருக்கின்றனர்.

இருப்பினும், கடந்த இரு வருடங்களுக்கு முன்பிருந்து, எங்கள் நாட்டில் சிங்கள, தமிழ் புத்தாண்டு பிறந்தது பூமியின் குரலில் அல்ல. மாறாக, கொரோனாவிலிருந்து பாதுகாப்பாக இருங்கள் என்ற அறிவுறுத்தல்களின் குரலிலேயே பிறந்தது. செழிப்பு நிறைந்த பாடத்தை கற்றுத்தரும் சிறப்பான புத்தாண்டு, இம்முறை, எங்கள் குடிமக்களை சுத்தமான உணவை சமைக்கும் தயக்கத்திற்குள் தள்ளிவிட்டே பிறந்துள்ளது.

பொருளாதார மற்றும் அரசியல் ரீதியில் மிக ஆபத்தான நிலைக்கு முழு நாடு தள்ளப்பட்டுள்ள நிலையில், எங்களுடைய மக்களின் சாதாரண வாழ்க்கைத்தரம் அசாதாரண முறையில் சவாலுக்குள்ளாகியுள்ளது.

தன்னிறைவுப் பொருளாதாரம் நிறைந்த நாடாக இருந்த எங்கள் நாடு, இன்று கண்ணீர் சிந்தும் தேசமாக மாறியுள்ளதுடன், முழு குடும்பமும் மகிழ்ச்சியாக, அமைதியாக மற்றும் நிம்மதியாகவும் புத்தாண்டை கொண்டாடும் வாய்ப்பும் இழக்கப்பட்டுள்ளது. ஒருபுறம் மக்கள் தங்களுக்குத் தேவையான அத்தியாவசிய பொருட்களை பெற்றுக்கொள்வதற்காக வரிசைகளில் அலைக்கழிக்கப்படுவதுடன், மறு பக்கத்தில் இந்நாட்டு இளைய தலைமுறையினர் வீதிக்கு இறங்கி அரசாங்கத்திற்கு எதிராக தங்களுடைய எதிர்ப்புகளை வெளிப்படுத்திக் கொண்டிருக்கின்றனர்.

அண்மைக்கால வரலாற்றில் நாம் எதிர்கொள்ளும் மிக மோசமான சூழ்நிலையின் விளிம்பிற்கு நாம் வந்துள்ளதுடன், நல்லதொரு எதிர்கால தலைமுறையினரின் கனவை நனவாக்கும் நோக்கில் எங்கள் நாட்டு மக்கள் போராடிக்கொண்டிருக்கின்றனர்.

காலத்துக்கு காலம் பரிணமித்த மனித நாகரீகம், கலாசாரம் என்பன மனிதனை முழுமைப்படுத்தியுள்ளதுடன், அவர்களின் தேசியத்திற்கு உரித்தான கலாசார கொண்டாட்டங்களின் ஊடாக, அவர்களை நேர்மையான பாதையில் அழைத்துச் செல்கிறது. சிங்கள, தமிழ் புத்தாண்டும் இவ்வாறான பெறுமதியான விழுமியங்கள் நிறைந்த நிகழ்வாக திகழ்கிறது.

மகத்தான தியாகங்களை செய்த மக்களை மீண்டும் மீண்டும் தியாகம் செய்ய கூறுவதை விட, நடைமுறையில் ஆட்சியாளர்கள் அந்த செயற்பாட்டை முன்னெடுப்பது மிக அவசியமானது என்பதை சுட்டிக்காட்டுவதுடன், இந்த நெருக்கடியான சூழல் முடிவுற்று, வளமான அமைதியான, நல்லிணக்கம் மற்றும் செழிப்பு நிறைந்த நாளைய நாள் பிறந்து, கனவுகள் நனவாக பிரார்த்திக்கின்றேன்.

உங்கள் அனைவருக்கும் வெற்றிகள் நிறைந்த புத்தாண்டு வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன் - என்றுள்ளது.



# வடக்கில் வெள்ளிவரை மழை தொடரும்!

வடக்கு மாகாணத்தின் பல பகுதிகளுக்கும் எதிர்வரும் வெள்ளிக்கிழமை (15) வரையில் பரவலாக மிதமானதுமுதல் கனமானதுவரை மழை கிடைக்க வாய்ப்புள்ளது - என பல்கலைக்கழக புவியியற்துறை மூத்த விரிவுரையாளர் நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.

அது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

மன்னார் வளைகுடா பகுதியில் நிலவும் காற்று சுழற்சி காரணமாக வட மாகாணத்தின் பல பகுதிகளுக்கும் எதிர்வரும் வெள்ளிக்கிழமை (15) வரையில் பரவலாக மிதமானதுமுதல் கனமானதுவரை மழை கிடைக்க வாய்ப்புள்ளது.

குறிப்பாகா யாழ்ப்பாண மாவட்டம் மற்றும் மன்னார் தீவு உட்பட்ட மேற்கு கரையோரப் பகுதிகள் ஏனைய பகுதிகளைவிட சற்று கூடுதலான அளவு மழையைப் பெறுவதற்கான வாய்ப்புகள் உள்ளன.

விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் இதனைக் கருத்திற்கொண்டு செயற்படுவது நன்மை பயக்கும் - என்றார்.

# மட்டு. நகரில் சட்டவிரோதமாக பெற்றோல் வியாபாரத்தில் ஈடுபட்ட 3 வர்த்தகர்கள் கைது

## 30 லீற்றர் பெற்றோல் மீட்பு

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு தலைமையகப் பொலிஸ் பிரிவிலுள்ள கருவப்பங்கேணி ஊறணி பகுதிகளிலுள்ள பலசரக்குக் கடைகளில் சட்டவிரோதமாக பெற்றோல் வியாபாரத்தில் ஈடுபட்ட 3 பேரை 30 லீற்றர் பெற்றோலுடன் நேற்று முன்தினம் (11) கைதுசெய்துள்ளதாக மட்டு. தலைமையகப் பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவல் ஒன்றிற்கமைய குறித்த பகுதியிலுள்ள பலசரக்குக் கடைகளை நேற்று முன்தினம் பொலிஸார் முற்றுகையிட்டனர். இதன்போது சட்டவிரோதமாக பெற்றோல் வியாபாரத்தில் ஈடுபட்ட 3 கடை முதலாளிகளை கைதுசெய்ததுடன், 30 லீற்றர் பெற்றோலை மீட்டுள்ளனர்.

இதில் கைதுசெய்யப்படடவர்களை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# பெற்றோல் பதுக்கி சட்டவிரோதமாக விற்பனைசெய்த நபர் கைது

## 160 லீற்றர் எரிபொருள் பொலிஸாரால் மீட்பு





(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு, காத்தான்குடி பிரதேசத்தில் பலசரக்குக் கடையொன்றில் பெற்றோலை பதுக்கிவைத்து விறபனை செய்துவந்த கடை உரிமையாளர் நேற்று முன்தினம் (11) கைது செய்யப்பட்டுள்ளதுடன், 160 லீற்றர் பெற்றோலும் மீட்கப்பட்டுள்ளதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர். காத்தான்குடி பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கமைய, காத்தான்குடி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி துமிந்த நயனசிறியின் ஆலோசனையின்பேரில் காத்தான்குடி பொலிஸ் நிலையக் குற்றத்தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி வை.விஜயராஜ் தலைமையிலான குழுவினர் சுற்றிவளைப்பொன்றை முன்னெடுத்துள்ளனர்.

இதுதொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

புதிய காத்தான்குடி பரீட் நகர் வீதியிலுள்ள பலசரக்குக் கடையொன்றில் நுகர்வோர்போல் வேடம் தரித்து பொலிஸ் புலனாய்வு உத்தியோகத்தர்கள் இருவர் சென்று அங்கு பெற்றோலை கொள்வனவுசெய்துள்ளனர்.

இதனையடுத்து அங்கு கண்காணிப்பில் ஈடுபட்ட பொலிஸார் குறித்த கடையை முற்றுகையிட்டு சோதனையிட்டனர். இதன்போது அங்கு கலன்களில் பதுக்கிவைக்கப்பட்டிருந்த 160 லீற்றர் பெற்றோலை மீட்டுள்ளதுடன் உரிமையாளரை கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

குறித்த கடையில் சட்டவிரோதமாக பெற்றோலை பதுக்கிவைத்து அதிக விலைக்கு பெற்றோல் விற்பனை செய்யப்பட்டு வந்துள்ளதாகவும் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது

இதில் கைதுசெய்யப்பட்டவரை மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக காத்தான்குடி பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# ரம்பாவ குளத்தில் முதலையிடம் சிக்குண்ட சிறுவன்

(அநுராதபுரம் செய்தியாளர்)

கல்கிரியாகம மானேருவ ரம்பாவ குளத்தில் நீராடிக்கொண்டிருந்த சிறுவனொருவனை முதலை ஒன்று இழுத்துச்சென்றுள்ளதாக கல்கிரியாகம பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் ரம்பாவே குளத்தில் இடம்பெற்றுள்ளதாக விசாரணைகளை மேற்கொண்டுவரும் பொலிஸார் தெரிவித்தனர்.

மானேருவ, நேகம்பகஹா பிரதேசத்தைச் சேர்ந்த 15 வயது சிறுவனொருவரே இவ்வாறு காணாமல்போயுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

சம்பவதினத்தன்று பகல் ரம்பாவ குளத்தில் மூன்று சிறுவர்கள் நீராடிக்கொண்டிருக்கும்போது ஒரு சிறுவனை முதலை இழுத்துச் சென்றுள்ளமை தெரியவந்துள்ளது.

காணாமல்போன சிறுவனை தேடும் பணியில் இலங்கை கடற்படையின் சுழியோடிகளும் பொலிஸாரும் ஈடுபட்டுள்ளனர். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கல்கிரியாகம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# பியங்கர ஜயரத்னவுக்கு பிரதேச அபிவிருத்தி குழுத் தலைவருக்கான நியமனம் வழங்கிவைப்பு



புத்தளம் மாவட்டத்தின் ஆனமடுவ தேர்தல் தொகுதியின் ஆனமடுவ, நவகத்தேகம, பல்லம மற்றும் கருவலகஸ்வெள பிரதேச அபிவிருத்திக் குழுத் தலைவர் பதவிக்கு வெளிநாட்டு தொழில்வாய்ப்பு மேம்பாடு மற்றும் சந்தை பல்வகைப்படுத்தல் இராஜாங்க அமைச்சர் பியங்கர ஜயரத்ன் நியமிக்கப்பட்டுள்ளார்.

அதற்கான நியமனக் கடிதம் பிரதமர் மஹிந்த ராஜபக்‌ஷவினால் இராஜாங்க அமைச்சர் பியங்கர ஜயரத்னவுக்கு நேற்று முன்தினம் (11) அலரி மாளிகையில் வைத்து வழங்கப்பட்டது.

குறித்த சந்தர்ப்பத்தில் கிராமிய மற்றும் பிரதேச குடிநீர் வழங்கல் கருத்திட்டங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் சனத் நிசாந்த, நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பீ.திசாநாயக்க உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

# மூன்று வீடுகளை உடைத்து இரண்டரை பவுண் தங்க ஆபரணங்கள் கொள்ளை

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு, வாழைச்சேனை பொலிஸ் பிரிவிலுள்ள கருவப்பங்கேணி பிரதேசத்தில் பூட்டியிருந்த 3 வீடுகளை உடைத்து அங்கிருந்த இரண்டரை பவுண் தங்க ஆபரணங்களும் 50 ஆயிரம் ரூபா பணமும் திருட்டுப் போன சம்பவமொன்று இடம்பெற்றுள்ளதாக வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த பகுதியிலுள்ள ஒரு வீதியில் அடுத்தடுத்ததாக அமைந்துள்ள 3 வீடுகளின் உறவினர் ஒருவர் உயிரிழந்ததையடுத்து சம்பவதினமான ஞாயிற்றுக்கிழமை வீட்டை பூட்டிவிட்டு அனைவரும் மரணவீட்டிற்கு சென்று நேற்று முன்தினம் (11) திரும்பி வீட்டிற்கு சென்று வீடுகளை திறந்தபோது ஒரு வீட்டின் கூரையையும், அடுத்த வீட்டின் ஜன்னலை அலவாங்கு கொண்டு உடைத்து அடுத்த வீட்டின் முன்கதவை உடைத்து உட்சென்றுள்ளனர்.

அங்கிருந்த இரண்டரை பவுண் தங்க ஆபரணங்களையும் 50 ஆயிரம் ரூபா பணத்தையும் கொள்ளையடித்துச் சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர்.

# தப்போவ நீர்த்தேக்கத்தின் இரு வான்கதவுகள் திறப்பு

தப்போவ நீர்த்தேக்கத்தில் நீர்மட்டம் விரைவாக அதிகரித்துள்ளமையினால் அந்த நீர்த்தேக்கத்தின் வான்கதவுகள் இரண்டு நேற்று (12) காலையிலிருந்து 06 அங்குலத்துக்கு திறக்கப்பட்டுள்ளதாக புத்தளம் வடிகாலமைப்பு காரியாலயம் தெரிவித்துள்ளது.

தொடர்ந்து பெய்துவரும் மழையின் காரணமாக தப்போவ நீர்த்தேக்கத்தின் நீர் மட்டம் விரைவாக கடந்த சில தினங்களில் அதிகரித்துள்ளதாக வடிகாலமைப்பு காரியாலயம் மேலும் குறிப்பிட்டுள்ளது.

இதன் காரணமாக நீர்த்தேக்கத்தின் நீர் மட்டத்தை முறையாக பேணுவதற்காக வான் கதவுகள் இவ்வாறு திறக்கப்பட்டுள்ளன.


# வவுனியாவில் அனுமதியின்றி இரவிரவாக கட்டப்படும் கலாசார மண்டப மதில்கள்

## இளைஞர்கள் விசனம் தெரிவிப்பு

(வவுனியா நிருபர்)

வவுனியா நகரசபைக்குட்பட்ட ஹொரவப் பொத்தானை வீதியில் அமைந்துள்ள இஸ்லாமிய காலசார மண்டபத்தின் சுற்றுமதில் நகரசபையின் அனுமதியின்றி இரவிரவாக அமைக்கப்பட்டு வருவதாக பொதுமக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

வவுனியா நகரசபைக்குட்பட்ட ஹொரவப் பொத்தானை வீதியில் இஸ்லாமிய கலாசார மண்டபம் அமைந்துள்ளது. அது அருகில் இருக்கும் வவுனியா குளத்தின் நீரேந்துப் பகுதிக்கு செல்லும் வாய்க்காலை அண்மித்ததாக அமைந்துள்ளது. குறித்த கலாசார மண்டபத்திற்கான சுற்றுமதில்கள் அப்பகுதியில் கழிவுநீர் வடிந்து செல்லும் வாய்க்கால் ஊடாக அமைக்கப்பட்டு வருகின்றது. குறித்த மதில் கட்டுமான நடவடிக்கைக்கு வவுனியா நகரசபை அனுமதி வழங்காத நிலையில், புனித நோன்புக் காலத்தில் இரவிரவாக குறித்த கட்டுமானப் பணிகள் இடம்பெறுவதாக பொது மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.



வவுனியா மாவட்டத்தில் தமிழ், சிங்களம், முஸ்லிம் என மூவின மக்களும் ஒற்றுமையாக காலம் காலமாக வாழ்ந்து வருகின்றனர். இந்நிலையில், இந்த ஒற்றுமையை சீர்குலைக்கும் வகையில் முறையான அனுமதியின்றி இரவிரவாக ஏனைய சமூக இளைஞர்கள் மத்தியில் விரக்தியை ஏற்படுத்தும் வகையில் நோன்புக் காலத்தில் இஸ்லாமிய கலாசார நிலைய நிர்வாகத்தினர் இவ்வாறு கட்டுமானப் பணிகளை மேற்கொண்டு நடந்து கொள்ளும் முறை குறித்து இளைஞர்கள் அதிருப்தி வெளியிட்டுள்ளதுடன், இதற்கு எதிராக நகரசபை உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும், இவ்வாறான சம்பவங்கள் சமூக ஒற்றுமையை சீர்குலைக்கும் எனவும் தெரிவித்துள்ளனர்.

# நாட்டு மக்கள் எதிர்கொண்டுள்ள பிரச்சினைகள் தீர பிரார்த்திப்போம்

## மேல் மாகாணசபை முன்னாள் உறுப்பினர் ராம் புதுவருட வாழ்த்து

பிறக்கும் தமிழ் புத்தாண்டு மக்கள் எதிர்கொண்டுள்ள பிரச்சினைகள் தீரும் ஆண்டாக அமையவேண்டும் என்று பிரார்த்தித்து வரவேற்போம் என ஐக்கிய மக்கள் சக்தி வடகொழும்பு பிரதான அமைப்பாளரும் மேல் மாகாணசபை முன்னாள் உறுப்பினருமான சீ.வை.பி.ராம் தெரிவித்துள்ளார்.

தமிழ் - சிங்கள புத்தாண்டை முன்னிட்டு அவர் விடுத்திருக்கும் வாழ்த்துச்செய்தியிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

மக்கள் வாழமுடியாத அளவுக்கு பொருளாதார நெருக்கடிக்கு தள்ளப்பட்டுள்ள நிலையில், புத்தாண்டு பிறக்கிறது. பிறக்கும் புத்தாண்டில் மக்கள் எதிர்கொண்டுள்ள பிரச்சினைகள் கஷ்டங்கள் தீரும் ஆண்டாக அமையவேண்டும் என நாங்கள் அனைவரும் பிராத்திக்கவேண்டும். புத்தாண்டை சந்தோஷமாக கொண்டாட முடியாமல் எத்தனையோ பேர் வீடுகளில் முடங்கி இருக்கின்றனர். இவர்களை இனங்கண்டு அவர்களும் புத்தாண்டை சந்தோஷமாக கொண்டாட முடியுமான உதவிகளை செய்யவேண்டும்.

அத்துடன், நாட்டில் ஏற்பட்டிருக்கும் அரசியல் குழப்பங்கள் தீர்ந்து, நல்லாட்சி ஏற்படவேண்டும். ஆட்சியாளர்களின் பிழையான தீர்மானங்கள் காரணமாகவே நாடு இன்று பாரிய பொருளாதார பிரச்சினைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றது. இந்த பிரச்சினையிலிருந்து நாட்டை மீட்க ஆளும் அரசாங்கத்துக்கு முடியாதென்பது அவர்களின் நடவடிக்கைகளிலிருந்து தெளிவாகின்றது. விலைவாசி அதிகரித்து மக்கள் பட்டினியால் வாடுகின்றனர்.

அதனால் இன்று மக்கள் வீதிக்கு இறங்கி இந்த அரசாங்கத்தை பதவி விலகுமாறு கோஷமிட்டு வருகின்றனர்.

எனவே, மக்களின் கோரிக்கைக்கு செவிவாய்த்து அரசாங்கம் பதவி விலகி, நாட்டை நிர்வகிக்க முடியுமான பிரிவினருக்கு இடமளிக்கவேண்டும். யார் ஆட்சிக்கு வந்தாலும் ஊழல் மோசடி இல்லாத ஆட்சி கொண்டுசெல்வதன் மூலமே நாட்டை முன்னேற்றப் பாதைக்கு கொண்டுசெல்லலாம். அவ்வாறானதொரு ஆட்சியை ஏற்படுவதற்கு நாம் அனைவரும் இந்நாளில் பிரார்த்திப்போம் - என்றார்.




தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

2022, ஏப்ரல் 13ஆம் திகதி, புதன்கிழமை

# கொரோனா வைரஸ் தலைதூக்கும் அபாயம்

கொரோனா வைரஸ் தொற்று என்றுமில்லாத அளவுக்கு மீண்டும் தலைதூக்கியுள்ளது. சீனாவில் தினசரி கொரோனா வைரஸ் நோயாளர் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

கொரோனாவின் உருமாற்றம் இன்னும் சில ஆண்டுகளுக்குத் தொடரும் என்று சில மாதங்களுக்கு முன்னரே உலக சுகாதார அமைப்பு எச்சரிக்கை விடுத்திருந்தது. அதை மெய்ப்பிக்கும் வகையில் உலகின் சில நாடுகளில் கொரோனா வைரஸ் மீண்டும் பரவத் தொடங்கியுள்ளது.

சீனாவின் வூஹான் நகரிலுள்ள ஆய்வகத்திலிருந்துதான் 2019ஆம் ஆண்டு இறுதியில் கொரோனா வைரஸ் பரவத் தொடங்கியது என்று அமெரிக்கா உள்ளிட்ட பல நாடுகள் குற்றஞ்சாட்டி வந்தன. உலகம் முழுவதும் கொரோனாவால் கோடிக்கணக்கானோர் பாதிக்கப்பட்டு, இலட்சக்கணக்கானோர் உயிரிழந்தபோதும், கம்யூனிஸ இரும்புத்திரை ஆட்சியால் சீனாவில் என்ன நடக்கிறது என்பது புரியாத புதிராகவே இருந்துவந்தது.

இந்தச் சூழ்நிலையில், சீனாவிலிருந்து இப்போது வெளிவரத் தொடங்கியுள்ள தகவல்கள் அச்சமூட்டுபவையாக உள்ளன. சுமார் 2.5 கோடி மக்கள்தொகை கொண்ட - பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த ஷாங்காய் நகரத்தில் கொரோனா வைரஸ் உருமாற்றமான ஒமிக்ரொன் அதிவேகமாகப் பரவி வருகிறது. ஷாங்காயில் நிலைமை மிகவும் கடுமையானதாக உள்ளது என தீநுண்மி கட்டுப்பாட்டுக் குழுவின் இயக்குநரான கு ஹோங்குய் கூறியிருப்பதிலிருந்தே அதன் தீவிரத்தை உணர்ந்துகொள்ள முடியும்.

ஷாங்காயில் மார்ச் முதலாம் திகதியிலிருந்து இதுவரை சுமார் 90 ஆயிரம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 15 மாகாணங்களிலிருந்து சுமார் 38 ஆயிரம் மருத்துவப் பணியாளர்கள் ஷாங்காய் நகருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர். சுமார் ஒன்றரை இலட்சம் சதுர மீற்றர் பரப்பளவுகொண்ட ஷாங்காய் சர்வதேச வர்த்தக கண்காட்சி மையம் உட்பட 60 இடங்களில் இடைக்கால மருத்துவமனைகள் அமைக்கப்பட்டுள்ளன. 40 ஆயிரம் படுக்கைகள்கொண்ட இடைக்கால மருத்துவமனை ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

ஷாங்காய் நகரத்தின் கிழக்கு, மேற்கு பகுதிகளில் பரிசோதனைகளைத் தீவிரப்படுத்துவதற்காக வெவ்வேறு காலகட்டங்களில் அங்கு 4 நாள் பொது முடக்கம் அமுல்படுத்தப்பட்டுள்ளது. 7 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு கொரோனா பாதிப்பு உறுதிசெய்யப்பட்டால், அவர்கள் பெற்றோரிடமிருந்து பிரிக்கப்பட்டு சிகிச்சை நிலையங்களுக்கு அழைத்துச் செல்லப்படுகின்றனர். இது பெற்றோர்கள் மத்தியில் கடும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

"வீடுகளின் ஜன்னல்களைத் திறக்காதீர்கள். வீட்டை விட்டு வெளியே வர வேண்டும் என்ற ஆசையை சிறிதுகாலம் தள்ளிப்போடுங்கள். வீட்டில் ஒன்றாக அமர்ந்து சாப்பிட வேண்டாம். உறங்கும்போதும் தனித்தனியாக உறங்கவும்'' என்றெல்லாம் அந்நகர சுகாதாரத்துறை அறிவுறுத்தியுள்ளது.

சீனாவில் சில நாட்களுக்கு முன்னர், ஒரே நாளில் 20,472 பேருக்கு கொரோனா உறுதிசெய்யப்பட்டுள்ளது. கடந்த இரண்டரை ஆண்டுகளில் சீனாவின் அதிகபட்ச பதிவு இது. கடந்த மார்ச் மாதம்வரை நாடு முழுவதுமே சில நூறு பேர் மட்டுமே பாதிப்புக்குள்ளாகி வந்த நிலையில், இப்போது தினசரி பாதிப்பு 20 ஆயிரம் பேருக்கு மேல் பதிவாவது கடும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

சீனாவில் மட்டுமல்ல, பிரிட்டனிலும் கொரோனா வைரஸ் பரவும் வேகம் கவலையளிப்பதாக உள்ளது. கடந்த மார்ச் 26ஆம் திகதியுடன் முடிவடைந்த வாரத்தில் புதிதாக 49 இலட்சம் பேருக்கும், அதற்கு முந்தைய வாரத்தில் 43 இலட்சம் பேருக்கும் கொரோனா உறுதிசெய்யப்பட்டது. இதுவரை இல்லாத அதிகபட்ச பாதிப்பு இது. பிரிட்டனில் பாதிப்பு அதிகமாவது மட்டுமல்லாமல், மருத்துவமனைகளில் சேர்க்கப்படுவோர் எண்ணிக்கையும், உயிரிழந்தவர்களின் எண்ணிக்கையும் கூட கணிசமாக அதிகரித்துள்ளது.

ஜேர்மனியில் 75 சதவீதம் பேர் தடுப்பூசி செலுத்திக்கொண்டுள்ளனர். 58 சதவீதம் பேர் பூஸ்டர் தடுப்பூசியும் செலுத்திக்கொண்டுள்ளனர். இருப்பினும், அங்கும் பாதிக்கப்படுவோர் எண்ணிக்கை அண்மைக்காலமாக அதிகரித்தே வருகிறது. இலங்கையை பொறுத்தவரை கொரோனா பாதிப்பு எண்ணிக்கை குறைந்து வருவதால் கட்டுப்பாடுகள் பெருமளவில் தளர்த்தப்பட்டுள்ளன.

நாடு முழுவதும் தொடக்கத்தில் தடுப்பூசி செலுத்தும் பணிகள் மந்தமாக இருந்தாலும், அதன்பின்னர் வேகம் எடுத்தது. இப்போது, தடுப்பூசி குறித்து அலட்சிய மனப்பான்மை வந்துவிட்டதோ என்ற கவலை ஏற்பட்டுள்ளது. தடுப்பூசி மூன்றாம் தவணை போடுவது அவசியமானது என்பதை எவரும் மறந்துவிடக் கூடாது.

கொரோனாவின் முதல் அலை ஓய்ந்த பின்னர், இனி கொரோனா இல்லை என்று கருதியதால்தான் இரண்டாவது அலையில் ஏராளமான உயிரிழப்புகளை எதிர்கொள்ளவேண்டியேற்பட்டதாக மருத்துவ நிபுணர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். கணிசமான அளவினருக்கு தடுப்பூசி செலுத்தப்பட்டுவிட்டாலும், தடுப்பூசி என்பது நோய்த்தொற்று காரணமாக உயிரிழப்பைத் தடுக்குமே தவிர, நோய்த்தொற்றால் பாதிக்கப்படுவதைத் தடுக்காது என்றும் அவர்கள் கூறுகின்றனர். அப்படி பாதிக்கப்பட்டால், அதிலிருந்து மீள பல மாதங்கள்வரை ஆகலாம். கொவிட்-19 பாதிப்புக்குப் பின்னர், சிறுநீரகம், கல்லீரல் செயலிழப்பு அதிகரிப்பதாக எச்சரிக்கப்பட்டுள்ளதையும் கவனத்திற்கொள்ள வேண்டும்.

கண்ணுக்குத் தெரியாத கொரோனா வைரஸ், புதிய புதிய உருமாற்றங்களுடன் வீரியம் பெறக்கூடியது என்பதை நினைவில் நிறுத்தி எச்சரிக்கை உணர்வுடன் மக்கள் இருப்பதுதான் நோய்த்தொற்றை எதிர்கொள்ள ஒரேவழி. ஏற்கனவே பொருளாதார, அரசியல் நெருக்கடிகளால் சிக்கியுள்ள மக்கள் இப்போது மிகவும் கவனமாக செயற்படவேண்டியது கட்டாயம்.

# உக்ரைன் - ரஷ்யப் போர்:



# விவசாயத் துறையின் பாதிப்புகள்

சங்கக் காலந்தொட்டே போருக்கும் விவசாயத்துக்கும் நெருங்கிய தொடர்புண்டு. விவசாயத்தின் அடிநாதமாக விளங்கும் ஆநிரைகளைக் கவர்தல் (கால்நடை கவர்தல்) என்பது போரின் தொடக்கம் என்கிறார் தொல்காப்பியர்.

மேலும், ஆநிரை கவர்வோர் வெட்சிப் பூ சூடிக்கொள்வார்கள் என்றும், ஆநிரைகளை மீட்போர் கரந்தைப் பூ அணிந்து போரிடுவார்கள் என்றும் கூறுகிறார். கலிங்கத்துப் போரில் அசோகர் ஒன்றரை இலட்சம் போர் வீரர்களை அடிமையாகக் கொண்டுவந்து, தரிசு நிலங்களில் விவசாயம் செய்வதற்காக அவர்களைக் குடியேற்றம் செய்ய வைத்ததாக வரலாற்று ஆய்வாளர் ரொமீலா தாப்பர் குறிப்பிடுகின்றார். புறநானூற்றில் பாண்டியன் நன்மாறனைப் பற்றி காரிக்கண்ணனார் பாடும்போது, "நீ மற்றொருவரின் நாட்டைக் கைப்பற்றும்போது, உன் நாட்டின் இளையவர்கள் அவர் நாட்டுக் கழனிகளைக் கவர வேண்டும்'' என்கிறார்.

புறநானூற்றில் வெள்ளைக்குடி நாகனார் ஒருபடி மேலே போய் அரசர் கிள்ளிவளவனிடம், "போர் தங்குதடையின்றி நடைபெற வேண்டும் என்றால், விவசாயிகளைப் பாதுகாக்க வேண்டும். நீர்நிலைகளைப் பெருக்கி, விவசாயத்தை ஊக்குவித்தால் மட்டுமே போரில் வெற்றிபெற முடியும். மேலும் அரசே, தங்களின் வெற்றி என்பது உழவர்களின் உழவுப் படையால் (அதாவது, பகைவர்களைத் தாங்கள் எதிர்த்துப் போரிட்டுப் பெறும் வெற்றி, விவசாயிகளின் கலப்பை நிலத்தில் ஊன்றி உழுவதால் விளைந்த நெல்லின் பயனே ஆகும்) விளைந்த ஒன்றாகும். எனவே, அவர்களைக் காக்கும் தலையாய பொறுப்பு தங்களுக்கு உண்டு'' என்று அறிவுறுத்துகிறார்.

பின்னாளில் அதுவே ஐரோப்பா மற்றும் சோவியத் ஒன்றியத்துக்கும் இடையே நடந்த போரானது, ஐரோப்பாவை விவசாயிகளை நோக்கிக் கொள்கை வகுக்கும் வகையில் வழிவகை செய்தது. ஆம், ஐரோப்பியப் பொருளாதாரச் சமூகம் போர் நடக்கும் சமயத்தில், ஐரோப்பாவைத் தனது எதிரியான சோவியத் ஒன்றியத்தைவிட, உணவு உற்பத்தியில் தன்னிறைவு அடையச்செய்வதற்காக விவசாயிகளுக்கு உலகளவில் இல்லாத விலை உயர்வை வாரி வழங்கியது. இதன் விளைவாக வெண்ணெய், பால், இறைச்சி, ஒயின் உற்பத்தி மிகுதியாகி, விற்க முடியாமல் போனது. இறுதியாக, வேறுவழியின்றி ஐரோப்பா வலியச் சென்று, எதிரி என்றும் பாராமல் சோவியத் ஒன்றியத்திடம் வந்த விலைக்கு விற்கும் நிலைக்குத் தள்ளப்பட்டது. தவற்றை உணர்ந்த ஐரோப்பா ஒரு முடிவுக்கு வந்தது. அதாவது, விவசாயப் பயிர்களுக்கு மானியம் தருவதைவிட, விவசாயிகளுக்கு நேரடியாகத் தரலாம் என்றும், இறுதியில் அதுவே உற்பத்தியாகும் உபரியைக் குறைத்து, விநியோகத்தையும் தேவையையும் கட்டுக்கோப்பாக்கி விவசாயிகளுக்கு நல்லதொரு விடியலைத் தரும் என்றும் உணர்ந்தது.

இப்படி, போருக்கும் விவசாயத்துக்கும் நெடுங்காலமாக நெருங்கிய தொடர்புண்டு என்பது இதன் மூலம் புலப்படுகிறது. அதே தொடர்பைத் தற்போது நடைபெற்றுவரும் உக்ரைன் - ரஷ்யப் போரோடு தொடர்புபடுத்தலாம். அதற்கு முன் போர் என்பது 'வெளிநாட்டுக் கொள்ளை' என்று கூறிய கார்ல் மார்க்ஸின் கூற்றையும் நாம் இங்கு நினைவுபடுத்திக்கொள்ள வேண்டும். ஏனென்றால், தற்போது இரு நாடுகளுக்கு இடையே நடைபெற்றுவரும் போர் என்பது, நேரடிக் கொள்ளை இல்லை என்றாலும் கொள்கைரீதியாக யார் யாருடன் சேர வேண்டும் என்பதில் தொடங்கி, வளங்களை அழிக்கும் கொள்ளையாக உருமாறிவருகிறது.

இரு நாடுகளும் தங்களிடையே பல வளங்களை உள்ளடக்கியுள்ளன. பிரதானமாக, வேளாண்மையை எடுத்துக்கொண்டால், இரு நாடுகளுமே பயிர்ச் சாகுபடியிலும் உற்பத்தியிலும் பெரும் பங்கு வகிக்கின்றன. உக்ரைனை எடுத்துக்கொண்டால் நல்ல கரிம வளம் கொண்ட மண்ணில் சூரியகாந்தி, மக்காச்சோளம், கோதுமை, பார்லி போன்றவை அதிகளவு சாகுபடி செய்யப்படுகின்றன. குறிப்பாக, சூரியகாந்தி எண்ணெய் உற்பத்தியில் உலகளவில் உக்ரைன் முதலிடம் வகிக்கிறது. அதனால்தானோ என்னவோ சில நாட்களுக்கு முன்பு உக்ரைன் பெண்மணி ஒருவர், அங்கு போரிட்டுவரும் ரஷ்ய இராணுவ வீரரிடம், "உங்களின் பாக்கெட்டுகளில் இந்த சூரியகாந்தி விதைகளை வைத்துக்கொள்ளுங்கள். ஒருவேளை நீங்கள் இறக்க நேரிட்டால், இந்த விதைகள் செடிகளாக உக்ரைன் மண்ணில் வளரும்" என்று பேசிய ஒரு காணொளி இணையத்தில் வைரலாக வலம்வந்தது. மேலும், ஐரோப்பாவின் 'பிரெட் பாஸ்கட்' என்றும் உக்ரைன் அழைக்கப்படுகிறது.

ரஷ்யா உலகளவில் 20 வீத கோதுமைத் தேவையைப் பூர்த்திசெய்துவருகிறது. மேலும், நைட்ரஜன், பொட்டாசியம், பாஸ்பரஸ் உரங்கள் பெருமளவில் ரஷ்யாவிலிருந்துதான் ஏனைய நாடுகளுக்கு ஏற்றுமதிசெய்யப்படுகின்றன.

போர் காரணமாக உரங்களுக்கும் சில உணவு தானியப் பொருட்களுக்கும் தட்டுப்பாடு ஏற்படும் அபாயம் எழுந்துள்ளது. எகிப்து, துருக்கி, நைஜீரியா, சில ஆபிரிக்க நாடுகளின் கோதுமைத் தேவையை இவ்விரு நாடுகளே பூர்த்திசெய்துவருகின்றன. இந்தியாவை எடுத்துக்கொண்டால், 90 வீத சூரியகாந்தி எண்ணெய்த் தேவையை இவ்விரு நாடுகளே நிறைவுசெய்கின்றன. தற்போது சந்தையில் அதன் விலையும் அதிகரிக்க ஆரம்பித்துள்ளது.

உக்ரைனில் தற்போது குளிர்காலத்துக்கேற்ப பயிர் செய்யப்பட்டுள்ள 20 வீதம் முதல் 30 வீத அளவிலான பயிர்கள் போரின் காரணமாக அறுவடை செய்யப்படாமல் அப்படியே நிலத்தில் உள்ளன. இது அங்குள்ள விவசாயிகளைப் பெருமளவில் பாதித்துள்ளதுடன், அவர்களை நம்பியிருக்கும் பிற நாட்டினரையும் பாதித்துள்ளது.

எனவே, போரும் ஏரும் ஒன்றோடு ஒன்றாகப் பின்னிப் பிணைந்து ஏற்படுத்தும் தாக்கம் என்பது சர்வதேசத்தையும் சர்வ வல்லமையுடன் பாதிக்கும் தன்மை வாய்ந்ததாகும்.

**- செ.சரத்,**
**விவசாய ஆராய்ச்சியாளர்,**
**நன்றி - இந்து**

## தவக்கால சிந்தனை




தானும் தான் வாழும் சமூகமும் அழிவதற்குக் காரணம் சுயநலம். எனக்கு என்ன இலாபம். எனக்கு என்ன தருவார்கள். நானும் என்னுடையவர்கள் மட்டுமே வாழ வேண்டும், வளர வேண்டும். இந்தச் சுயநலத்திற்குச் அறுசுவை சேர்ப்பதாக அமைந்துவிடுகிறது பணம் அதோடு சேரும்போது. பணமும் சுயநலமும் எந்த பழி பாவத்திற்கும் தயாராகிறது.

பணத்திற்காக, சுயநலத்திற்காக, பெற்ற தாயை, வளர்த்து உருவாக்கிய தகப்பனை, உறுதுணையாய் இருக்கும் உடன்பிறப்பை ஒதுக்க ஒடுக்க ஒழிக்க மிகச் சாதாரணமாக முன்வரும் மகன்கள் இல்லையா! பணத்திற்காக பதவிக்காக பாதுகாப்பிற்காக அடுத்தவனை விலைபேசி தான் விலைபோகும் எட்டப்பன்கள் இல்லையா!

காட்டிக்கொடுத்தவன் வாழ்ந்ததாக வரலாறு இல்லை. சுயநலவாதி சுயம் கண்டதாகச் சான்று இல்லை. பணத்திற்காக பண்பை, பண்பாட்டை, பாசத்தை பரிதவிக்கவிட்டவன் பாராண்டதாக பாரம்பரியம் இல்லை. கூட இருந்து குழி பறிக்கும் குள்ள நரிகள் கோட்டைகட்டிய கதை இல்லை.முதுகில் குத்தியதால் முகவரிபெற்றவர் இல்லை. சந்தர்ப்பவாதிகள் சரித்திரம் படைத்தற்கான அறிகுறிகளே இல்லை. ஆனால் காட்டிக்கொடுத்தவன் காட்டிக்கொடுக்கப்பட்டான்,

# தலையணை இல்லாமல் தூங்கினால்...

**- அமுதா திருமேனி கோபாலர்-**



தலையணை இல்லாமல் தூங்குபவர்களை விரல் விட்டு எண்ணிவிடலாம். ஏனென்றால், இங்கு தலையணை வைத்து தூங்குவதை நம் மரபாகவே நாம் பயன்படுத்தி வருகிறோம். இன்னும் சிலர் தலைக்கே இரண்டு தலையணை வைத்து தூங்கும் பழக்கத்தை வைத்திருப்பார்கள்.

இன்னும் சிலர் காலுக்கு ஒரு தலையணை, பக்கத்தில் கட்டிப்பிடித்து படுக்க தலையணை என விதம் விதமாக தூங்குவதற்கு தலையணை வைத்திருப்பார்கள். இப்படியான தலையணையே இல்லாமல் தூங்குவதில் நமக்கு எவ்வளவு ஆரோக்கியம் கிடைக்கும் என தெரிந்துகொள்ளுங்கள்.

தலையணை இல்லாமல் தூங்குபவர்களுக்கு தண்டுவடம் அதன் இயல்பான நிலையில் இலகுவாக இருக்குமாம். இதனால் உடல்வலி, தண்டுவட பிரச்சினை துளிகூட ஏற்படாதாம்.

உயரமான தலையணை பயன்படுத்தும்போது படுக்கை நிலை குலைந்துபோகும்.

இதனால், தண்டுவடம் பாதிக்கும். தலையணை இல்லாமல் தூங்கினால் தோள்பட்டை, கழுத்து வலியும் கூட வராது.

தலையணை இல்லாமல் தூங்கினால், உடலின் எலும்புகளை சீராக்க முடியும்.

தலையணை இல்லாமல் தூங்குபவர்களுக்கு முகச்சுருக்கம் ஏற்படாது.

தலையணை இல்லாமல் தூங்கும்போது, சிலர் நேராக படுத்து தூங்குவார்கள். அவர்களுக்கு மெல்லிய தலையணையே சிறந்தது.

இது கழுத்து, தலை, தோள்பட்டை பிரச்சினைகளிலிருந்து பாதுகாக்கும். சிலர் சாய்த்து அதாவது ஒருபக்கமாக படுப்பதை வழக்கமாக வைத்திருப்பார்கள்.

இவர்களுக்கு அடர்த்தியான தலையணை வைத்து படுத்தால் தோள்பட்டை, காதுக்கு இடையே சமநிலையை ஏற்படுத்துமாம்.

குப்புறப்படுத்து தூங்குபவர்களுக்கு தட்டையான தலையணையே நல்லது. இது நம் தலையில் நிலையை அசௌகரியமாக உணராமல் இருக்க உதவி செய்வதோடு, முதுகு, இடுப்பு வலியையும் விரட்டியடிக்கிறது.

ஆனால், தலையணை இல்லாது தூங்கினால் நாம் நோய்களை விரட்டி விட முடியும். சிலருக்கு மருத்துவர்கள் தலையணை வைத்து தூங்க பரிந்துரைத்திருப்பார்கள். அவர்கள் மட்டும் தலையணை வைத்து தூங்கலாம் தலையணை இல்லாத தூக்கம் உடலில் நிகழ்த்தும் மாற்றம். இதுதான் நிஜ தலையணை மந்திரம்!

இப்படியான தலையணையே இல்லாமல் தூங்குவதில்தான் நம் ஆரோக்கியமே இருக்கிறது.

தலையணை இல்லாமல் நீங்கள் தூங்கினால் உடல் இயற்கையான நிலையில் இருக்கும்.. இதனால் நமது கழுத்து, முதுகு வலி ஏற்படாது. இதுமட்டுமல்ல, தலையணை இல்லாமல் தூங்கினால், மன அழுத்தமும் குறைவதால், நல்ல உறக்கம் கிடைக்கிறது.

தூக்க பிரச்சினை ஏற்படும்போது முதலில் உங்கள் தலையணையில் கவனம் செலுத்துங்கள்!

## நக்கல் நமசிவாயம்

**இலங்கை வரலாறில மறக்க முடியாத சித்திரைப் புதுவருசம் தான் இது பாருங்கோ...**



## இன்றைய நாளில்...

- ★ 1930 – மகாத்மா காந்தியின் உப்புச் சத்தியாக்கிரகத்திற்கு ஆதரவாக தென்னிந்தியாவில் ராஜாஜி தலைமையில் பாத யாத்திரை (வேதாரண்யம் உப்புச் சத்தியாக்கிரகம்) தொடங்கப்பட்டது.
- ★ 1953 – இயன் பிளெமிங் தனது முதலாவது ஜேம்ஸ் பொண்ட் புதினத்தை வெளியிட்டார்.
- ★ 1954 – காமராசர் சென்னை மாநிலத்தின் முதல்வரானார்.
- ★ 1960 – ஐக்கிய அமெரிக்கா டிரான்சிட் 1-பி என்ற உலகின் முதலாவது செய்மதி இடஞ்சுட்டல் தொகுதியை விண்ணுக்கு ஏவியது.
- ★ 1970 – நிலா நோக்கிச் சென்று கொண்டிருந்த அப்பல்லோ 13 விண்கலத்தில் ஒக்சிசன் தாங்கி வெடித்து பெரும் சேதம் ஏற்பட்டது.
- ★ 1979 – இலங்கையில் சுயாதீன (ஐ.ரி.என்.) தொலைக்காட்சி சேவை ஆரம்பிக்கப்பட்டது.

# புத்தாண்டை முன்னிட்டு கைதிகளைப் பார்வையிட உறவினர்களுக்கு ஐந்து நாட்களுக்கு விசேட அனுமதி

**விதிமுறைகளை பின்பற்றி செயற்படுமாறும் வலியுறுத்து**

தமிழ், சிங்களப் புத்தாண்டை முன்னிட்டு நேற்றிலிருந்து (12) எதிர்வரும் 16ஆம் திகதி வரையான காலப்பகுதியில் கைதிகளை உறவினர்கள் சந்திப்பதற்கு விசேட அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலை தலைமையகம் தெரிவித்துள்ளது.

இந்த பண்டிகை காலத்தில் ஒரு கைதியை பார்வையிடுவதற்காக உறவினர்கள் மூவருக்கு மாத்திரமே அனுமதி வழங்கப்பட்டுள்ளதுடன், உறவினர்களினால் வீடுகளிலிருந்து கொண்டுவரப்படும் உணவுப் பொதிகள் மற்றும் இனிப்புப் பண்டங்கள் மாத்திரம் கைதிகளுக்கு பெற்றுக்கொடுக்க அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் சிறைச்சாலை ஊடகப் பேச்சாரும் நிர்வாக மற்றும் புனரமைப்பு ஆணையாளருமான சந்த ஏக்கநாயக்க தெரிவித்துள்ளார்.

சுகாதார வழிமுறைகளை பின்பற்றி இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

கைதியின் உறவினர் அல்லது அவரினால் பெயர் குறிப்பிடப்படும் நபரொருவருக்கு, சந்தேகநபருக்கு ஒரு மாதத்துக்காக வைப்பிலிடப்படும் 2000 ரூபா மேலதிகமாக, இந்த பண்டிகை காலத்தில் 1000 ரூபா பணத்தை சிறைச்சாலை உணவகத்தில் வைப்பிலிடுமாறும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அவ்வாறு வைப்பிலிடப்படும் நிதியில் பால் மா, சீனி, இனிப்புப் பண்டங்கள் உள்ளிட்ட சுகாதார பாதுகாப்புப் பொருட்கள் ஒருவருக்கு தேவையானளவு பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. வழங்கப்பட்டுள்ள விதிமுறைகளை பின்பற்றி செயற்படுமாறு அவர் கோரியுள்ளார்.

## அரபிகா கோப்பியின் சந்தைப்படுத்தலை ஊக்குவிக்க ஜோர்தானிலுள்ள இலங்கைத் தூதரகம் ஏற்பாடு



இலங்கை அரபிகா கோப்பியை அறிமுகப்படுத்தி பிரபலப்படுத்துவதற்காக, ஜோர்தானில் உள்ள இலங்கைத் தூதரகம், ஜோர்தானிய கோப்பி இறக்குமதியாளர்கள் மற்றும் கோப்பிக் கடை உரிமையாளர்களுக்காக, 2022 மார்ச் 23ஆம் திகதி, இலங்கை அரபிகா கோப்பி ருசிக்கும் பட்டறையை ஏற்பாடு செய்தது. இந்த செயலமர்வில் கியோட்டா கோப்பி நிறுவனம், ஹிண்ட் நுவரெலியா மற்றும் டி.எஃப்.சி. ரோஸ்டர்ஸ் ஆகிய மூன்று இலங்கை ஏற்றுமதியாளர்களால் அரபிகா மற்றும் ரொபஸ்டா பீன்ஸ் மற்றும் அரபிகா கோப்பித் தூள் காட்சிப்படுத்தப்பட்டது.

ஜோர்தானுக்கான இலங்கைத் தூதுவர் ஷானிகா திசாநாயக்க, இலங்கையில் நிலையான முறையில் வளர்க்கப்படும் அரபிகா கோப்பி மற்றும் ரொபஸ்டா கோப்பி ஆகிய இரண்டும் பயிரிடப்படும் பகுதிகள் குறித்து விரிவான விளக்கமளித்தார். பல ஜோர்தானியர்கள் கோப்பி பிரியர்களாக இருப்பதால் இலங்கைக்கும் ஜோர்தானுக்கும் இடையிலான பொருளாதார மற்றும் கலாசாரப் பாலமாக இலங்கைக் கோப்பி மாறுவதை தான் எதிர்பார்த்துக் காத்திருப்பதாக தூதுவர் குறிப்பிட்டார். தூதரகத்தால் பணியமர்த்தப்பட்ட பரிஸ்டா மூலம் உணர்ச்சி அனுபவத்திற்கான நேரடி விளக்கக்காட்சி மற்றும் ருசித்தல் அமர்வு ஆகியவற்றுடன் விளக்கக்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டது.

இறக்குமதியாளர்கள் வறுத்த மற்றும் வறுக்கப்படாத விசேட கோப்பிகளை மாதிரி செய்து, காட்சிக்கு வைக்கப்பட்டிருந்த கோப்பிக் கொட்டைகளை சுவைக்க முடிந்தது.

உயர்தர அரேபிகா கோப்பிக் கொட்டைகளை ஏற்றுமதி செய்யும் நாடாக இலங்கையை முன்னிலைப்படுத்துவதற்காக மட்டுமன்றி, இலங்கைக் கோப்பி ஏற்றுமதியாளர்கள் பயன்படுத்தும் பெறுமதி சேர்க்கப்பட்ட பொதிகளை காட்சிப்படுத்துவதற்காகவும் இந்நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன், அவற்றில் சில வால்வுடன் கூடிய கோப்பிக் பை மற்றும் ஒட்சிசன் மற்றும் ஈரப்பதத்தைத் தக்கவைக்கும் படலம் கொண்ட பொதியிடல் மற்றும் நறுமணத் தடுப்புக் குப்பி ஆகியவற்றை உள்ளடக்கியிருந்தன.

ஸ்ரீ லංකා මහ බැංකුව இலங்கை மத்திய வங்கி CENTRAL BANK OF SRI LANKA

**12.04.2022 நாணய மாற்று வீதம்**

| நாணயம் | கொள்வனவு வீதம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 124 8618 | 135 7558 |
| கனேடியன் டொலர் | 141 0678 | 151 6670 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 38 8552 | 41 0803 |
| யூரோ | 24 421 | 250 7246 |
| ஜப்பான் யென் | 1 4382 | 1 5424 |
| சிங்கப்பூர் டொலர் | 123 5287 | 132 0555 |
| ஸ்ரேலிங் பவுன் | 305 1831 | 320 1612 |
| சுவிஸ் பிரான்ங் | 232 084 | 245 41 4 |
| ஐ.அ.டொலர் | 208 1 4 | 218 8864 |

| நாடு | நாணயம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 720 8276 |
| குவைட் | குவைட் தினார் | 0 17 4838 |
| ஓமான் | ஓமான் றியால் | 703 6056 |
| கட்டார் | கட்டார் றியால் | 74 617 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 72 5320 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 74 2866 |

## லண்டனில் சாரல்நாடனின் நாவல் வெளியீடும் பேராசிரியர் சந்திரசேகரம் அஞ்சலியும்





லண்டனில் எதிர்வரும் 16 ஆம் திகதி சனிக்கிழமை மாலை சாரல்நாடனின் “வானம் சிவந்த நாட்கள்” நாவல் வெளியீடும், மறைந்த பேராசிரியர் சோ.சந்திரசேகரம் அஞ்சலி உரையும் நடைபெறவிருக்கின்றன.

மீனாள் நித்தியானந்தனின் தலைமையில் நடைபெறும் முதல் வெளியீட்டு அமர்வில் இடம்பெறும் சாரல்நாடனின் நாவல் வெளியீட்டு நிகழ்ச்சியில் செல்வி.சி.பாரதி, கோகுலரூபன், நாகலிங்கம் சிறிசபேசன் ஆகியோர் உரையாற்றுகின்றனர்.

நவஜோதி யோகரட்னம் தலைமையில் நடைபெறும் இரண்டாவது அமர்வில் பேராசிரியர் செ.வே.காசிநாதனின் விற்கன்ஸ்ரைன் மொழி, அர்த்தம், மனம் என்ற நூலின் வெளியீட்டு நிகழ்வில் தோழர் வேலு, உமையாள், ராகவன் ஆகியோர் உரையாற்றுகின்றனர்.

மறைந்த பேராசிரியர் சோ.சந்திரசேகரத்தின் அஞ்சலி உரையினை விமர்சகர் மு.நித்தியானந்தன் ஆற்றுகின்றார்.

## கலன்களில் எரிபொருள் பெற நீண்ட வரிசை

(ஜூட் சமந்த)

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியின் காரணமாக 12,13 மற்றும் 14 ஆம் திகதிகளில் கேன் மற்றும் பீப்பாய்களுக்கு எரிபொருள் பெற்றுக்கொடுக்கப்படமாட்டாது என எரிபொருள் கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது.

இருந்தபோதிலும், சிலாபம் மற்றும் அதனை அண்மித்த எரிபொருள் நிரப்பு நிலையங்களில் கேன் மற்றும் பீப்பாய்களுக்கு எரிபொருள் பெற்றுக்கொடுக்கப்பட்டதை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.



சிலாபம் பிரதேசத்திலுள்ள ஒரு எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு முன்பாக எரிபொருள் பெற்றுக்கொள்வதற்காக நுகர்வோரால் பிளாஸ்டிக் கேன் வரிசையாக வைக்கப்பட்டிருந்ததை அவதானிக்க கூடியதாக இருந்தது.

## வயோதிபத் தம்பதியினர் வெட்டிக் கொலை



பல்லேபெத்த கொஸ்வெட்டிய கிரதுர பிரதேசத்தில் வாழ்ந்து வந்த வயோதிபத் தம்பதியினர் வெட்டிக் கொலை செய்யப்பட்ட நிலையில், நேற்று (12) மீட்கப்பட்டுள்ளதாக கொடகவெல பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

75 வயதுடைய தயானந்த என்பவரும் 70 வயதுடைய ஹேமலாத என்பவருமே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

இவர்கள் ஐந்து பிள்ளைகளின் பெற்றோர் என்பது விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இனந்தெரியாத நபர்கள் வீட்டுக்குள் புகுந்து இவர்கள் கொலைசெய்யப்பட்டுள்ளதாகவும், குறித்த வயோதிபப் பெண்ணின் சடலம் வீட்டின் பின்னாலும், குறித்த நபரின் சடலம் வீட்டினுள்ளும் இருந்த நிலையில் மீட்கப்பட்டதாகவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இவர்களின் மகன்மார் இருவர் வீட்டுடன் இணைந்தவகையில் உள்ள காணிகளில் வாழ்ந்து வருவதாகவும், ஒரு மகன் அன்றைதினம் தாயை வார சந்தைக்கு அழைத்துச் செல்ல வீட்டுக்குச் சென்றபோது இருவரும் இவ்வாறு சடலமாக இருந்ததை அவர் அவதானித்துள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.


இந்தக் கொலைச் சம்பவத்துக்கான காரணம் இதுவரையில் உறுதிப்படுத்தப்படவில்லை எனவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கொடகவெல பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.



# அரசுக்கு எதிராக சமூக ஊடகங்களை பயன்படுத்தவேண்டாமென எச்சரிக்கை

## உள்நாட்டலுவல்கள் அமைச்சு அறிவுறுத்தல்




சமூக வலைத்தளங்களைப் பயன்படுத்தி அரசாங்கம் மற்றும் அரசாங்கத்தின் கொள்கைகளை விமர்சிக்க வேண்டாம் என அரச ஊழியர்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

உள்நாட்டலுவல்கள் அமைச்சின் மேலதிக செயலாளர் சந்தன தென்னகோன் கடிதமொன்றை வெளியிட்டு இந்த விடயத்தை குறிப்பிடப்பட்டுள்ளார்.

அரச சேவையை அவதூறு செய்யும் வகையிலும், அரசின் கொள்கைகளை விமர்சிக்கவும் சமூக ஊடகங்களைப் பயன்படுத்த வேண்டாம் என கண்டி மாவட்ட செயலகத்தின் கடிதத் தலைப்பில் அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.ஆர்.ஜெயசிங்கவிற்கு "எச்சரிக்கை விடுத்தல்" எனும் தலைப்பில் கடிதமொன்றை அவர் அனுப்பிவைத்துள்ளார்.

எதிர்காலத்தில் இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபட்டால், அது ஸ்தாபன விதிக்கோவையின் XLVII அத்தியாயத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும் என அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.ஆர்.ஜெயசிங்கவினால் பேஸ்புக் பக்கத்தில் அரசாங்கத்திற்கு எதிராக வெளியிடப்பட்ட கருத்தையடுத்தே இந்த எச்சரிக்கை கடிதம் வெளியிடப்பட்டுள்ளது.

# பேருவளையில் கல்வி மறுமலர்ச்சியை ஏற்படுத்த நழ்ரி ஆற்றிய பணிகள் காலத்தால் அழியாதவை

*(பேருவளை நிருபர்)*

தர்காநகரிலும் பேருவளை பகுதியிலும் கல்வி மறுமலர்ச்சியை ஏற்படுத்த மறைந்த எம்.எவ்.எம். நழ்ரி அதிபர் மேற்கொண்ட பணிகள் காலத்தால் அழியாதவை என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.எம். அஸ்லம் ஹாஜியார் தெரிவித்துள்ளார்.

தர்காநகரின் கல்விமான் பிரபல சமூக சேவையாளர் எம்.எவ்.எம்.நழ்ரியின் மறைவு குறித்து முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.எம்.அஸ்லம் ஹாஜியார் அனுதாப செய்தியொன்றை வெளியிட்டுள்ளார்.

அவர் தனது செய்தியில் மேலும் கூறியுள்ளதாவது,

தர்காநகரிலும் பேருவளை பகுதியிலும் கல்வி மறுமலர்ச்சியை ஏற்படுத்த மறைந்த எம்.எவ்.எம். நழ்ரி அதிபர் மேற்கொண்ட பணிகள் காலத்தால் அழியாதவை.

ஓர் ஆசானுக்கு இருக்கவேண்டிய நற்பண்பும், பொறுமையும், சமூக உணர்வும் மர்ஹும் அதிபர் நழ்ரியிடம் சிறந்து காணப்பட்டது. தேசிய மட்டத்தில் புகழ்பெற்ற தர்காநகர் அல்-ஹம்ரா மகா வித்தியாலயத்தின் அதிபராக பதவி வகித்து அப்பாடசாலையை கல்வி, விளையாட்டு உட்பட ஏனைய துறைகளில் கட்டியெழுப்ப இரவு பகல் பாராது பணிபுரிந்தார். பாடசாலையை முன்னேற்றுவதற்காக பிரதேச அரசியல் வாதிகள், கல்வி அதிகாரிகள், பரோபகாரிகளை அணுகி அவர்கள் மூலமாக பல தேவைகளை பாடசாலைக்கு பெற்றுக்கொடுத்தார்.

தர்காநகர் கல்வித்துறையில் உன்னத இடத்தை வகிக்க வேண்டும் என்ற பேரவாவுடன் அவர் தனது பணியை மேற்கொண்டார். அதைபோன்றே மாளிகாஹேனை ஸேம் ரிபாய் ஹாஜியார் தேசிய பாடசாலையையும் சிறந்தொரு நிலைக்கு கொண்டுவந்து தமது ஆளுமையை வெளிக்காட்டினார்.

களுத்துறை மாவட்ட அகதிய்யா சம்மேளனத்தில் உயர் பதவி வகித்த இவர் அஹதிய்யா மாணவர்களின் ஆன்மீக கல்வி வளர்ச்சிக்காகவும் பாரிய சேவைகளை செய்தார். அத்தோடு களுத்துறை மாவட்ட ஜனாஸா சேவை சங்கத்திலும் உயர் பதவி வகித்து ஆற்றிய சேவைகள் உன்னதமானவை.

# புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி!







*(உடப்பு நிருபர்)*

புத்தளம் தெற்குக் கல்விக் கோட்டத்திற்குட்பட்ட புளிச்சாக்குளம் உமர் பாரூக் மகா வித்தியாலயத்திலிருந்து 5ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுள் 3 மாணவிகள் சித்தியடைந்து பாடசாலைக்கும், பாடசாலை சமூகத்துக்கும் பெருமை சேர்த்துள்ளதாக பாடசாலை அதிபர் ஜனாப் முகம்மது சரீக் தெரிவித்தார்.

சித்தியடைந்த மாணவிகளின் பெயர் விவரம் பின்வருமாறு,

செல்வி எம்.எச்.ஹம்தா (149), செல்வி எம்.எவ்.எவ்.இவ்ரா (170), செல்வி எம்.என்.எவ்.நஸ்லா (152)ஆகியோரே இவ்வாறு சித்திபெற்றுள்ளனர்.

# புனித ரமழானை முன்னிட்டு ஸாக்கிரீன் குர்ஆன் மத்ரஸாவில் விசேட நிகழ்ச்சிகள்

*(பீ.எம்.முக்தார்)*

புனித ரமழானை வரவேற்போம் என்ற தலைப்பில் பேருவளை சீனன்கோட்டை பெருகமலை ஸாக்கிரீன் குர்ஆன் மத்ரஸாவில் விசேட நிகழ்ச்சிகள் அதிபர் மௌலவி எஸ்.எச்.எம்.இம்ரான் (ரஹ்மானி - குமைதி) தலைமையில் அண்மையில் மத்ரஸா மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது.

மத்ரஸா மாணவர்களிடையே எழுத்துப் பரீட்சை நடத்தப்பட்டு அதில் அதிக புள்ளிகள் பெற்ற மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன. அத்தோடு பல்வேறு போட்டி நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

புனித ரமழான் மாதம் தொடர்பாக மாணவர்களிடையே பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டதோடு பரிசில்களும் வழங்கப்பட்டன.

உபஅதிபர் மௌலவி முஹம்மத் ரிஸ்கி (ஹில்ரி) மற்றும் மத்ரஸா மேற்பார்வைக் குழு அங்கத்தவர்களான சிரேஷ்ட ஊடகவியலாளர் பீ.எம்.முக்தார், ஸயான் முனீர், முஹம்மத் இஷாக் ஹாஜியார் முஹம்மத் இபாம் உட்பட மத்ரஸா போதன ஆசிரியர்கள், மாணவர்கள் நிகழ்வில் கலந்துகொண்டனர்.

புனித ரமழானை வரவேற்போம் என்ற தலைப்பில்






பேருவளை சீனன்கோட்டை பெருகமலை ஸாக்கிரீன் குர்ஆன் மத்ரஸாவில் விசேட நிகழ்ச்சிகள் அதிபர் மௌலவி எஸ்.எச்.எம்.இம்ரான் (ரஹ்மானி - குமைதி) தலைமையில் அண்மையில் மத்ரஸா மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது.

மத்ரஸா மாணவர்களிடையே எழுத்துப் பரீட்சை நடத்தப்பட்டு அதில் அதிக புள்ளிகள் பெற்ற மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன. அத்தோடு பல்வேறு போட்டி நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

புனித ரமழான் மாதம் தொடர்பாக மாணவர்களிடையே பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டதோடு பரிசில்களும் வழங்கப்பட்டன.

உபஅதிபர் மௌலவி முஹம்மத் ரிஸ்கி (ஹில்ரி) மற்றும் மத்ரஸா மேற்பார்வைக் குழு அங்கத்தவர்களான சிரேஷ்ட ஊடகவியலாளர் பீ.எம் முக்தார், ஸயான் முனீர், முஹம்மத் இஷாக் ஹாஜியார் முஹம்மத் இபாம் உற்பட மத்ரஸா போதன ஆசிரியர்கள், மாணவர்கள் நிகழ்வில் கலந்துகொண்டனர்.

# டயலொக், MAS, Hemas - சர்வோதயம் இணைந்து 'மனிதநேய ஒன்றிணைவு' நிவாரண திட்டம் அறிமுகம்



படத்தில் இடமிருந்து வலம்: PwC ஸ்ரீலங்காவின் பிரதம நிறைவேற்று அதிகாரி, சுஜீவ முதலிகே, சர்வோதய சிரமதான சங்கத்தின் தலைவர் கலாநிதி வின்யா ஆரியரத்ன, டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி குழும பிரதம நிறைவேற்று அதிகாரி சுபுன் வீரசிங்ஹ, Hemas Holdings PLC இன் குழும பிரதம நிறைவேற்று அதிகாரி கஸ்தூரி செல்லராஜா வில்சன் மற்றும் MAS Holdings குழுமத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி சுரேன் பெர்னாண்டோ.

நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடியின் காரணமாக அதிகமாக பாதிக்கப்பட்டுள்ள குடும்பங்கள் மற்றும் சமூகங்களுக்கு நிவாரணம் வழங்கும் நோக்கில் டயலொக் ஆசிஆட்டா, MAS Holdings Pvt Ltd, Hemas Holdings PLC சர்வோதய சிரமதான சங்கம் மற்றும் PwC Sri Lanka ஆகியன இணைந்து 'மனிதநேய ஒன்றிணைவு' நிவாரண திட்டமொன்றை கூட்டாக ஆரம்பித்துள்ளன .

பாதிப்பிற்குள்ளாகியுள்ள சமூகங்களுக்கு உடனடி உதவிகளை வழங்கும் நோக்கில் தொலைநோக்குப் பார்வையுடன், 'மனிதநேய ஒன்றிணைவு' நிவாரண திட்டத்தை முன்னெடுப்பதற்காக சர்வோதயா உள்ளிட்ட ஒத்த எண்ணம் கொண்டமேற்படி பெருநிறுவன கூட்டணியுடன் டயலொக் கைகோர்த்துள்ளது, இதற்கமைய, இந்த பெருநிறுவன கூட்டு நிறுவனங்கள் நாட்டில் 1,00,000இற்கும் மேற்பட்ட பாதிக்கப்பட்டுள்ள மற்றும் வறுமையிலுள்ள குடும்பங்களை அடையாளம் கண்டு அவசரகால நிவாரணங்களை வழங்கவுள்ளன. குறித்த பெருநிறுவன கூட்டாளர்களின் இணக்கத் தேவைகளின்படி நிதி நிர்வாகத்தையும் அறிக்கையிடலையும் கண்காணிக்கும் முயற்சியை PwC மேற்கொண்டுள்ளது. மேலும், ITN, Siyatha Swarnawahini, TV Derana மற்றும் வசந்தம் ஆகியன ஊடக பங்காளிகளாக இந்த முயற்சியில் இணைந்துள்ளன. மேற்படி 'மனிதநேய ஒன்றிணைவு' நிகழ்வானது 2022ஆம் ஆண்டு ஏப்ரல் 10ஆம் திகதி செயற்படத் தொடங்கும், அதற்கமைய அனைத்து 25 மாவட்டங்களிலும் அவசர நிவாரணம் தேவைப்படும் இடங்களில், குடும்பங்களுக்கு இதனூடாக அத்தியாவசிய உலருணவுப் பொதிகள் விநியோகிக்கப்படும்.

டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி குழுமத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி சுபுன் வீரசிங்ஹ இது குறித்து கருத்து தெரிவிக்கையில், "1,00,000 குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்கும் இந்த முயற்சியில் எம்முடன் இணைந்து செயற்படுகின்ற MAS, Hemas நமது செயற்றிட்ட செயற்பாட்டு பங்காளியான சர்வோதய மற்றும் பொறுப்புக்கூறல் பங்குதாரரான PwC ஆகியோருக்கு நாம் நன்றி கூறுகின்றோம்.

நாடு முழுவதும் 17 மில்லியனுக்கும் அதிகமான இலங்கையர்களின் நம்பகமான டிஜிட்டல் பங்காளியாக உள்ள டயலொக் நிறுவனமாகிய நாம் நாட்டில் நிலவுகின்ற சூழ்நிலையினால் பாதிக்கப்பட்டுள்ள எமது மக்கள் அத்தாக்கங்களிலிருந்து விடுபடுவதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டியதன் அவசியத்தை உணர்ந்துள்ளோம். விளிம்பு நிலை சமூகங்களுக்கு அவர்களின் மிகப்பெரிய தேவைகளின்போது அவர்களுக்கு உதவ இதுபோன்ற நிவாரண முயற்சிகளை நாங்கள் எப்போதும் முன்னெடுத்து வருகின்றோம். எதிரிலுள்ள சவாலின் அளவைக் கருத்தில் கொண்டு, இந்த முயற்சியில் எங்களுடன் இணைந்துகொள்ளுமாறு இலங்கை பெருநிறுவனங்களுக்கு நாம் அழைப்பு விடுக்கின்றோம்"- என்றார்.

மேற்படி நிவாரண திட்டம் குறித்த அறிமுக விழாவில் உரையாற்றிய MAS Holdings குழுமத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி சுரேன் பெர்னாண்டோ, "MAS" என்பது அதன் சமூக மனசாட்சிக்கு பெயர்பெற்ற ஓர் அமைப்பாகும், மேலும் இதுபோன்ற சந்தர்ப்பங்களில் MAS நிறுவனமும் முக்கிய பங்காளராக செயற்பட கிடைத்துள்ளதை பெரும் பாக்கியமாக நாம் கருதுகின்றோம். நமது வீடு என்று நாம் அழைக்கின்ற தாய் நாட்டிற்கு சர்வோதயவுடன் இணைந்து பலமுறை பணிபுரிந்துள்ளதால், இவ்வாறான சூழ்நிலையில் பாதிக்கப்படக்கூடிய சமூகங்களில் குறிப்பிடத்தக்க மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய வல்லமையும் திறனும் எவருக்கேனும் இருக்குமாயின், அது நிச்சயமாக சர்வோதயதான் என்பதை நாங்கள் உறுதியாக நம்புகிறோம். சர்வோதய நிறுவனமானது அதன் நோக்கம் மற்றும் அவர்களின் நாடளாவிய வளங்களின் வலையமைப்புடன் சிறந்த செயற்பாட்டு பங்காளியாக இருந்து வருகின்றது. எனவே, இலங்கையிலுள்ள ஏனைய பெருநிறுவனங்களும் இவ்வாறே எம்முடன் இணைந்து செயற்பட வேண்டியதன் அவசியத்தை உணர்ந்து, இந்த வேலைத்திட்டத்தினூடாக நம்முடன் ஒன்றிணைந்து இக்கட்டான சூழ்நிலையில் இந்நாட்டு மக்கள் முகங்கொடுத்துள்ள பிரச்சினைகளிலிருந்து அவர்களை மீளச்செய்வதற்கான உதவிகளை வழங்குவதற்கான வழிகளைக் கண்டறிய உத்வேகம் பெறுவார்கள் என்று நான் உண்மையிலேயே நம்புகிறேன். இது நமது தேசம், நமது மக்கள் மற்றும் நமது கூட்டுப் பொறுப்பு" - என்றார்

Hemas Holdings பிஎல்சியின் குழும பிரதம நிறைவேற்று அதிகாரி கஸ்தூரி செல்லராஜா வில்சன் கருத்து தெரிவிக்கையில், "இலங்கை நிறுவனம் என்றவகையில் நாடு முழுவதிலுமுள்ள எமது மக்களின் உடனடித் தேவைகளை நிவர்த்திசெய்வதை உறுதிப்படுத்துவது எமது கடமையாகும். ஆரோக்கியமான வாழ்க்கையை உருவாக்குதல், சமத்துவமின்மையை அகற்றுவதில் கவனம் செலுத்துதல் போன்ற நமது நோக்கங்களுடன் மேற்படி நிவாரண திட்டமும் ஒத்துப்போகின்றது. எனவே, அடுத்துவரும் மாதங்களில், நாம் நமது பங்காளிகளுடன் தொடர்ந்து பணியாற்றுவதுடன், நமது சமூகங்கள் மற்றும் சேவையாளர்களின் சுமையை குறைக்கும் பங்களிப்பினை தொடர்ந்தும் வழங்குவோம்'' - என்றார்.



படத்தில் இடமிருந்து வலம்: சுயாதீன தொலைக்காட்சி வலையமைப்பு, பிரதி பொது முகாமையாளர் (சந்தைப்படுத்தல்) ரவி சிறிவர்தன, Voice of Asia Network இன் தலைமை நிர்வாக அதிகாரி அஜாஸ் ஷபீக், PwC ஸ்ரீலங்காவின் பிரதம நிறைவேற்று அதிகாரி, சுஜீவ முதலிகே, சர்வோதய சிரமதான சங்கத்தின் தலைவர் கலாநிதி வின்யா ஆரியரத்ன, டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி குழும பிரதம நிறைவேற்று அதிகாரி சுபுன் வீரசிங்ஹ, Hemas Holdings PLC இன் குழும பிரதம நிறைவேற்று அதிகாரி கஸ்தூரி செல்லராஜா வில்சன், MAS Holdings குழுமத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி சுரேன் பெர்னாண்டோ, EAP வலையமைப்பு பிரைவேட் லிமிட்டெட் நிறுவனத்தின் அலைவரிசை பிரிவுத் தலைவர் ரங்கன டி சில்வா, பவர் ஹவுஸ் (பிரைவேட்) லிமிட்டெட்டின் சந்தைப்படுத்தல் குழுமப் பணிப்பாளர் துஷார பெரேரா.

சர்வோதய சிரமதான சங்கத்தின், "குடும்பங்களுக்கு அவசர நிவாரணம் வழங்குவதற்காக இந்த மனிதாபிமான முயற்சியை முன்னெடுக்கும் நோக்கில் டயலொக், MAS மற்றும் Hemas போன்ற உயர்தர நிறுவனங்களுடன் கைகோர்ப்பதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். எண்ணிக்கைகளின் அடிப்படையிலான அறிவியல் அளவுகோல்கள், சான்றுகள் ஆகியவற்றின் அடிப்படையில் தற்போதைய பொருளாதார நெருக்கடியால் மிகவும் மோசமாக பாதிக்கப்பட்டுள்ள பயனாளிகளை நாங்கள் அடையாளம் காண்போம். மேலும் இந்த நிவாரண திட்டத்தில் 25 மாவட்டங்களையும் உள்ளடக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளோம். உணவுப் பாதுகாப்பின்மை ஆபத்தான விகிதத்தில் அதிகரித்து வருவதால், இந்த குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கும் அப்பால் வீட்டுத்தோட்டம் அமைத்தல் போன்ற நிலையான தீர்வுகளை வழங்குவதிலும் ஒரு படி தாண்டிச்செல்ல நாங்கள் திட்டமிட்டுள்ளோம். ஏனைய பெரு நிறுவன நிறுவனங்களையும் இந்த முயற்சியில் நம்முடன் ஒன்றுசேர வருமாறு நான் அழைக்கின்றேன், இதன்மூலம் கூட்டாக, நாட்டிலுள்ள நமது சொந்த சகோதர சகோதரிகளை நாம் பராமரித்துக்கொள்ள முடியும்" - என்றார்.

பயனுள்ள பொருளாதார முன்மாதிரி திட்டத்தினூடாக நிலையான நலன் பரிமாற்ற முறையொன்று நாட்டில் நிறுவப்படும்வரை மேற்படி 'மனிதநேய ஒன்றிணைவு' வேலைத் திட்டமானது 60-90 நாட்களுக்கு தொடர்ந்து முன்னெடுக்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

# பொருளாதார நெருக்கடிக்கு கடந்த கால யுத்தமே காரணம்

## சித்தார்த்தன் எம்.பி. தெரிவிப்பு

ஜனாதிபதிக்கு எதிரான குற்றப் பிரேரணையை பொறுத்த மட்டில், நாங்கள் தனியாக முடிவெடுப்பதைக் காட்டிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக ஒரு முடிவெடுத்தால்தான் அது பலமாக இருக்கும் - என புளொட் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான த.சித்தார்த்தன் தெரிவித்தார்.

யாழில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தினை நடத்தியதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாங்கள் 10 நாடாளுமன்ற உறுப்பினர்களாக முடிவெடுக்கும்போது அது பலமாக இருக்கும். எந்தவிதமான பிரேரணை கொண்டுவந்தாலும் தமிழ்த் தேசியக்



கூட்டமைப்பாக 03 கட்சிகளும் கலந்துரையாடி ஒரு முடிவை எடுக்கவேண்டும் என்றும் 03 கட்சியும் இணைந்து தீர்மானம் எடுக்க முடியாவிட்டால் நாங்கள் தனியாக தீர்மானிக்க முடியும் என்றும் தீர்மானம் எடுக்கப்பட்டது.

இலங்கை மக்களை மிகப்பெரிய அளவில் பொருளாதார நெருக்கடி பாதித்திருக்கின்றது. ஆகவே, பொருளாதாரப் பின்னடைவு நிச்சயமாக நீண்டகாலமாக இருந்துவந்த ஒன்று. இந்த நாட்டில் யுத்தத்திற்காக செலவழிக்கப்பட்ட பெருந்தொகையான பணங்கள், அதற்காக பட்ட கடன்கள், அதனால் ஏற்பட்ட அழிவுகள் எல்லாம் சேர்த்தே பொருளாதாரப் பின்னடைவு ஆரம்பிக்க காரணமாக உள்ளது.

போராட்டத்துக்கு ஜனாதிபதி சரியான பதில் ஒன்றை வழங்க வேண்டும். ஜனாதிபதி பதவி விலக வேண்டும் என்று கூறியே மக்கள் போராடுகிறார்கள். அதனை ஜனாதிபதி செய்யமாட்டார் என்றே நான் நினைக்கின்றேன். பொருளாதாரத்தை முன்னேற்ற ஜனாதிபதி நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றார்.



கண்டி, மாபனாவத்துர மற்றும் அனிவத்தைப் பிரதேசத்தில் சமையல் எரிவாயு வேண்டும் எனக் கோரி, பொதுமக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் அணிவத்தை, மாபனாவத்துர, அஸ்கிரிய பகுதிகளில் வீதிகள் மறிக்கப்பட்டு போக்குவரத்து தடைப்பட்டிருந்தது. (படங்கள் : கண்டி நிருபர்)

# யாழில் வன்முறைக் கும்பலால் முச்சக்கரவண்டி தீக்கிரை!



யாழ்ப்பாணம் நவாலி பகுதியில் முச்சக்கரவண்டி ஒன்று வன்முறைக் கும்பலால் தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.

நவாலி, ஆனந்தா வீதி பகுதியிலுள்ள வீடொன்றினுள் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு இரண்டு மோட்டார்சைக்கிளில் வந்த 06 பேர் மேற்கொண்ட வன்முறைக் கும்பலொன்று வீட்டின் முன் நிறுத்திவைக்கப்பட்டிருந்த முச்சக்கரவண்டியை அடித்து நொறுக்கிவிட்டு அதற்கு தீ வைத்த பின்னர் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் மானிப்பாய் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதனை யடுத்து, பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# வவுனியாவில் அரசாங்கத்துக்கு எதிரான ஆர்ப்பாட்டம்




வவுனியா நிருபர்

அரசாங்கத்துக்கு எதிரான ஆர்ப்பாட்டம் ஒன்று நேற்று வவுனியாவில் இடம்பெற்றது.

குறித்த ஆர்ப்பாட்டமானது, வவுனியா பொது மக்களின் ஏற்பாட்டில் புதிய பஸ் நிலையத்திற்கு முன்பாக நேற்றுக் காலை இடம்பெற்றிருந்தது. அமைதியான முறையில் இடம்பெற்ற இவ்வார்ப்பாட்டத்தின்போது "வடக்கு, கிழக்குப் பகுதிகளில் இராணுவமய மாக்கலை தடுத்து நிறுத்து, தங்களது காணிகளை விடு, பொருட்களின் விலைகளை குறை, தூய்மையான பொறுப்பு வாய்ந்த நாடாளுமன்றத்தை அமை" என்ற சுலோகங்களை எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதேவேளை, குறித்த ஆர்ப்பாட்டத்தில் பெருமளவிலான பெண்கள் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# காதலியை தொடர்ந்து உயிரை மாய்த்துக்கொண்ட இளைஞன்

காதலியை தொடர்ந்து இளைஞன் ஒருவர் தானும் தவறான முடிவெடுத்து உயிரை மாய்த்துள்ளார்.

யாழ்ப்பாணம் ஊர்காவற்றுறை பகுதியைச் சேர்ந்த ஊவா பல்கலைக்கழக மாணவனான உ.கனிஸ்ரன் (வயது 22) என்பவரே தனது உயிரை மாய்த்துள்ளார்.

இவரது காதலி கடந்த சில நாட்களுக்கு முன்னர் தவறான முடிவெடுத்து தனது உயிரை மாய்த்துள்ளார். அதனால் கடுமையான மனஉளைச்சலுக்கு உள்ளாகியிருந்தவர் தானும் தவறான முடிவெடுத்து உயிரை மாய்த்துள்ளார் என மரண விசாரணையின்போது உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.



கடந்த சில நாட்களாக மாத்தளை நகரிலும் நகரை சூழவுள்ள சில பகுதிகளிலும் பெய்து வரும் அடைமழை காரணமாக மாத்தளை வட்டகொட பிரதான வீதியில் ஏற்பட்ட மண்சரிவு காரணமாக பாரிய கல்லொன்று பாதையில் சரிந்துள்ளதால் போக்குவரத்துக்கு தடை ஏற்பட்டது. இதனைடுத்து நாடாளுமன்ற உறுப்பினரும் மாத்தளை அபிவிருத்தி இணைப்புக்குழுவின் தலைவருமான நாலக்க கோட்டகொட உட்பட அனர்த்த முகாமைத்துவ பணிமனையின் அதிகாரிகள் மண்சரிவு ஏற்பட்ட இடத்தை பார்வையிட்டனர். (படம்: மாத்தளை நிருபர்)

# மரக்கறிகளை விற்பனை செய்ய முடியாது உற்பத்தியாளர்கள் பெரும் பாதிப்பு

## முன்னாள் மத்திய மாகாணசபை உறுப்பினர் இராஜாராம் தெரிவிப்பு

(தலவாக்கலை நிருபர்)

நுவரெலியா மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் உருளைக் கிழங்கு மற்றும் மரக்கறிகளை விற்பனை செய்து கொள்ள முடியாமல் விவசாயிகளும் மரக்கறி வியாபாரிகளும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். அரசாங்கத்தின் அசமந்தப் போக்கினால் எமது நாட்டு மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதாக மலையக மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளரும் முன்னாள் மத்திய மாகாணசபை உறுப்பினருமான ஆர்.இராஜாராம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக இராஜாராம் கருத்து தெரிவிக்கையில்,

கடந்த காலத்தில் நுவரெலியா விசேட பொருளாதார மத்திய நிலையத்தில் ஒரு வியாபாரி நாள் ஒன்றுக்கு 3000 கிலோ முதல் 5000 கிலோ மரக்கறி மற்றும் உருளைக்கிழங்கு விற்பனை செய்து வந்த நிலையில் இன்று 200 கிலோ மரக்கறிகளை கூட விற்பனை செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக நுவரெலியா விசேட பொருளாதார மத்திய நிலைய வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

டீசல் தட்டுப்பாட்டால் வெளிமாவட்டத்திலுள்ள வியாபாரிகள் மரக்கறிகளை கொள்வனவு செய்வதற்கு நுவரெலியா விசேட பொருளாதார மத்திய நிலையத்திற்கு வருவது மிகவும் குறைந்துள்ளது. இதனால் மரக்கறி விலையிலும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. இதேவேளை, மரக்கறி உற்பத்தியில் ஈடுபடும் விவசாயிகளும் உற்பத்தி செய்யும் மரக்கறிகளை விற்பனை செய்ய முடியாமல் அவஸ்தைப்படுகின்றனர்.



அத்தோடு, மரக்கறி தோட்டங்களிலும் மரக்கறி வியாபாரிகளிடம் தொழில்புரியும் தொழிலாளர்களும் தொழில் இல்லாமல் கஷ்டப்படுகின்றனர். மேலும் கடந்த காலத்தில் 1500 ரூபாவிற்கு விற்பனை செய்யப்பட்ட இரசாயன உரம் ஒரு மூடை தற்பொழுது 16,000 ரூபாவிற்கு விற்பனை செய்யப்படுகின்றது. அதேவேளை, யூரியா ஒரு மூடை 25,000 ரூபாவிற்கு விற்கப்படுகின்றது. ஆனாலும் யூரியாவிற்கு பெரும் தட்டுப்பாடு நிலவுகின்றது. உருளைக் கிழங்கு மற்றும் மரக்கறி உற்பத்திக்கு கடந்த காலத்தை விட தற்பொழுது செலவு அதிகம் செலவிற்கேற்ப வருமானம் கிடைப்பதில்லை.

இது இவ்வாறிருக்க, தற்பொழுது இந்த நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் தட்டுப்பாடு மற்றும் சமையல் எரிவாயு நெருக்கடி காரணமாக மரக்கறி உற்பத்தியாளர்களும் மரக்கறி வியாபாரிகளும் 60 வீதத்தால் வீழ்ச்சியடைந்து பாதிக்கப்பட்டுள்ளார்கள். சமையல் எரிவாயு தட்டுப்பாடு காரணமாக பல இடங்களிலுள்ள உணவகங்களிலும் சுற்றுலா விடுதிகளிலும் உணவு மற்றும் தேநீர் வழங்க முடியாமல் உணவகங்களையும் ஹோட்டல்களையும் தற்காலிகமாக மூடிவைத்துள்ளனர்.

இதனால் சந்தைக்கு காய்கறிகளை கொள்வனவு செய்வதற்கு ஹோட்டல்காரர்கள் வருவதில்லை. மரக்கறி உற்பத்தி செலவு தற்பொழுது அதிகரித்துள்ளமையால் மரக்கறிகளை நல்ல விலைக்கு விற்பனை செய்ய முடியாமல் மரக்கறி உற்பத்தியாளர்கள் நஷ்டமடைகின்றார்கள். தங்களது வாழ்வாதாரத்தை கொண்டு செல்வதற்கும் சிரமப்படுகின்றனர். எனவே நானும் மரக்கறி உற்பத்தி செய்யும் விவசாயி என்ற வகையில் நுவரெலியா மாவட்டத்தில் மரக்கறி உற்பத்தியில் ஈடுபடும் விவசாயிகளும் வியாபாரிகளும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். இவர்களை பாதுகாக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

# புத்தாண்டில் இனங்களுக்கிடையில் ஐக்கியம் - ஒற்றுமை ஏற்பட வேண்டும்

## வாழ்த்துச் செய்தியில் அரவிந்தகுமார் எம்.பி.



(பதுளை நிருபர்)

பெருந்தோட்டத்துறை மக்கள் உள்ளிட்ட ஒட்டுமொத்த தமிழ் மக்கள் வாழ்வியல்களில் முன்னேற்றகரமான மாற்றங்களுடன் கூடிய சுபீட்சமும், வளமும் ஏற்பட, இப்புத்தாண்டு வழிவகுக்க வேண்டுமென்று, பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அ. அரவிந்தகுமார் விடுத்துள்ள புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ந்து இவ்வாழ்த்துச் செய்தியில்,

இப்புத்தாண்டு தமிழர்களுக்குரியதாக இருந்தபோதிலும், சிங்கள பௌத்த மக்களும் ஆரம்பம் காலம் தொட்டிருந்திருந்தே இப்புத்தாண்டுப் பண்டிகையை கொண்டாடி வருகின்றனர். அவ்வகையில், தமிழ், சிங்கள மக்கள் அனைவருமே, இப்புத்தாண்டினை அனுஷ்டிக்கின்றனர். ஆகையினால், இவ்விரு இன மக்களும் ஐக்கியம், ஒற்றுமை, சமத்துவம் ஆகியவற்றுடன் வளமாக வாழ்ந்து, இந்நாட்டினை கட்டியெழுப்பும் வகையில், செயல்பாடுகளை முன்னெடுக்க வேண்டும்.

கடந்த பிலவ வருடம் போய், சுபகிருது புத்தாண்டு மலர்ந்துள்ளது. இப்புத்தாண்டு அனைவருக்கும் அனைத்து விடயங்களும் சுபமாகவே அமைய வேண்டும். நாட்டில் ஏற்பட்டிருக்கும் பொருளாதாரம் உள்ளிட்ட அனைத்து நெருக்கடிகளும் முற்றாக நீங்கி, எம்மக்களின் வாழ்வியலில் ஆரோக்கியமானதோர் சூழல் உருவாக வேண்டும். இந்நிலை ஏற்பட எல்லாம் வல்ல இறைவனை, குடும்பத்தினருடன், சமூகத்தினருடன் இணைந்து வழிபடுவோமாக.

இச் சுபகிருது புத்தாண்டில், எம் ஒவ்வொருவருக்கும் நல்லதே நடக்க வேண்டும். நல்ல விடயங்களையே எதிர்கொள்ள வேண்டும். மகிழ்ச்சி செழித்தோங்க வேண்டுமென்று கூறி, அனைவருக்கும் புத்தாண்டு நல்வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்வதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

# புத்தாண்டில் வேறுபாடுகளை களைந்து ஒருதாய் மக்களென உலகறியச் செய்வோம்

## - ராமேஷ்வரன் எம்.பி. வாழ்த்து செய்தியில் தெரிவிப்பு

(தலவாக்கலை நிருபர்)



பிறக்கும் இப்புத்தாண்டு இலங்கை வாழ் சமூகத் தினருக்கு வளமான வாழ்வும் குறைவற்ற செல்வமும், கிடைத்திட வேண்டும். சித்திரைப் பிறப்பு சகல வகையிலும் வசந்தத்தை உருவாக்கக்கூடியது. இன,மத, மொழி,சாதி,சமய வேறுபாடுகளைக் களைந்து எல்லோரும் ஒருதாய் மக்களென உலகறியச்செய்யும் சிறப்பு நாளாகும்.

இச்சித்திரைப் புத்தாண்டில் மனிதம் நிரந்தரமாய் நிலைத்து புதிய சாதனைகளையும், வெற்றிகளையும் பெற்று வழிமறிக்கும் தடைகளைத் தகர்த்து மகிழ்ச்சி பொங்கும் நன்நாளாக அமைய இறைவனை பிரார்த்திப்பதோடு இந்நாளில் இலங்கையில் வாழும் அனைத்து இன மக்களுக்கும் சித்திரை புத்தாண்டு நல் வாழ்த்துகளைப் பகிர்ந்து கொள்வதில் பெரும் மகிழ்ச்சியடைகின்றேன் என இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தவிசாளரும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மருதபாண்டி ராமேஷ்வரன் தெரிவித்துள்ளார்.

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு அவர் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

பிறக்கும் இச்சித்திரைப் புத்தாண்டு நமது பலம், ஒற்றுமை என்பவற்றை நிலைநிறுத்தி எழுச்சி கொள்ளும் சமூகமாய் இன்புற்று வாழ்வதற்கு வழி சமைக்கட்டும். நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார சிக்கலினால் எமது நாட்டு மக்கள் பல்வேறு துன்பங்களை அனுபவித்து வருகின்றனர். இது நிரந்தரமான ஒன்றல்ல. நிச்சயமாக நாட்டில் ஏற்பட்டுள்ள இந்த இக்கட்டான சூழ்நிலை நலமாக அமையும் என்ற திடமான நம்பிக்கை எம்மிடம் இருக்கின்றது.

மிகவிரைவில் எமது நாடு சுபீட்சம் பெறும். நாம் என்னதான் புறக்கணிக் கப்பட்டாலும் ஒதுக்கப்பட்டாலும் கூட தமது தெய்வ நம்பிக்கை, விருந்தோம்பல், தொழில் கடமைகள், இவை எதிலுமே நாம் புறக்கணிக்கப்படவில்லை. எமது இருப்பை தக்கவைத்துக்கொள்ள வேண்டும். அதற்கு நாங்கள் தொலைநோக்கு சிந்தனையோடு செயற்படவேண்டும். எனவே எல்லாம் வல்ல இறைவன் எமது மக்களுக்கு வழங்கியுள்ள திடமான மனநிலையும் கிடைத்ததை மகிழ்வுடன் ஏற்றுக் கொள்ளும் பண்பும் தொடர்ந்தும் கிடைக்க வேண்டுமெனவும் எதிர்வரும் காலங்களை நாமே சிறப்பாக்கிக் கொள்ளும் மன உறுதியை எமது மக்கள் பெற வேண்டுமென வாழ்த்துகிறேன் என தெரிவித்துள்ளார்.



# இரண்டு மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் அட்டாளைச்சேனையில் கரப்பந்தாட்டத் திடல்



(அட்டாளைச்சேனை நிருபர்)

விளையாட்டுத்துறை அமைச்சின் 2 மில்லியன் ரூபா செலவில் அட்டாளைச்சேனை அஷ்ரஃப் ஞாபகார்த்த பொது விளையாட்டு மைதானத்தில் கரப்பந்தாட்டத் திடல் அமைப்பதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு நடைபெற்றது.

இதன்போது, அட்டாளைச் சேனை பிரதேச செயலாளர் எம்.ஏ.சீ.அஹமட் ஷாபிர் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு கரப்பந்தாட்டத் திடல் அமைப் பதற்கான அடிக்கல்லினை உத்தியோகபூர்வமாக நாட்டி வைத்தார்.

இந்நிகழ்வில், அட்டாளைச் சேனை பிரதேச சபையின் உறுப்பினர் ஏ.எஸ்.எம்.உவைஸ், அட்டாளைச்சேனை பிரதேச சபையின் செயலாளர் எம்.ஐ.எம்.பாயிஸ், உதவித் திட்டமிடல் பணிப்பாளர் ஏ.எல்.ஹுசைனுடின், அட்டாளைச்சேனை பிரதேச செயலக விளையாட்டு உத்தியோகத்தர் எம்.எச்.எம்.அஜ்வத், நாடாளுமன்ற உறுப்பினர் டபிள்யூ.டி.வீரேசிங்கவின் பிரதேச இணைப் பாளர் ஆசிரியர் எஸ்.எம்.ஜெசீல், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் மௌலவி எம்.பாயிஸ் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் டபிள்யூ.டி.வீரேசிங்கவின் சிபாரிசுக்கமைவாக விளையாட்டுத்துறை அமைச்சினால் 2 மில்லியன் ரூபா அட்டாளைச்சேனை அஷ்ரப் ஞாபகார்த்த பொது விளையாட்டு மைதானத்தில் கரப்பந்தாட்டத்திடல் அமைப்பதற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மாவடிப்பள்ளி ஆற்றில் முதலைகளின் தொல்லை அதிகரிப்பு - மக்களுக்கு எச்சரிக்கை



(நிந்தவூர் நிருபர்)

அண்மையில் பெய்த பலத்த மழை காரணமாக ஏற்பட்ட வெள்ளத்தினை தொடர்ந்து மாவடிப்பள்ளி ஆற்றை அண்டிய பிரதேசம், வயல் பிரதேசம் மற்றும் சாய்ந்தமருது கரைவாகு வட்டை பிரதேசம் ஆகியவற்றில் பகலிலும் இரவிலும் முதலைகளின் தொல்லை அதிகரித்துக் காணப்படுகின்றது.

ஆறு, குளம், குட்டைகளில் வசித்து வந்த முதலைகள் வெள்ளநீர் காரணமாக அந்த நீரோட்டத்தின் காரணமாக மேற்படி பிரதேசங்களில் சர்வசாதாரணமாக உலாவித் திரிகின்றன. இவை ஊருக்குள் காணப்படும் மறைவான இடங்களில் பகல்வேளையில் தங்கியிருந்து இரவு வேளைகளில் கோழி மற்றும் ஆடுகளை வேட்டையாடி வருகின்றன. இதனால் கால்நடை வளர்ப்பில் ஈடுபடுவோர் பெரும் நஷ்டத்தினை எதிர்கொண்டு வருவதோடு பெண்களும், சிறுவர்களும், முதியோர்களும் பெரும் அச்சத்துடனேயே இரவு வேளையை கழிக்க வேண்டியும் உள்ளது.

# மண்ணெண்ணெய் தட்டுப்பாட்டால் ஆழ்கடல் மீனவர்கள் கடும் பாதிப்பு



(கிண்ணியா நிருபர்)

நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் தட்டுப்பாட்டு நிலைமை காரணமாக ஆழ் கடல் மீனவர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக கவலை தெரிவிக்கின்றனர்.

திருகோணமலை கரையோர மீனவர்கள் மண்ணெண்ணெய் மூலமாக தங்களது இயந்திர படகை பயன்படுத்தி வரும் நிலையில் மண்ணெண்ணெய் தட்டுப்பாட்டால் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கின்றனர்.

மண்ணெண்ணெயை பெற நீண்ட வரிசையில் காத்திருக்க வேண்டிய நிலையும் சிலவேளை வெருங்கையுடன் வீடு திரும்ப வேண்டியுள்ளதுடன் அன்று கடலுக்கு செல்ல முடியாது, இதனால் தொழில் பாதிக்கப்படுகிறது எனவும் தெரிவிக்கின்றனர். இரவு நேரங்களில் கண்விழித்து கடல் தொழிலில் ஈடுபட்டு மீண்டும் கடலுக்கு செல்வதாக இருந்தால் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் வரிசையில் காத்திருந்து பல மணி நேரங்கள் காலத்தை கடக்க வேண்டியுள்ளது.



இயந்திரம் மூலமாக மீனவப் படகில் ஈடுபடுவோருக்கு மண்ணெண்ணெயை இலகுவாக பெறுவதற்கு உரிய அதிகாரிகள் வழிசெய்து தருமாறும் மீனவர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

## போடியார் புலம்பல்!



**மக்கள் போராட்டங்கள் அரசுக்கு எதிரானவை அல்ல என்று வெளிநாட்டு அமைச்சர் பீரீஷ் சர்வதேச இராஜ தந்திரிமார கூப்பிட்டு வைச்சு சொல்லி இருக்காரு எலுவா. இராஜ தந்திரிகளுக்கு கண்ணும் குருடு, காதும் கேட்காத ஆக்கள் எண்டுதான் இந்த முழுப்பூசணிக்காய சோத்துல புதைச்சிருக்காரு இந்த மனிசன். மக்கள் அப்ப ஆருக்கு எதிராக போராடுறாங்க எண்ட விசயத்தையே பைத்தியகாரன் மாதிரி கதைக்கிற பைத்திய அமைச்சர்கள்தான் இப்ப இருக்காங்க எண்டத அந்த வெளிநாட்டு ஐயாமார் சொல்லி சொல்லி சிரிச்சிருப்பாங்க எலுவா! பேராசிரியர் பீரீஷும் மடச்சாம்பிராணயாக கதைக்கிறாரே!**

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# திருமலையில் எரிவாயு பெற்றுத்தருமாறு வீதியை மறித்து நுகர்வோர் ஆர்ப்பாட்டம்





(ரவ்பீக் பாயிஸ்)

திருகோணமலை தலைமையக பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பிரதான வீதியில் சமையல் எரிவாயு பெற்றுத்தருமாறு கோரி வீதியை மறித்து வாடிக்கையாளர்கள் ஆர்ப்பாட்டம் ஒன்றில் ஈடுபட்டிருந்தனர்.

நேற்று முன்தினம் (11) காலை முதல் நீண்டநேரம் நீண்ட வரிசையில் காத்திருந்து பின்னர் சமையல் எரிவாயு தீர்ந்துவிட்டதாக அறிவிக்கப்பட்டதையடுத்து வாடிக்கையாளர்கள் திருகோணமலை நகரின் பிரதான வீதியை மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

குறித்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் நேற்று முன்தினம் திருகோணமலை நீதிமன்ற வீதியை மறித்து சமையல் எரிவாயு வழங்குமாறு கோரி ஆர்ப்பாட்டம் செய்யப்பட்டதை அடுத்து திருகோணமலை நகரசபை உறுப்பினர் ஒருவரினால் நகரின் பெரும்பாலான பிரதேசங்களில் வீடுகளுக்கு சென்று சமையல் எரிவாயு விநியோகிக்கப்பட்டதாகவும் இவ்வாறு குறிப்பிட்ட பிரதேசங்களில் சமையல் எரிவாயு விநியோகிக்கப்படுவதனால் வாடிக்கையாளர்களுக்கு சரியான முறையில் சமையல் எரிவாயு கிடைக்கவில்லை எனவும் ஆர்ப்பாட்டக்காரர்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

மேலும் தமிழ் சிங்கள புத்தாண்டு காலத்தை ஒட்டி இவ்வாறு சமையல் எரிவாயு உட்பட ஏனைய பொருட்களுக்கும் வரிசையில் காத்திருந்து பெறவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாகவும் நோன்பு காலங்களில் சமைப்பதற்கு கூட மண்ணெண்ணெய் மற்றும் சமையல் எரிவாயு இல்லை எனவும் ஆர்ப்பாட்டக்காரர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

மேலும் குறித்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட முஸ்லிம் சமையல் எரிவாயு வாடிக்கையாளர்கள் மறைக்கப்பட்ட வீதி நடுவிலிருந்து நோன்பினை திறந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# செழிப்பிழந்த சித்திரைப் புத்தாண்டு, ரமழான் பண்டிகை வியாபாரம்

## சலிப்பில் வர்த்தகர்கள்





(மட்டக்களப்பு நிருபர்)

இம்முறை தமிழ் - சிங்கள சித்திரைப் புத்தாண்டு வியாபார சந்தையும் ரமழான் பண்டிகை வியாபாரமும் களைகட்டவில்லை என்பதனால் நகர வர்த்தகர்கள் சலிப்பில் உள்ளதாகத் தெரிவிக்கின்றனர்.

நாட்டில் பொருட்களுக்கு ஏற்பட்டுள்ள அதிகரித்த விலையேற்றம், பொருட்களின் பற்றாக்குறை, எரிபொருள் தட்டுப்பாடு மற்றும் அத்தியாவசியப் பொருட்களுக்காக வரிசையில் நிற்க வேண்டிய நிலைமை, மின்வெட்டு என்பவற்றால் மக்கள் பண்டிகைகளில் நாட்டங்கொள்ளவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதன் காரணமாக, மக்கள் தமிழ் - சிங்கள சித்திரைப் புத்தாண்டுக்காகவும் ரமழான் பண்டிகைக்காகவும் உடுதுணிகளையும் இன்னபிற பொருட்களையும் கொள்வனவு செய்யவில்லை என்று வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர்.

தமிழ் - சிங்களப் புத்தாண்டுக்காகவும் ரமழான் பண்டிகைக்காகவும் களை கட்டியிருக்க வேண்டிய பஸார் பகுதி வெறிச்சோடிக் காணப்படுவதாக வர்த்தகர்கள் மேலும் கூறுகின்றனர்.

ஒட்டு மொத்தத்தில் நாட்டின் ஸ்திரமற்ற நிலைமை அடிமட்ட கூலித்தொழிலாளர்கள் தொடக்கம் அனைத்து வகுப்பாரையும் மிக மோசமாகப் பாதித்துள்ளது என பாதிக்கப்பட்டுள்ளோர் ஆதங்கம் வெளியிடுகின்றனர்.

# சமுர்த்தி அபிமானி விற்பனைச் சந்தை கிண்ணியா ஆலங்கேணியில் திறப்பு







(கிண்ணியா நிருபர்)

தமிழ் - சிங்களப் புத்தாண்டை முன்னிட்டு சமுர்த்தி அபிமானி விற்பனை சந்தை கிண்ணியா ஆலங்கேணி பகுதியில் திறந்துவைக்கப்பட்டது.

சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களமும் சமுர்த்தி மகா சங்கம் கிண்ணியா பிரதேச செயலகம் இணைந்து ஏற்பாடு செய்த இக் குறித்த சந்தை நேற்று (12) கிண்ணியா பிரதேச செயலாளர் எம்.எச்.ஹனியினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

புத்தாண்டை முன்னிட்டு அத்தியாவசிய நுகர்வுப் பொருட்களை சலுகை விலையில் சமுர்த்தி விற்பனையாளர்களிடமிருந்து மக்கள் பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் இது ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதன்போது மக்கள் பொருட்களை கொள்வனவு செய்து வருவதனை காணக்கூடியதாகவுள்ளது. இதில் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# மதங்களின் ஊடாக மானிடம்; நிந்தவூரில் இப்தார் நிகழ்வு!




(மாளிகைக்காடு நிருபர்)

நிந்தவூர் பெஸ்ட் ஒப் யங் சமூக சேவைகள் அமைப்பு கல்முனை டாக்டர் ஜெமீல் ஞாபகார்த்த வைத்தியசாலையின் அனுசரணையுடன் நடத்திய வருடாந்த இப்தார் விசேட நிகழ்வு நேற்று முன்தினம் (11) நிந்தவூர் அட்டப்பள்ளம் பகுர் கிராமத்தில் இடம்பெற்றது.

பெஸ்ட் ஒப் யங் அமைப்பின் தலைவர் ஐ.எம்.நிஸ்மி தலைமையில் டாக்டர் ஜெமீல் ஞாபகார்த்த வைத்தியசாலையின் தவிசாளர் விசேட வைத்திய நிபுணர் டாக்டர் நிசான் ஜெமீலின் ஆலோசனைக்கமைவாக "மதங்களின் ஊடாக மானிடம்" எனும் தொனிப்பொருளில் முன்னெடுக்கப்பட்ட இந்த இப்தார் விசேட நிகழ்வில் அட்டப்பள்ளம் பகுர் கிராமத்தில் உள்ள மக்களுடன், நிந்தவூர் பிரதேச செயலாளர் சட்டத்தரணி ஏ.எம்.அப்துல் லத்தீப், நிந்தவூர் ஜும்ஆப் பெரிய பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபையின் தலைவர் எஸ்.எம்.பி.எம்.பாறூக் இப்றாகீம், கல்முனை டாக்டர் ஜெமீல் ஞாபகார்த்த வைத்தியசாலையில் பணிப்பாளர் டாக்டர் எம். ஜே.இஸட்.எம்.ஜமால்டீன், பெஸ்ட் ஒப் யங் அரச சார்பற்ற நிறுவனத்தின் ஆலோசகர் எஸ். அஹமது, செயலாளர் ஏ.புஹாது, டாக்டர் ஜெமீல் ஞாபகார்த்த வைத்தியசாலையின் நலன்புரி முகாமையாளர் எஸ்.எம்.அஜ்வத் ஆகியோர்கள் கலந்துகொண்டனர்.

## 61 வயதான முதியவரை காணவில்லை



(சீனக்குடா நிருபர்)

திருகோணமலை, தம்பலகாமம், சிராஜ் நகரை வசிப்பிடமாகக் கொண்ட 61 வயதான அப்துல் வஹாப் ராஹிமீன் என்பவரை கடந்த ஒருவார காலமாக காணவில்லையென உறவினர்கள் தெரிவிக்கின்றனர்.

இவர் கடந்த 30.03.2022 ஆம் திகதி கிண்ணியாவுக்கு சைக்கிளில் சென்றதாகவும் மறுநாள் (31) அங்கிருந்து தொலைபேசியில் இவர் தொடர்புகொண்டு தான் கிண்ணியாவில் இருப்பதாக தெரிவித்ததாகவும் அவரது உறவினர்கள் தெரிவிக்கின்றனர்.

மேலும் ஏப்ரல் 02ஆம் திகதி, கந்தளாய் 91ஆம் மைல் கல்லில் சிலர் இவரை கண்டதாகவும் தெரிவித்திருக்கிறார்கள். ஆனாலும் இவர், இன்னும் வீடு வந்து சேரவில்லை என்றும் உறவினர்கள் கூறுகின்றனர்.

எனவே, இவரைக் கண்டவர்கள் 0776448886 / 0757940382 / 0756060651 ஆகிய ஏதாவது தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு தகவல்களைத் தருமாறு கேட்டுக்கொள்கின்றனர்.

# அரசாங்கத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து திருகோணமலையில் ஆர்ப்பாட்டம்







(கிண்ணியா நிருபர்)

பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு கோரியும் அரசாங்கத்தை பதவி விலகக்கோரியும் அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டம் நேற்று (12) காலை 11.00 மணியளவில் இடம்பெற்றது.

இவ் ஆர்ப்பாட்டம் கண்டி - திருகோணமலை பிரதான வீதியின் முள்ளிப்பொத்தானை 96ஆம் சந்தியில் இடம்பெற்றது. இவ் ஆர்ப்பாட்டத்தினை சமூக நல குழுக்கள் இணைந்து முன்னெடுத்திருந்தன. குறித்த ஆர்ப்பாட்டத்தில் பௌத்த துறவி உட்பட சுமார் 20க்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர். ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் "கோ ஹோம் கோட்டா, பெசில் கபுட்டா" முதலான கோஷங்களை எழுப்பினர்.

நாங்கள் அனைவரும் ஒன்றாக இருக்கிறோம், Go Home Gota முதலான வாசகங்களை எழுதி பதாகைகளில் ஏந்தியவாறு இதன்போது ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டார்கள்.

இதன்பின் ஊடகங்களுக்கு இவ்வாறு கருத்து தெரிவித்தனர். நாட்டை அதலபாதாளத்திற்கு கொண்டு செல்லாமல் அதிகாரத்தை கொடுத்து விட்டு வீட்டுக்கு செல்லுங்கள். தற்போதைய பொருளாதார நெருக்கடிகளை மக்கள் தாங்கிக் கொள்ளாமல் பல்வேறு துன்பங்களை அனுபவிக்கின்றனர். எரிபொருள் பிரச்சினை நீண்ட வரிசை, மின்வெட்டு என பல சிக்கல்களை தோற்றுவித்துள்ளது என்றனர்.

# திருகோணமலை முத்துநகர் மீள்குடியேற்ற கிராமத்தை அபகரிக்க முயற்சிக்கும் துறைமுக அதிகார சபையினர்

(ஹஸ்பர் ஏ ஹலீம்)

திருகோணமலை மாவட்டம் பட்டினமும் சூழலும் பிரதேச செயலகப் பிரிவில் உள்ள மீள்குடியேற்றக் கிராமமே முத்துநகர் கிராமமாகும். இக்கிராமமானது கண்டி திருகோணமலை பிரதான வீதியில் இருந்து சுமார் 3 கிலோமீற்றர் தொலைவில் உள்ளது.

1962ஆம் ஆண்டு தொடக்கம் அப்பகுதியில் மக்கள் வாழ்ந்து வந்த நிலையில், 1990 களில் ஏற்பட்ட வன்செயல் காரணமாக இடம்பெயர்ந்து மீண்டும் 2006ஆம் ஆண்டு மீள்குடியேற்றப்பட்ட நிலையில், 184 குடும்பங்கள் தற்போதுவரை வாழ்ந்து வருகிறார்கள்.

பல வருடங்கள் குடியேற்ற திட்டம் ஊடாக வாழ்ந்து வந்தாலும் குடியிருப்பு காணிகளை இலங்கை துறைமுக அதிகார சபைக்கு சொந்தம் என துறைமுக அதிகார சபையினர் அப்பகுதியை அபகரிப்பு செய்ய முற்படுகின்றனர்.

குறித்த கிராமத்தில் விவசாய காணி 300 ஏக்கரும் குடியேற்ற காணி 200 ஏக்கர் என அண்ணளவாக காணப்பட்டாலும் தங்களுக்கு உரித்தான காணி என துறைமுக அதிகார சபையினர் மக்களை அச்சமூட்டி எச்சரிக்கை விடுக்கின்றனர்.









அப்பகுதியில் துறைமுக அதிகார சபையினர் கல் இட்டும் பதாகைகள் இட்டும் காட்சிப்படுத்தியுள்ளனர். கடந்த வாரமளவில் ஐவர் பயிர்ச்செய்கைக்காக சுத்தப்படுத்தியவர்களை காடு வெட்டிய குற்றச்சாட்டில் பொலிஸார் கைதுசெய்ததாகவும் அப்பகுதி குடியிருப்பாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர். மழையை நம்பிய விவசாய செய்கை, சேனை பயிர்செய்கை போன்ற தோட்டச் செய்கையிலும் ஈடுபடும் மக்களை வலுக்கட்டாயமாக அச்சுறுத்தி தங்களது காணி திருகோணமலை துறைமுக அதிகார சபையினர் அடிக்கடி தங்களை எச்சரிக்கை விடுப்பதாகவும் அக்கிராம மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

நாளாந்தம் கூலித்தொழில் மூலமே அன்றாட ஜீவனாம்சத்தை கொண்டுசெல்ல வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாகவும் அம்மக்களை கவலை வெளியிடுகின்றனர். குறித்த கிராமத்தில் வசிக்கும் 184 குடும்பங்களையும் பிரதேச செயலகம் ஊடாகவே குடியேற்றப்பட்டார்கள். ஆனாலும் பல வருடங்கள் வாழ்ந்து வந்தாலும் காணிக்கான எந்தவித உரித்து படிவங்களோ இதனைப்பெற காணிக் கச்சேரிகளோ இற்றைவரைக்கும் நடைபெறவில்லை என அம்மக்கள் தெரிவிக்கின்றனர். மீள் குடியேற்றக் கிராமங்களை இவ்வாறு நில அபகரிப்புக்கு உட்படுத்துவது தொடர்பில் மக்களின் நிம்மதியற்ற வாழ்க்கைமுறை அப்பகுதியில் அபிவிருத்தியற்ற முறையில் தொடர்கின்றது.

உட்கட்டமைப்பு வசதிகள், பொது அரச சேவைகளை பெற கூடிய எதுவுமே இல்லை அரச சேவைகளை பெற வேண்டுமானால் சுமார் 30 கிலோ மீற்றர் திருகோணமலை நகருக்கு செல்லவேண்டியுள்ளது. குறித்த கிராமத்திற்குள் காட்டு யானைகளின் தொல்லை பாதுகாப்பற்ற யானை வேலி என்பனவும் காணப்படுகிறது.

தொடர்ச்சியான காணி அபகரிப்பு தொடர்பில் உரிய அதிகாரிகளுக்கு எடுத்துரைத்த போதும் நிரந்தர தீர்வு கிட்டவில்லை என மக்கள் குற்றம் சுமத்துகின்றனர். துறைமுக அதிகார சபையினரின் அடிக்கடி உரிய கிராமத்துக்கு சென்று தங்களை எச்சரித்து விட்டு செல்வதாகவும் அப்பகுதி குடியிருப்பாளர்கள் தெரிவிக்கின்றனர். இதனால் பயிர்ச்செய்கையில் ஈடுபட முடியாது விவாசாய செய்கை என்பனவும் பாதிக்கப்பட்டுள்ளதாக அச்சம் வெளியிட்டுள்ளனர்.

தற்போதைய அசாதாரண கொரோனா சூழ்நிலையால் வாழ்வாதாரம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கின்றனர். SLPA என்ற எல்லையிடப்பட்ட கற்கள் போடப்பட்டு கிராமத்தை முற்று முழுதாக தங்கள் வசப்படுத்திக்கொள்ள நினைக்கும் இவர்கள் மீள்குடியேற்றக் கிராமத்தில் கைவைப்பது ஏன் என மக்கள் அங்கலாய்க்கின்றனர். இதுதவிர முத்துநகர் கிராம பிரதான வீதிக்கு முன் உள்ள சுமார் 75 ஏக்கர் மக்களுக்கு சொந்தமான காணிகளை வனஜீவராசிகள் திணைக்களத்தினர் அடாத்தாக செயற்பட்டுள்ளனர்.

இதில் சுமார் 150 குடும்பங்கள் வாழ்ந்தமையும் குறிப்பிடத்தக்கது. குடியேற்றக் காணிகளுக்குள் அடாத்தாக அத்துமீறி மக்கள் காணிகளை அரசாங்கம் சுவீகரிப்பு செய்வதை ஏற்றுக்கொள்ள முடியாது. இந்த நாட்டில் சிறுபான்மை இன மக்கள் மீது மட்டுமே காணிகளை அபகரிப்புச் செய்யும் சதித் திட்டங்களில் இருந்து எப்போது தான் விலகப்போகிறார்களோ என்ற மன ஏக்கமும் மக்கள் மத்தியில் குடிகொண்டுள்ளது. எனவே தான் முத்துநகர் கிராம மக்களுக்கு எப்போது தீர்வுகிடைக்கும் என ஏங்கித் தவிக்கின்றனர்.

தங்களுக்கான சொந்த காணிகளுக்கான அரச உரித்து படிவங்களைப் பெற அவசரமாக நடவடிக்கை எடுக்குமாறும் உரிய தரப்புக்களுக்கு கோரிக்கை விடுக்கின்றனர்.



இதேவேளை ஆசிரியர்கள் பற்றாக்குறையை நிவர்த்திக்கக் கோரி ஆர்ப்பாட்டமும் அண்மையில் (2022.03.31) இதே கிராமத்தில் உள்ள திருகோணமலை கல்வி வலயத்துக்கு உட்பட்ட தி/முத்து நகர் முஸ்லிம் வித்தியாலய முன்றலில் இடம்பெற்றது.

மாற்றாதே மாற்றாதே ஆசிரியரை மாற்றாதே, வேண்டும் வேண்டும் ஆசிரியர் வேண்டும், ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய், போன்ற வாசகங்களை ஏந்தியவாறு கோசங்களை எழுப்பியிருந்தனர். குறித்த பாடசாலையில் தரம் 09 வரை காணப்படுகின்றது. தற்போது ஆறு ஆசிரியர்களே கற்பித்து வருகிறார்கள். இதனால் மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளது. இருக்கின்ற ஆசிரியர்களை இடமாற்றம் செய்து பதில் ஆசிரியர்கள் நியமிக்கப்படவில்லை 2019 ல் இரு ஆசிரியர்கள், 2020இல் இரு ஆசிரியர்கள், 2021இல் மூன்று ஆசிரியர்கள் இடமாற்றப்பட்ட போதிலும் பதில் ஆசிரியர்கள் நியமிக்கப்படாமையினாலும் அதிபரை இடமாற்றம் செய்து தற்போது பதில் அதிபர் ஆறு ஆசிரியர்களில் ஒருவர் கடமையாற்றுவதனாலும் மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக கவனயீர்ப்பில் ஈடுபட்ட பெற்றார்கள் தெரிவிக்கின்றனர். தரம் 2,3 க்கான நிரந்தர ஆசிரியர்கள் பல மாதங்கள் இல்லாத நிலையிலும் கல்வி நடவடிக்கைகள் பின்னோக்கி செல்வதாகவும் இது தொடர்பில் உரிய கல்வி அதிகாரிகளுக்கு பாடசாலை அபிவிருத்திச் சங்கம் மூலமாக தெரியப்படுத்தியும் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை எனவும் பெற்றார்கள் மேலும் தெரிவிக்கின்றனர். உரிய பாடசாலை தரம் 9 வரை தற்போது உள்ளது இதனை தரம் 11 வரையாவது தரமுயர்த்தியும் தருமாறும் கோரிக்கை விடுக்கின்றனர். பின்தங்கிய இப்பாடசாலையில் தரம் ஒன்பதுவரை கற்பித்து உயர் கல்விக்காக தூர இடங்களுக்கு செல்ல வேண்டியநிலை ஏற்பட்டுள்ளதாகவும் மாணவர்களுக்கு இதன் ஊடாக பாதுகாப்பின்மை உள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.

பல தரப்பட்ட குறைகளுடன் வாழும் இம் மக்களின் எதிர்கால நலனுக்காகவும் கல்விச் சமூகத்தை உருவாக்க வேண்டியதன் பொறுப்பும் யார் கையில் உள்ளது என்பதையும் அக் கிராமவாசிகள் அங்கலாய்க்கின்றனர்.

# புதுவருட கொண்டாட்டத்துக்காக எரிவாயு பெற்றுக்கொள்ள காத்திருந்தோர்க்கு ஏமாற்றம்



(வி.சுகிர்தகுமார்)

அக்கரைப்பற்று தர்மசங்கரி மைதானத்தில் நேற்று (12) அதிகாலை முதல் எரிவாயு சிலிண்டர்களுக்காக காத்திருந்த மக்கள் ஏமாற்றத்துடன் வீடு திரும்பினர்.

இன்று குறித்த மைதானத்தில் எரிவாயு சிலிண்டர்கள் வழங்கப்படவுள்ளதாக கிடைத்த தகவலை அடுத்து அதிகாலை முதல் நூற்றுக்கணக்கான மக்கள் வரிசையில் காத்திருந்தனர்.

ஆயினும் குறித்த இடத்தில் எரிவாயு சிலிண்டர்கள் வழங்கப்படுவதற்கான எவ்வித ஏற்பாடுகளும் இல்லாத நிலையிலும் மக்கள் வெளியேறாமல் காத்திருந்தனர். இதேநேரம் எவ்வாறாயினும் எரிவாயு சிலிண்டர்களை பெற்றே குறித்த இடத்தைவிட்டு நகர்ந்து செல்வோம் எனவும் சிலர் ஆதங்கத்தை வெளிப்படுத்தினர்.

சித்திரைப் புத்தாண்டை கொண்டாடுவதற்குகூட தம்மால் முடியாத நிலை உருவாகியுள்ளதாகவும் கவலையுடன் கருத்து தெரிவித்தனர். பலர் தமது தொழிலுக்கு செல்லாமல் கூட எரிவாயு சிலிண்டர்களுக்காக காத்திருந்தனர்.

இன்னும் சிலர் தூர பிரதேசத்தில் இருந்து ஆட்டோ கூலியும் கொடுத்து குறித்த இடத்திற்கு வருகைத் தந்து ஏமாற்றத்துடன் காத்திருந்தனர். ஆகவே குறித்த விடயம் தொடர்பில் சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுத்து மக்கள் குறைதீர்க்க முன்வரவேண்டும் என கோரிக்கை விடுத்தனர்.



# எரிபொருள் நிரப்பு நிலையங்களில் அநீதம்; சினேகிதர்களுக்கு மட்டும் விநியோகம்!

(மீராவோடை நிருபர்)

நாட்டில் எரிபொருள்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள நிலையில் அதனை பெற்றுக்கொள்ள பொதுமக்கள் நீண்ட வரிசையில் நாள் கணக்காக காத்து நிற்பதை காண முடிகிறது.

அந்தவகையில், வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சில எரிபொருள் நிரப்பு நிலையங்களில் எரிபொருள் இல்லை என்று காட்சிப் படுத்தப்பட்டுள்ள நிலையில், எரிபொருள் நிரப்பு நிலையங்களிலுள்ள நபர்களின் சினேகிதர்களுக்கு மாத்திரம் எரிபொருள்களை வினியோகம் செய்து வரும் இந்த செயற்பாடு பொதுமக்கள் மத்தியில் ஆத்திரத்தை எற்படுத்தியுள்ளது.

இவ்வாறு அனீதமான முறையில் எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்கள் நடந்து கொள்வதால் அன்றாடம் தொழில் செய்வோர் பாதிக்கப்படுகின்றனர்.

அத்துடன், இவ்வாறான சம்பவங்கள் பொதுமக்கள் மத்தியில் முறுகல் நிலையை தோற்றுவிக்கும் செயலாகவும் அமைந்து வருகிறது.

எனவே, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இந்த விடயம் சம்பந்தமாக கவனமெடுத்து பாகுபாடின்றி அனைவருக்கும் எரிபொருள்கள் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பொதுமக்கள் வேண்டிக் கொண்டுள்ளனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# களுதாவளையில் கோர விபத்து
## நால்வருக்கு படுகாயம்!



(மட்டக்களப்பு, கல்லடி நிருபர்)

களுவாஞ்சிகுடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட களுதாவளையில் நேற்று முன்தினம் (11) இடம்பெற்ற கோர விபத்தில் 4 பேர் படுகாயமடைந்து களுவாஞ்சிகுடி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக களுவாஞ்சிகுடி பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்விபத்துச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:-

கல்முனையிலிருந்து மட்டக்களப்பு நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த தனியார் பேருந்தும், மட்டக்களப்பிலிருந்து கல்முனை நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த காரும் நேருக்கு நேராக மோதியதனால் இவ்விபத்து நிகழ்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில் குறித்த காரில் பயணித்த தந்தை, தாய், இரு பிள்ளைகள் என நால்வரும் பலத்த காயங்களுக்குள்ளான நிலையில் களுவாஞ்சிகுடி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, மேலதிக சிகிச்சைகளுக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்குக் மாற்றப்பட்டுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

# இந்த வருடம் சித்திரையாள் இலங்கை நாட்டிற்கு வரமாட்டாள்..!

சித்திரை வருடம் இது சிறப்பில்லை மக்களுக்கு.!
நித்திரையிலும் சரிசாமம் மின்சாரத்தை வெட்டுகிறான்!
புத்தாடை வாங்கிடவும் இங்கு போதாது வருமானம்!
பால்பொங்கல் அடுப்பெரிய நெருப்பும் இல்லை!

பாலர்க்கு கொடுப்பதற்கு பால்மாவும் விலை அதிகம்.!
பருப்பரிசி சீனி தேங்காய் எண்ணெய் பற்றாக்குறை.!
வரிசையிலே நின்றாலும் வாகனங்களுக்கு டீசல் இல்லை.!
பெற்றோல் செட் எல்லாம் கலனுடனே மக்கள் வெள்ளம்.!

கண்ட கண்ட இடமெலாம் கவன ஈர்ப்பு போராட்டங்கள்.!
கண்கெட்ட ஆட்சியாலே கஷ்டத்தில் ஊரெல்லாம்.!
விண்தொட்ட விலையேற்றம் விவசாய உரம் எண்ணெய்.!
எரிவாயு சிலிண்டர் எல்லாம் விளையாட்டு மைதானத்தில்.!

கரி பூசும் அமைச்சர்களால் பசி தீர்க்க திட்டம் இல்லை.!
வரி மட்டும் கூட்டிவிட்டால் வாழ்க்கை செலவு என்னவாகும்.!
நரி வேடம் போட்டவர்கள் நாட்டை ஆளும் பரிதாபம்!
சரி வராது இந்த நிலைமை தொடரத்தான் போகுது!

மன்னர் மாளிகையும் மக்கள் சூழ்ந்து ஆர்ப்பாட்டம்.!
மந்திரிமார் எல்லாம் மறைந்து இருந்து திண்டாட்டம்.!
மடையர்கள் செயல்களாலே மலை ஏறும் விலைஏற்றம்.!
மருத்துநீர் வைத்தாலும் மனம் இல்லை கொண்டாட்டம்.!

சனத்திற்கு சாமான் வாங்க வருமானமின்றி பரிதாபம்.!
பணத்துக்கு வழி இல்லை பஞ்சம் பட்டினி பசி ஏக்கம் .!
எட்டுத்திக்குமே எப்போதும் இருள் சூழ்ந்த பரிதாபம்.!
இந்த வருடம் சித்திரையாள் இலங்கை நாட்டில் வரமாட்டார்..!

அம்பிளாந்துறையூர் அரியம்





# அகவை 62 இல் தடம் பதிக்கும் ரவூப் ஹக்கீம்

## - ஓர் சிறப்புப் பார்வை

இலங்கை முஸ்லிம் அரசியலில் சர்வதேசம் அறிந்த சமகாலத் தலைவர், சட்ட முதுமணி, கவிஞர், சிறந்த பேச்சாளர், எழுத்தாளர், மும்மொழித்தேர்ச்சி மிக்கவர் என பல்வேறு துறைகளில் தடம்பதித்த ஆளுமைமிக்க ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம். அகவை 62ஐ எட்டியிருப்பதனால் அவர் பற்றிய ஓர் சிறப்புப் பார்வையாக இக்கட்டுரை எழுதப்படுகிறது.

கண்டி குருந்துகொல்லையை பிறப்பிடமாகவும் கலகெதரயை வசிப்பிடமாகவும் கொண்ட நூர் முஹம்மத், ரவூப் ஹக்கீமின் தந்தைவழி பாட்டனார் ஆவார். சிங்கள மற்றும் தமிழ் மொழியாற்றல் மிக்க அவர் கவிஞராகவும், எழுத்தாளராகவும் இருந்தார். அவர் திருகுர்ஆனில் சில பகுதிகளை சிங்கள மொழியில் மொழிபெயர்த்ததோடு, சிங்கள மொழியில் "இஸ்லாம் யனு குமக்த" (இஸ்லாம் என்பது என்ன?) என்ற கேள்வி, பதில் அமைப்பிலான நூலையும் அச்சிட்டு வெளியிட்டிருந்தார். "சத்திய இஸ்லாம் சன்மார்க்க வினா, விடை" என்ற ஐந்து கடமைகளின் விளக்கத்தை தமிழில் புத்தகமாக வெளியிட்டுமிருந்தார். சிங்களப் பாடசாலையொன்றிலும் கூட முதன் முறையாக முஸ்லிம் அதிபராக நியமிக்கப்பட்ட நூர் முஹம்மது, கலகெதரயில் "வாத்தியார் அப்பா" என அழைக்கப்பட்டார்.

நுவரெலியா மாவட்டம், ஹப்புகஸ்தலாவையைச் சேர்ந்த உதுமான் லெப்பை ஆலிம் சாஹிப் ரவூப் ஹக்கீமின் தாய்வழி பாட்டனார் ஆவார். இலங்கை ஆங்கிலேயர் ஆட்சியின் கீழ் இருந்த காலத்திலேயே இந்தியா சென்று தமிழ்நாட்டில் காயல்பட்டிணத்தில் மார்க்கக் கல்வியையும் அரபு மொழி தேர்ச்சியையும் பெற்ற பின்னர், 35 வருடங்கள் ஊதியம் பெறாது ஹப்புகஸ்தலாவை ஜும்மா மஸ்ஜிதின் பிரதான கதீபாக கடமையாற்றிய அன்னார் அரபுத்தமிழில் (அரவி, அரபு எழுத்துக்கள் பயன்படுத்தப்படும்) தேர்ச்சி பெற்றிருந்தார். அரபுத் தமிழில் பிரசித்தி பெற்ற கவிதை அமைப்பிலான நூலாக பதுர் சஹாபாக்களை போற்றி எழுதப்பட்ட நாமகீர்த்தன பன்னிசைப்பு நூலான "பத்று மாலை" யை இயற்றியவருமாவார். திருமணப் பதிவாளராகவும் ஆங்கிலேய அரசால் அவர் நியமிக்கப்பட்டிருந்தார்.

இவ்வாறான சிறந்த குடும்பப் பின்னணியைக் கொண்டிருந்த அப்துல் ரவூப் - ஹாஜரா தம்பதிகளுக்கு மூன்றாவது குழந்தையாக 1960ஆம் ஆண்டு ஏப்ரல் 13ஆம் திகதி நாவலப்பிட்டியில் பிறந்தவர்தான் அப்துல் ரவூப் ஹிப்பதுல் ஹக்கீம்.

**கல்வி மற்றும் தொழில்**

அநுராதபுரம் மாவட்டம், கலாவெவ முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் என்.எம்.ஏ. ரவூப் அதிபராக இருந்த காலப்பகுதியிலேயே ரவூப் ஹக்கீம் பிறந்தார். பின்னர் கடமை நிமித்தமாக கெக்கிராவை – ஹோராப்பொல, பொலன்னறுவை மாவட்டத்தில் தம்பாளை ஆகிய இடங்களுக்கு அப்துல் ரவூப் அதிபர் இடமாற்றம் பெற்றுச் சென்ற சந்தர்ப்பங்களில் அக் கிராமங்களின் சமூக அபிவிருத்திக்காக பெரும் பங்காற்றியுள்ளார். தாம் வாழ்ந்த கிராமங்களில் மாத்திரம் அல்லாது, அயல் கிராமங்களுக்கும் சென்று பெண்களின் மார்க்க வழிபாடுகளை சீர் செய்து வழிநடத்துவதில் ஹக்கீமின் தாயாரும் பெரும்பங்காற்றியுள்ளார்.

ரவூப் ஹக்கீமின் ஆரம்பகால கற்றல் நடவடிக்கைகள் தந்தையோடு இணைந்து குடும்பமாக புலம்பெயர்ந்த பாடசாலைகளில் இருந்தாலும், தரம் 6 இல் அவர் தன் தந்தையின் கிராமமான கலகெதரவிலுள்ள ஜப்பார் மத்திய கல்லூரியில் சேர்க்கப்பட்டார். அப்போதே சிறந்த பேச்சாற்றலைக் கொண்டிருந்த ரவூப் ஹக்கீம் கண்டி மாவட்ட ரீதியாக நடத்தப்பட்ட அனைத்து மொழி, வயது பிரிவுகளிலுமான மிகச்சிறந்த பேச்சாளருக்கான மலேஷிய பிரதமர் துங்கு அப்துல் ரஹ்மான் கேடயத்தையும் வென்றிருந்தார். கலகெதரையில் பயின்று கொண்டிருந்தபோது அக்காலப்பகுதியில் ஏழாம் தரத்தில் நடத்தப்பட்டுவந்த "நவோதய" புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றி மிகச் சிறப்பாக சித்தியடைந்ததன் காரணமாக 1973இல் கொழும்பிலுள்ள ரோயல் கல்லூரியில் கற்கும் சந்தர்ப்பத்தை அவர் பெற்றுக் கொண்டார்.

ரவூப் ஹக்கீம் தனது தலைமைத்துவ ஆளுமையையும், எழுத்து மற்றும் பேச்சுத் திறமைகளையும் வளர்த்துக்கொண்டதோடு, ஆங்கிலம், சிங்களம் ஆகிய மொழிகளிலும் ஆற்றல் மிக்கவராக தன்னை புடம் போடும் களமாக ரோயல் கல்லூரியை பயன்படுத்திக் கொண்டார்.

அவர் ரோயல் கல்லூரியில் தமிழ் நாடக மன்றத்தின் தலைவராக இருந்தார். ரோயல் கல்லூரியின் விவாதக் குழுவில் நான்கு வருடங்கள் உறுப்பினராக இருந்து பின்னர் அதன் தலைவராகவும் அணியை வழிநடத்தினார்.

1976ஆம் ஆண்டு பிரதமராக இருந்த சிறிமாவோ பண்டார நாயக்க காலத்தில், பாகிஸ்தானின் சுதந்திர தினத்தை முன் னிட்டு தேசிய ரீதியில் பாடசாலைகளுக்கிடையில் நடை பெற்ற கட்டுரைப் போட்டியில் ரவூப் ஹக்கீம் ரோயல் கல்லூரி யிலிருந்து பங்கேற்று அந் நாட்டின் சிற்பி முஹம்மத் அலி ஜின்னா பற்றி சிறப்பாக எழுதியதற்காக தங்கப்பதக்கத்தை வென்றதோடு, பின்னர் 1979ஆம் ஆண்டில் சிறந்த பேச்சாள ருக்கான இராமநாதன் நினைவு விருதையும் வென்றார்.

பாடசாலைக் கல்வியை முடித்து விட்டு சட்டக் கல்லூரியில் இணைந்தார். அங்கும் தனது திறமைகளால் மிகச்சிறப்பாக அவர் செயற்பட்டார். சட்டக் கல்லூரி தமிழ் மன்றத்தின் தலைவராகவும் ரவூப் ஹக்கீம் இருந்தார்.

இங்கிலாந்தின் சொலிசிட்டர் பரீட்சையில் தேறியிருந்த ரவூப் ஹக்கீம் பின்னர் கொழும்பு பல்கலைக்கழகத்தில் சட்ட முதுமாணி (LLM) பட்டத்தையும் பெற்றுக் கொண்டார்.

**திருமண வாழ்வு**

கண்டி மாநகர சபை உறுப்பினராக இளம் வயதில் தெரிவு செய்யப்பட்ட பிரபல வர்த்தகரும் சமூக சேவையாளருமான இஸ்மாயில் முஹம்மத் குத்தூஸின் ஒரே மகளான ஷானாஸ் என்பவரை ரவூப் ஹக்கீம் திருமணம் செய்து கொண்டார்.

ஷானாஸ் குத்தூஸ் கொழும்பு பல்கலைக்கழகத்தில் வணிகத்துறையில் முதுமாணி (MBA) பட்டத்தைப் பெற்றவர். தனது வணிக நிறுவனமான கார்னிவல் ஐஸ் கிரீம் நிறுவனத்தை வெற்றிகரமாக முகாமைத்துவம் செய்து வருகின்றார். இனிப்புப் பண்டங்கள் தயாரிப்பாளர்கள் சங்கத்தின் தலைவியாகவிருந்தவர். தொழிலாண்மை பெண் ஆளுமைகளுக்கு சிறந்த முன்னுதாரணமாகத் திகழ்கிறார்.

ரவூப் ஹக்கீம் - ஷானாஸ் தம்பதிகளுக்கு செய்னப், செய்தூன் என இரு பெண் பிள்ளைகள் உள்ளனர். மூத்த மகளான செய்னப் நட்டிங்ஹாம் பல்கலைக்கழகத்தில் வணிக முகாமைத்துவத்தில் பட்டம் பெற்றவர். கலாநிதி மில்ஹான் இக்ராம் முகமது என்ற வழக்கறிஞரை மணந்து கொண்டார். இவ்விருவருக்கும் சுபைதா என்ற மகள் ஒருவர் இருக்கிறார்.

ரவூப் ஹக்கீமின் மற்றைய மகளான செய்தூன், கொழும்பு பல்கலைக்கழகத்தில் சட்டத்துறையில் அண்மையில் பட்டம்பெற்றுக் கொண்டார். அவர் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்ற இயந்திரவியலாளரான ராயீட் பரீட் என்பவரைத் திருமணம் செய்து கொண்டிருக்கிறார்.

**அரசியல் பிரவேசமும் அதன் பின்னணியும்**

ரவூப் ஹக்கீம் முதன் முதலாக முஸ்லிம்களின் விடுதலை இயக்கமான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸினூடாகவே அரசியலுக்குள் பிரவேசித்தார்.


சட்டக்கல்லூரியில் கற்றுக் கொண்டிருக்கும்போது முதன் முதலாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் ஸ்தாபகத் தலைவர் எம்.எச்.எம்.அஷ்ரஃப்பைச் சந்தித்தார். 1972ஆம் ஆண்டின் அரசியலமைப்புச் சட்டத்தின் மீதான அஷ்ரஃப்பின் விமர்சனத்தை ஆர்வமாகப் படித்துக் கொண்டிருக்கும்போது ரவூப் ஹக்கீம் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு அஷ்ரஃப்பிடம் சென்று ஒரு மறக்க முடியாத உரையாடலில் ஈடுபட்டார்.

விடுதலைப் புலிகளின் தேடுதல் நடவடிக்கைகள் கிழக்கில் மும்முரமாக இருந்த காலப் பகுதியில் அஷ்ரஃப், கொழும்பிற்கு இடம்பெயர்ந்தபோது, ஜனாதிபதி சட்டத்தரணி பாயிஸ் முஸ்தபா ஊடாக அஷ்ரஃப் – ஹக்கீம் உறவு வளர்ந்தது.

1989ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் தலைவர் அஷ்ரஃப்பின் வேண்டுகோளின் பேரில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸினைப் பிரதிநிதித்துவப்படுத்தி கண்டி மாவட்டத்தில் ரவூப் ஹக்கீமின் மாமனாரான இஸ்மாயில் குத்தூஸ் போட்டியிட்டார்.

அத்தேர்தலில் இஸ்மாயில் குத்தூஸின் பிரசார முகாமை யாளராக ரவூப் ஹக்கீம் செயற்பட்டார். பிரஸ்தாபத் தேர்தலில் கட்சியில் போட்டியிட்டவர்களின் பட்டியலில் முதலிடத்தை குத்தூஸ் பெற்றுக் கொண்டாலும், முஸ்லிம் காங்கிரஸ் தனித்துப் போட்டியிட்டதால் சிறிய வாக்கு வித்தியாசத்தில் ஆசனத்திற்குத் தகுதிபெறவில்லை.

இவ்வாறு 1988ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸில் இணைந்து தலைவர் அஷ்ரஃப்பின் வேண்டுகோள்களின்படி சிறப்பாகச் செயற்பட்டது மாத்திரமின்றி, கட்சி வளர்ச்சிப் பணிகளிலும் ஹக்கீம் அயராது பாடுபட்டார். 1992ஆம் ஆண்டு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பொதுச் செயலாளராக ரவூப் ஹக்கீம் நியமிக்கப்பட்டார். கட்சிக்குள் ஏற்பட்ட நெருக்கடிகளின் போது அவர் தலைமைக்குப் பக்கபலமாகச் செயற்பட்டார்.



ரவூப் ஹக்கீமின் ஆளுமை பண்புகள், கட்சி செயலாளராக சிறப்பாக செயற்பட்டமை, கட்சி வளர்ச்சியில் அவரது பங்களிப்பு என்பவற்றோடு தலைமைத்துவ விசுவாசம் கருத்திற் கொள்ளப்பட்டதால் 1994ஆம் ஆண்டு ரவூப் ஹக்கீமின் 34ஆவது வயதில் தேசியப்பட்டியலூடாக நாடாளுமன்ற உறுப்புரிமை அஷ்ரஃப்பினால் வழங்கப்பட்டது. அத்தோடு, நாடாளுமன்றத்தில் குழுக்களின் பிரதித் தலைவராகவும் ரவூப் ஹக்கீம் நியமிக்கப்பட்டார்.

1998ஆம் ஆண்டு அரசியல் மற்றும் அரசாங்க விவகாரங்களுக்காக ஜெய்சீஸ் அமைப்பு வருடாவருடம் வழங்கும் சிறந்த இளைய அரசியல்வாதிக்கான விருதை வென்றுள்ள ரவூப் ஹக்கீம், கொழும்பு மாவட்ட பில்லியர்ட்ஸ் சம்பியன்ஷிப்பையும் வென்றவராவார்.

1999ஆம் ஆண்டு தலைவர் அஷ்ரஃப் தூரநோக்கோடு தேசிய ஐக்கிய முன்னணி கட்சியை ஆரம்பித்தார். முஸ்லிம் காங்கிரஸின் பொதுச் செயலாளராக இருந்த ரவூப் ஹக்கீமை அப் பதவியில் இருந்து அகற்றி, தேசிய ஐக்கிய முன்னணியின் பொதுச் செயலாளராக ஹக்கீமை அஷ்ரஃப் பதவி மாற்றம் செய்தார்

2000ஆம் ஆண்டு கண்டி மாவட்டத்தில் தேசிய ஐக்கிய முன்னணியை பிரதிநிதித்துவப்படுத்தி ஆனால், மரச் சின்னத்தில் நாடாளுமன்றத் தேர்தலில் அஷ்ரஃப்பினால் ரவூப் ஹக்கீம் களமிறக்கப்பட்டார். வடக்கு, கிழக்கிற்கு வெளியே பிரதான அரசியல் நீரோட்ட தேசிய கட்சிகளில் அல்லாது ஒரு முஸ்லிம் கட்சியிலிருந்து ஒருவர் போட்டியிட்டு வெற்றி பெற்றமை அதுவே முதல் தடவையாகும்.

2000ஆம் ஆண்டு பெருந்தலைவர் அஷ்ரஃப்பின் திடீர் மறைவைத் தொடர்ந்து முஸ்லிம் காங்கிரஸுக்குள் தலைமைத்துவ வெற்றிடம் ஏற்பட்டது. இதன் காரணமாக ரவூப் ஹக்கீம் மற்றும் பேரியல் அஷ்ரஃப் ஆகிய இருவரும் கட்சி தலைமைத்துவத்திற்கு இணைத் தலைவர்களாக நியமிக்கப்பட்டார்கள். அதன் பின், சிறிது காலத்திலேயே சில முரண்பாடுகள் ஏற்பட, தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவராக பேரியல் அஷ்ரஃப்பும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவராக ரவூப் ஹக்கீமும் நியமிக்கப்பட்டார்கள்.

2000ஆம் ஆண்டு ரவூப் ஹக்கீம், உள்நாட்டு மற்றும் சர்வதேச வர்த்தகம், முஸ்லிம் சமய விவகாரங்கள் மற்றும் கப்பல்துறை அமைச்சராக சந்திரிகா அம்மையாரின் தலைமையிலான அமைச்சரவையில் நியமிக்கப்பட்டார்.

2001ஆம் ஆண்டு மாவனெல்லை பிரதேசத்தில் இடம்பெற்ற இனக் கலவரத்தின் பின்னணியில் அரச சார்பு அரசியல்வாதிகள் இருந்ததனை ஹக்கீம் வெளிப்படையாகவும் பலமாகவும் கண்டித்ததன் காரணமாக, தனது அமைச்சரவையிலிருந்து சந்திரிகா அம்மையார் ரவூப் ஹக்கீமை அமைச்சுப் பதவியில்



இருந்து இரவோடிரவாக அதிரடியாக நீக்கினார். அதன் காரணமாக முஸ்லிம் காங்கிரஸ் அரசாங்கத்திலிருந்து வெளியேறியதனால் சந்திரிகா அரசு பெரும்பான்மையை இழந்து தடுமாறி கவிழ்ந்தது.

2001ஆம் ஆண்டு ஒக்டோபரில் ஐக்கிய தேசிய முன்னணியுடன் ரவூப் ஹக்கீம் தலைமையிலான முஸ்லிம் காங்கிரஸ் இணைந்து கொண்டது. அதே ஆண்டில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய தேசிய முன்னணியுடன் இணைந்து கண்டியில் போட்டியிட்டு ரவூப் ஹக்கீம் மீண்டும் அங்கு வெற்றி பெற்றார்.

நாடாளுமன்றத் தேர்தல் வெற்றியின் பின்னர் அமைக்கப்பட்ட ரணில் விக்ரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தில் துறைமுக அபிவிருத்தி, கப்பல் துறை, முஸ்லிம் விவகார மற்றும் கிழக்கு அபிவிருத்தி அமைச்சராக அவர் நியமிக்கப்பட்டார்.

2004ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் அதாவுல்லாஹ், ஹரீஸ், அன்வர் இஸ்மாயில் ஆகியோர் முஸ்லிம் காங்கிரஸில் இருந்து விலகி, சந்திரிகா அணியோடு இணைந்து ஒரு சவால் மிக்க சூழலை கிழக்கு அரசியலில் தோற்றுவித்தபோதும், மிகவும் துணிச்சலோடு களத்தில் இறங்கிய ரவூப் ஹக்கீம் அம்பாறை மாவட்டத்தில் முஸ்லிம் காங்கிரஸில் போட்டியிட்டு அமோக வெற்றியை ஈட்டி, மீண்டும் நாடாளுமன்றத்திற்குத் தெரிவு செய்யப்பட்டார். இத்தேர்தலில் ஐக்கிய தேசிய முன்னணி ஆட்சியை இழந்ததன் காரணமாக பங்காளிக் கட்சியான முஸ்லிம் காங்கிரஸும் எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்தது.

2007ஆம் ஆண்டு ஜனவரி மாதம் மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கத்துடன் இணைந்து கொண்ட ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமுக்கு தபால் மற்றும் தொலைத்தொடர்பு அமைச்சு வழங்கப்பட்டது. அதே வருடம் டிசம்பர் மாதம் முஸ்லிம் காங்கிரஸ் அரசாங்கத்திலிருந்து வெளியேறியது.

2008ஆம் ஆண்டு முதன் முதலாக கிழக்கு மாகாண சபைத் தேர்தல் நடைபெற்றபோது ஐக்கிய தேசிய முன்னணியுடன் இணைந்து ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் போட்டியிட்டது. ஹிஸ்புல்லாஹ் திடீர் என கட்சி தாவியதால் உருவான சவால்மிக்க சூழலை தைரியமாக எதிர்கொண்ட தலைவர் ரவூப் ஹக்கீம், தனது நாடாளுமன்ற ஆசனத்தை இராஜினாமா செய்துவிட்டு திருகோணமலை மாவட்டத்தில் போட்டியிட்டு அதிகூடிய வாக்குகளால் வெற்றி பெற்றார். கிழக்கு மாகாண சபை ஆட்சியை ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு கைப்பற்றியதன் காரணமாக ரவூப் ஹக்கீம் மாகாண சபை உறுப்பினர் பதவியைவிட்டு விலகி ஐக்கிய தேசிய முன்னணியின் தேசியப் பட்டியலூடாக மீண்டும் நாடாளுமன்றத்திற்குள் பிரவேசித்தார்.

2010ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் ரவூப் ஹக்கீம், கண்டி மாவட்டத்தில் ஐக்கிய தேசிய முன்னணியோடு இணைந்து போட்டியிட்டு வெற்றி பெற்றார். அதே ஆண்டு நவம்பர் மாதம் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புடன் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இணைந்து கொண்டதன் காரணமாக நீதி அமைச்சராக ரவூப் ஹக்கீம் நியமிக்கப்பட்டார்.

மஹிந்த ராஜபக்ஷ அரசின் இனவாத செயற்பாடுகள் முஸ்லிம் சமூகத்தை மிகவும் இக்கட்டான சூழ்நிலைக்கு ஆளாக்கியிருந்ததனால் அரசுக்குள் இருந்து கொண்டே சமூகத்திற்கான போராட்டத்தை ஐக்கிய நாடுகள் சபை வரை கொண்டு செல்கின்ற சாணக்கியமான நகர்த்தல்களை மேற்கொண்டிருந்த ஹக்கீம், 2014ஆம் ஆண்டு இறுதிப்பகுதியில் நல்லாட்சி அரசாங்கத்தை ஏற்படுத்தும் நோக்கில் அன்றைய எதிரணி பொது வேட்பாளராகக் களமிறங்கிய மைத்ரிபால சிறிசேனவுக்கு ஆதரவு கொடுப்பதற்காக ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பிலிருந்து வெளியேறினார்.

2015ஆம் ஆண்டு மைத்ரிபால சிறிசேன ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டு அமைக்கப்பட்ட அமைச்சரவையில் ரவூப் ஹக்கீம் நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சராக நியமிக்கப்பட்டார்.

2015ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி நல்லாட்சிக்கான ஐக்கிய தேசிய முன்னணியுடன் இணைந்து போட்டியிட்டது. இதன்போது ரவூப் ஹக்கீம் கண்டி மாவட்டத்தில் போட்டியிட்டு வெற்றி பெற்றார்.

நல்லாட்சிக்கான ஐக்கிய தேசிய முன்னணி அமைச்சரவையில் நகரத்திட்டமிடல், நீர் வழங்கல் அமைச்சராக அவர் இருந்தார். அந்த ஆட்சிக்காலத்தில் இடம்பெற்ற 52 நாள் அரசியல் குழப்பத்தின் பின்னர் ரவூப் ஹக்கீமுக்கு முன்னைய அமைச்சுகளுடன் சேர்த்து உயர்கல்வியமைச்சும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

அவர் 2019ஆம் ஆண்டு நாடாளுமன்ற அரசியல் வாழ்வில் தொடர்ச்சியாக 25 வருடங்களை நிறைவுசெய்து வெள்ளி விழா கண்ட அரசியல்வாதியாகினார்.

சமூகம் நெருக்கடிக்குள் சிக்கித் தவிக்கும்போது அமைச்சுப் பதவிகளைத் துறந்து வெளியேறி துணிச்சலுடன் சவால்களுக்கு முகம் கொடுத்து வெற்றிகண்டவர் ரவூப் ஹக்கீம். ஆட்சியாளர்கள் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் என்ற பேரியக்கத்தை அழிக்க அந்த கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களைப் பயன்படுத்தியபோது கட்சியை அழிவிலிருந்து பாதுகாக்கும் நோக்கோடு, அரசாங்கத்தில் இணைந்து கொள்ளவேண்டிய இக்கட்டான சூழ்நிலைகள் உருவாக்கப்பட்டபோது அவற்றிற்கும் ரவூப் ஹக்கீம் முகங் கொடுக்க நேர்ந்தது.

2020ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் கண்டி மாவட்டத்தில் சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்து போட்டியிட்டு முதன்மை வெற்றியாளராக வெற்றி பெற்றார். பொதுஜன பெரமுன கட்சி ஆட்சியைக் கைப்பற்றியதால், எதிர்க்கட்சி அரசியலை ரவூப் ஹக்கீம் முன்னெடுத்துக் கொண்டிருக்கிறார்.

2019 ஏப்ரல் 21 ஈஸ்டர் தினத்தில் மேற்கொள்ளப்பட்ட குண்டுவெடிப்புச் சம்பவங்களின் பின்னர் இன்றுவரை முஸ்லிம் சமூகத்திற்கெதிரான இனவாதச்சக்திகளின் நெருக்குவாரங்கள் அதிகரித்துக் கொண்டிருக்கின்றன.

ஜனாஸா எரிப்பு, முஸ்லிம் பெண்களின் ஆடை விவகாரம், முஸ்லிம் விவாக, விவாகரத்து, காதி நீதி மன்றத்திற்கெதிரான நிலைப்பாடு, மத்ரஸாவுக்கெதிரான கருத்து எனப் பலவாறான பிரச்சினைகளுக்கு சமூகம் முகங்கொடுத்துக் கொண்டிருக்கும்போது, தனது கட்சியின் நான்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்கிக் கொண்டிருக்கும் சந்தர்ப்பத்தில், சமூக உணர்வுகளுக்கு மதிப்பளித்து, இந்த ஆட்சி நாட்டு மக்களை வீதிக்கு இறக்கும் நிலையைத் தோற்றுவித்திருப்பதை கண்டித்து தனி நபராக தன்னாலான அனைத்து வழிகளிலும் போராடிக் கொண்டிருக்கும் தலைவராக ரவூப் ஹக்கீம் திகழ்கிறார்.

முஸ்லிம்கள் பயங்கரவாதிகள், பெண் அடிமைவாதிகள் என பிழையான கருத்தியலை பிரசார உத்தியாக இனவாதிகள் கையில் எடுத்திருந்த சூழலில், ரவூப் ஹக்கீம் அவ்விமர்சனங்களுக்கு பதிலளிக்கும் நோக்கில் "WE ARE A PART, NOT APAART" (நாம் ஒரு பிரிவினரேயன்றி, பிரிந்து வாழ்பவர்கள் அல்லர்) என்ற நூலை எழுதி 2020ஆம் ஆண்டு ஜூலை மாதம் வெளியிட்டார்.

அந்நூலில் "இஸ்லாம் பயங்கரவாதம், பெண்ணடிமைத்துவமும் கொண்ட மார்க்கமல்ல" என்ற கருதுகோளை அவர் தகுந்த ஆதாரங்களுடன் நிறுவுகிறார். அந்நூல் காலத்திற்குப் பொருத்தமான நூலாக நோக்கப்படுகிறது. அந்நூல் ஆங்கில மொழியில் வெளியிடப்பட்டிருக்கிறது. விரைவில் தமிழ் மற்றும் சிங்கள மொழியிலும் வெளியிடுவதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இவ்வாறு தனது வாழ்நாளில் பல படித்தரங்களைப் பெற்று முன்னேறி இனங்களுக்கிடையில் நல்லிணக்கத் தோடு செயற்படும் தலைவராக, பெரும்பான்மை இன மக்களின் ஆதரவையும் ஒருசேரப் பெற்ற முஸ்லிம் அரசியல் தலைவர் என்ற தகைமை ரவூப் ஹக்கீமிற்கே உரியது. அவர் சிங்கள மக்களோடும் தமிழ் மக்களோடும் சிறந்த உறவைப் பேணி வருகிறார். ஐக்கியப்பட்ட இலங்கைக்குள் இனநல்லுறவைப் பலப்படுத்தும் தலைவராக ரவூப் ஹக்கீம் இருப்பதனால், "அமரபுர நிக்காயவின் சம்புத்த சாசனோதய மகா சங்கத்தினால்" அதன் துணை பீடாதிபதி கொடுகொட தம்மவாச நாயக்க தேரரின் தலைமையிலான சங்க சபை "சர்வ சமய சாமகாமீ தேச அபிமானி லங்கா புத்ர" எனும் விருதை கண்டி புஷ்பானந்த கேட்போர் கூடத்தில் வைத்து ரவூப் ஹக்கீமுக்கு வழங்கி கௌரவித்துள்ளது.



**எம்.என்.எம்.யஸீர் அறபாத்**
**- ஓட்டமாவடி -**

# உக்ரைன் மீது 49ஆவது நாளாகவும் தாக்குதலை தொடரும் ரஷ்யா:

# புதிய இராணுவத் தளபதியை நியமித்தார் புட்டின்: டான்பாஸ் பிராந்தியத்தைக் கைப்பற்ற அதிரடி வியூகம்







உக்ரைன் மீது ரஷ்யத் தாக்குதல் இன்று 49ஆவது நாளாகவும் தொடர்கிறது.

ரஷ்யா தொடர் பின்னடைவுகளை சந்தித்துவரும் நிலையில், புதிய இராணுவத் தளபதியை ஜனாதிபதி புட்டின் நியமித்துள்ளார். கிழக்கு உக்ரைனிலுள்ள டான்பாஸ் பிராந்தியத்தைக் கைப்பற்ற புதிய தளபதியின் கீழ் அதிரடி திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

உக்ரைன் நேட்டோ அமைப்பில் இணைவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து கடந்த பெப்ரவரி 24ஆம் திகதி போர் தொடுத்த ரஷ்யா, இன்று 49ஆவது நாளாகவும் தாக்குதல் நடத்தி வருகிறது.

இந்நிலையில், தலைநகர் கீவ் மற்றும் இரண்டாவது பெரிய நகரான கார்கீவ், இர்பின், மரியுபோல், செர்னிவ், புச்சா உள்ளிட்ட பல நகரங்களைக் கைப்பற்ற முடியாமல் பின்வாங்கியுள்ளது. இந்த நகரங்களில் கடுமையான சேதத்தை மட்டுமே ஏற்படுத்தியது. குறிப்பாக, புச்சாவில் அப்பாவி மக்களை கொடூரமாக கொன்று புதைத்துள்ளது. இதுதொடர்பான புகைப்படங்கள் வெளியாகி உலகத்தையே அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது. ரஷ்யாவின் போர்க் குற்றங்களுக்கு உலக நாடுகள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளன.

உக்ரைனுக்கு அமெரிக்கா, நேட்டோ உள்ளிட்ட உலக நாடுகள் ஆயுத உதவி செய்து வருவதால், ரஷ்யாவுக்கு தக்க பதிலடி கொடுத்து வருகிறது. தரைவழி மற்றும் வான்வழித் தாக்குதலுக்கு உக்ரைன் பதிலடி கொடுத்து வருகிறது. இதனால், ரஷ்யா டாங்கிகள், இராணுவத் தளவாடங்கள் கடுமையாக சேதமடைந்துள்ளன. இதன் காரணமாக உக்ரைனை இரண்டாக பிரித்து, கிழக்கு உக்ரைனை கைப்பற்ற ரஷ்யா கவனம் செலுத்தி வருகிறது. குறிப்பாக, கிழக்கு உக்ரைனிலுள்ள டான்பாஸ் பிராந்தியத்தில் ரஷ்ய கிளர்ச்சியாளர்கள் வசிக்கும் பகுதிகளை தங்கள் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர ரஷ்யா திட்டமிட்டுள்ளது. இதற்கு அந்த பிராந்தியத்தை தங்களது படைகளால் சுற்றிவளைத்துள்ளது.





பல நகரங்களைக் கைப்பற்றுவதில் ஏற்பட்ட தோல்வியைபோன்று, டான்பாஸ் பிராந்தியத்தைக் கைப்பற்றும் திட்டத்தில் தோல்வியை தழுவக்கூடாது என்பதில் ரஷ்யா கவனமாகவுள்ளது. இந்நிலையில், போரை வழிநடத்த புதிய இராணுவத் தளபதியாக ரஷ்யாவின் தெற்கு பிராந்திய இராணுவத் தளபதியான ஜெனரல் அலெக்ஸாண்டர் ட்வார்னிகோவை ரஷ்ய ஜனாதிபதி புட்டின் நியமித்துள்ளார். உக்ரைன் போருக்கு நடத்தப்படவுள்ள தாக்குதலுக்கு வழிநடத்த தளபதி நியமனம் செய்யப்பட்டுள்ளார். புதிய தலைமைதாங்கும் வகையில் ரஷ்யப் படைக்கு இதுவரை தளபதி நியமனம் செய்யப்படவில்லை. தொடர்ந்து, ஏற்பட்டுவரும் பின்னடைவு மற்றும் உக்ரைனின் கிழக்கு பகுதியில் தளபதியாக நியமனம் செய்யப்பட்டுள்ள அலெக்சாண்டர், கடந்த 2015ஆம் ஆண்டு சிரியா உள்நாட்டுப் போரின்போது, அங்கு சென்ற ரஷ்யப் படைக்கு தலைமை தாங்கியவர். அப்போது ரஷ்ய வீரர்களால் ஏராளமான அப்பாவி மக்கள் கொல்லப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

**ரயில் நிலையம் மீது ஏவுகணைத் தாக்குதல்**

உக்ரைன் மீது ரஷ்யத் தாக்குதல் இன்று 49ஆவது நாளாகவும் தொடர்கிறது. இந்நிலையில், உக்ரைனின் கிழக்கு நகரான கிராமடோர்ஸ்க் ரயில் நிலையத்தில் ரஷ்யப் படைகள் அடுத்தடுத்து ஏவுகணைத் தாக்குதலை நடத்தியுள்ளன.

தாக்குதலுக்குப் பிறகு அங்கிருந்த காட்சியை உக்ரைனின் பாதுகாப்புதுறை அமைச்சு வெளியிட்டுள்ளது. கிராமடோர்ஸ்க் நகரிலிருந்து வெளியேறுவதற்காக ரயில் நிலையத்தில் காத்துக்கொண்டிருந்த அப்பாவி பொதுமக்கள் மீது ரஷ்யா போர் விதிமுறைகளை மீறி தாக்குதல் நடத்தியிருப்பதாகவும், இந்தத் தாக்குதலில் 2 குழந்தைகள் உட்பட 30இற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டிருப்பதாகவும், நூற்றுக்கும் மேற்பட்டோர் காயமடைந்ததாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

**மிக முக்கியமான நாட்கள்**

உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி நாட்டு மக்களுக்கு வெளியிட்டுள்ள வீடியோ பதிவில், "போரில் அடுத்துவரும் சில நாட்கள் மிக முக்கியமானவை. ரஷ்யப் படைகள் கிழக்கு பகுதியில் விரிவான போரை நடத்த வாய்ப்புள்ளது. இது போரில் மிக முக்கியமான கட்டமாகும். போர்க்குற்றங்களை செய்துள்ள ரஷ்யா அதை ஒப்புக்கொள்ள தயங்குகிறது. அந்த நாடு அரக்கத்தனமாக மாறிவிட்டது. ஆனால், தங்கள் தவறுகளை ரஷ்யா ஒப்புக்கொள்ளும் காலம் நிச்சயம் வரும். ஜேர்மனி உள்ளிட்ட மேற்கத்தேய நாடுகள் தங்களுக்கு மேலும் உதவ வேண்டும்" - என்று கேட்டுக் கொண்டார்.

**விமானங்களை தாக்கி அழிக்கும் ஏவுகணை அழிப்பு**

உக்ரைன் டினிப்ரோ நகரின் தெற்கு பகுதியில் உக்ரைன் தனது வான் பாதுகாப்புக்கு வைத்திருந்த நான்கு எஸ்.300 ரக ஏவுகணைகள் அழிக்கப்பட்டதாகவும், 25 உக்ரைன் வீரர்களும் கொல்லப்பட்டனர் என்றும் ரஷ்ய இராணுவ செய்தி தொடர்பாளர் தெரிவித்தார். விமானங்களை தாக்கி அழிக்கும் எஸ்.300 ரக ஏவுகணைகள் ரஷ்யாவில் தயாரிக்கப்பட்டது. ஸ்லோவேக்கியா இந்த ஏவுகணைகளை உக்ரைனுக்கு வழங்கியுள்ளது. ஆனால், இந்த ஏவுகணைகள் அழிக்கப்பட்டது குறித்து எந்த தகவலும் தங்களுக்குத் தெரியாது என்று ஸ்லோவேக்கியா தெரிவித்துள்ளது.

# பாகிஸ்தானின் 23ஆவது பிரதமராக 70 வயதான ஷெபாஸ் செரீப் தெரிவு



பாகிஸ்தானின் புதிய பிரதமராக முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப்பின் சகோதரரான ஷெபாஸ் ஷெரீப் போட்டியின்றி தெரிவு செய்யப்பட்டுள்ளார். இதன்மூலம் அவர் அந்நாட்டின் 23ஆவது பிரதமராக பொறுப்பேற்கவுள்ளார்.

பாகிஸ்தான் நாடாளுமன்றத்தில் இம்ரான் கானுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் மீது சனிக்கிழமை நள்ளிரவு நடத்தப்பட்ட வாக்கெடுப்பு வெற்றிபெற்ற நிலையில், அவரது தலைமையிலான அரசு கவிழ்ந்தது.

இதனைத் தொடந்து, பிரதமர் பதவிக்கு எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளராக முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப்பின் சகோதரரும், முஸ்லீம் லீக்-நவாஸ் கட்சியின் தலைவருமான ஷெபாஸ் ஷெரீப் நேற்றுமுன்தினம் வேட்புமனுத் தாக்கல் செய்தார். அதேபோல், இம்ரான் கானின் பாகிஸ்தான் தெஹ்ரிக்-இ-இன்சாப் கட்சியின் சார்பில் அதன் துணைத்தலைவர் ஷா மக்மூத் குரேஷியும் வேட்பு மனுத்தாக்கல் செய்தார்.

இந்நிலையில், புதிய பிரதமரை தெரிவுசெய்வதற்காக நேற்று முன்தினம் பிற்பகல் வேளையில் பாகிஸ்தான் நாடாளுமன்றம் கூடியது. அப்போது, அவைக்கு வந்த இம்ரான் கட்சி எம்.பிக்கள் ஷெபாஷ் ஷெரீப்பிற்கு எதிராகவும், புதிய பிரதமர் தெரிவுசெய்வதற்கு எதிராகவும் முழக்கத்தை எழுப்பியதைத் தொடர்ந்து அவர்கள் நாடாளுமன்றத்தை புறக்கணித்தனர்.

இதனையடுத்து, பிரதமராக ஷெபாஸ் ஷெரீப் ஒருமனதாக தெரிவுசெய்யப்படுவதாக அறிவிக்கப்பட்டது. இதன் மூலம் அவர் அந்நாட்டின் 23ஆவது பிரதமராக பொறுப்பேற்கவுள்ளார்.

முன்னதாக, ஷெபாஸ் ஷெரீப் மீது ஊழல் குற்றச்சாட்டுகளை முன்வைத்த இம்ரான் கான், நாடாளுமன்றத்தில் திருடர்களுடன் அமர முடியாது என கருத்து தெரிவித்தார். மேலும், எம்.பி. பதவியை ஒட்டுமொத்தமாக இராஜினாமா செய்ய தெஹ்ரிக்-இ-இன்சாப் கட்சியினர் திட்டமிட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

# உக்ரைனை தொடர்ந்து நேட்டோவில் சேர விருப்பம் தெரிவித்த பின்லாந்து

## ரஷ்யா கடும் எச்சரிக்கை



நேட்டோவில் இணைய முயன்றதாக கூறி உக்ரைன் மீது ரஷ்யா தாக்குதல் தொடுத்திருக்கும் நிலையில், தற்போது மேலும் ஒரு ஐரோப்பிய நாடும் நேட்டோவில் சேர விருப்பம் தெரிவித்திருப்பது ரஷ்யாவுக்கு தலைவலியை ஏற்படுத்தியுள்ளது.

நேட்டோ அமைப்பில் சேர கடும் எதிர்ப்புத் தெரிவித்து உக்ரைன் மீது 49ஆவது நாளாகவும் தாக்குதல் நடத்திவரும் ரஷ்யா, துறைமுக நகரான மரியுபோலை முற்றுகையிட்டுள்ளது. அடுக்குமாடி குடியிருப்புகள், வணிக வளாகங்கள், தேவாலயங்கள் என ரஷ்யாவின் தாக்குதலுக்கு எதுவும் தப்பவில்லை. திரும்பும் திசையெல்லாம் கட்டட குவியலாக காட்சியளிக்க மரண ஒலி போரின் அவலத்தை வெளிச்சம்போட்டு காட்டியுள்ளது.

உக்ரைனின் 86 இராணுவத் தளங்களை ஏவுகணைகளை வீசி அழித்திருப்பதாக தெரிவித்துள்ள ரஷ்யா, உக்ரைனின் ஏவுகணைத் தாக்குதலையும் முறியடித்துவிட்டதாக தெரிவித்துள்ளது. இந்நிலையில், உக்ரைனை தொடர்ந்து பின்லாந்தும் நேட்டோவில் இணைய ஆர்வம் காட்டுவதால் அதற்கு ரஷ்யா கடும் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இந்த நடவடிக்கை ஐரோப்பாவில் ஸ்திரத்தன்மையைக் கொண்டுவராது எனவும் நேட்டோ மோதலை நோக்கிய ஒரு கருவியாகவே உள்ளது எனவும் ரஷ்யா குற்றஞ்சாட்டியுள்ளது.

உக்ரைன் போருக்குப் பிறகு நேட்டோ அமைப்பில் சேரும் முடிவில் பின்லாந்து மக்கள் 60% பேர் ஆர்வம் காட்டியுள்ளதாக பின்லாந்து தெரிவித்துள்ளது. பின்லாந்து நாடாளுமன்றத்தில் அடுத்த வாரம் தேசிய பாதுகாப்பு மறு ஆய்வு அறிக்கை வெளியிடப்படவுள்ளது. அதனடிப்படையில் விவாதம் நடத்தப்பட்டு நேட்டோ அமைப்பில் இணையலாமா வேண்டாமா என்பதை பின்லாந்து எம்.பிக்கள் முடிவு செய்யவுள்ளனர்.

# உலக செய்திகள்

# கொரோனா வைரஸின் மேலும் இரண்டு புதிய துணை வகைகள் குறித்து ஆய்வு



ஒமிக்ரொன் வகை கொரோனா வைரஸின் மேலும் இரண்டு புதிய துணை வகைகளான பி.ஏ.4 மற்றும் பி.ஏ.5 ஆகியவற்றின் பரவல் தன்மை மற்றும் அதன் தீவிரம் தொடர்பாக தொடர்ந்து கண்காணித்து வருவதாக உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

ஐரோப்பிய நாடுகளிலும், சீனாவின் ஷாங்காய் நகரத்திலும் ஒமிக்ரோனின் பி.ஏ.2 வகை அதிகம் பரவி வரும் நிலையில், அங்கு தொற்று பரவல் அதிகரித்தவண்ணமுள்ளது.

சில நாடுகளில் பி.ஏ.4 மற்றும் பி.ஏ.5 வகை வைரஸ்களின் பாதிப்பு ஏற்பட்டுள்ளதைத் தொடர்ந்து, அது பிற வகை வைரஸ்களை விட அதிக பாதிப்பை ஏற்படுத்துமா என்பது தொடர்பாக ஆய்வுசெய்து வருவதாக உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

இதனிடையே, கனடாவின் ஒன்டாரியா மாகாணத்தில், கொரோனா வைரஸின் ஆறாம் அலை ஏற்பட்டுள்ளதாக தெரிவித்த அந்நாட்டின் மருத்துவ நிபுணர்கள், எதிர்வரும் வாரங்களில் மருத்துவமனைகளில் சேர்க்கப்படுவோர் எண்ணிக்கை அதிகரிக்க வாய்ப்புள்ளதாக தெரிவித்தனர்.

# பஹ்ரைனில் பீரங்கிக் குண்டுகள் முழங்க நிறைவுபெற்றது ரமழான் நோன்பு



பஹ்ரைனில் பீரங்கிக் குண்டுகளின் முழக்கத்துடன் ரமழான் நோன்பை நிறைவுசெய்யும் நிகழ்வை ஏராளமானோர் கண்டு களித்தனர்.

கடிகாரங்கள் மற்றும் தொலைபேசிகளின் புழக்கம் அதிகரிப்பதற்கு முன் பீரங்கிக் குண்டுகள் முழக்கத்தின் வாயிலாக மக்கள் நோன்பு நேரம் நிறைவடைந்ததை தெரிந்துகொண்டனர். பதினைந்தாம் நூற்றாண்டில் எகிப்தில் தோன்றிய இந்த வழக்கம் பல வளைகுடா நாடுகளுக்குப் பரவியது.

பஹ்ரைனில், கடந்த 2 ஆண்டுகளாக கொரோனா கட்டுப்பாடுகளால் மக்கள் கூடி இந்நிகழ்வை காண தடை விதிக்கப்பட்டிருந்தது. கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டதைத் தொடந்து, இந்த பாரம்பரிய நிகழ்வை காண ஏராளமான பெற்றோர் குழந்தைகளுடன் வந்தனர்.

## பிரான்ஸ் ஜனாதிபதித் தேர்தல்:

# பெரும்பான்மை பெறாத வேட்பாளர்கள்; ஏப். 24இல் இரண்டாம் கட்டத் தேர்தல்



பிரான்ஸ் ஜனதிபதித் தேர்தலில் எந்த வேட்பாளரும் பெரும்பான்மை வாக்குகளைப் பெறாத நிலையில் முதலிரு இடங்கள் பெற்ற இம்மானுவேல் மெக்ரொன், மரின் லீ பென் ஆகியோரில் ஒருவரை ஜனாதிபதியாகத் தெரிவுசெய்வதற்கான இரண்டாம் கட்டத் தேர்தல் ஏப்ரல் 24ஆம் திகதி நடைபெறவுள்ளது.

பிரான்ஸ் ஜனாதிபதித் தேர்தலில் 12 வேட்பாளர்கள் போட்டியிட்டனர். நேற்றுமுன்தினம் பதிவான வாக்குகள் எண்ணப்பட்டதில் எந்த வேட்பாளரும் 51வீத வாக்குகளைப் பெறவில்லை. தற்போதைய ஜனாதிபதி இம்மானுவேல் மெக்ரொன் 27.6 வீத வாக்குகளைப் பெற்று முதலிடத்திலுள்ளார்.

வலதுசாரிக் கட்சியைச் சேர்ந்த மரின் லீ பென் 2.4 வீத வாக்குகளுடன் இரண்டாமிடத்திலுள்ளார். பிரான்ஸ் தேர்தல் விதிமுறைப்படி எந்த வேட்பாளரும் பெரும்பான்மை வாக்குகளைப் பெறாவிட்டால் முதலிரு இடங்களைப் பிடித்தோர் இடையே இரண்டாம் கட்டத் தேர்தல் நடைபெறும் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஜூன் 10இல் 'ஜுராசிக் வேர்ல்ட் டோமினியன்'



'ஜுராசிக் வேர்ல்ட் டோமினியன்' படம் எதிர்வரும் ஜூன் 10ஆம் திகதி உலகம் முழுவதும் திரைக்கு வருகிறது. 'ஜுராசிக் பார்க்' படங்களின் வரிசையில் கடைசியாக 'ஜுராசிக் வேர்ல்ட் ஃபெலன் கிங்டம்' படம் 2018ஆம் ஆண்டு திரைக்கு வந்தது. இதையடுத்து இந்தப் படத்தின் அடுத்த பாகமாக 'ஜுராசிக் வேர்ல்ட் டோமினியன்' உருவாகி வந்தது. இந்தப் படத்தை காலின் டிரெவொரவ் இயக்கியுள்ளார். இதில் கிரிஸ் பராட், பிரய்ஸ் டல்லாஸ் ஹோவர்ட், லவ்ரா டெர்ன், சாம் நீல் உட்பட பலர் நடித்துள்ளனர்.

ஜுராசிக் பார்க் படங்களிலேயே நீளமான படமாக இது 2 மணிநேரம் 26 நிமிடம் ஓடும் வகையில் தயாராகியுள்ளது. தமிழ், தெலுங்கு, ஹிந்தி மொழிகளிலும் இந்தப் படம் உருவாகவுள்ளது.

# இலங்கையிடமிருந்து பறிபோகும் ஆசியக்கிண்ணத் தொடரை நடத்தும் வாய்ப்பு!




இலங்கையில் நிலவும் பொருளாதார நெருக்கடி மற்றும் அரசியல் குழப்பம் காரணமாக எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் இலங்கையில் நடைபெறவுள்ள ஆசியக் கிண்ண கிரிக்கெட் தொடரை இலங்கையிலிருந்து வேறு நாட்டில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.


ஆசியாவைச் சேர்ந்த கிரிக்கெட் அணிகள் பங்கேற்கும் ஆசியக் கிண்ண கிரிக்கெட் தொடர் இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடத்தப்படுகிறது. இதில் இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், ஆப்கானிஸ்தான் மற்றும் தகுதிச்சுற்றில் தெரிவுசெய்யப்படும் இரு அணிகள் என மொத்தமாக ஆறு அணிகள் பங்கேற்கும். கொரோனா பரவல் மற்றும் அதன் கட்டுப்பாடுகள் காரணமாக 2020ஆம் ஆண்டுக்கான தொடர் ஒத்திவைக்கப்பட்டது.

2022ஆம் ஆண்டுக்கான தொடர் ஓகஸ்ட் 27ஆம் திகதிமுதல் செப்டெம்பர் 11ஆம் திகதிவரை இலங்கையில் நடத்தப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது. இந்நிலையில், இலங்கையில் நிலவும் பொருளாதார நெருக்கடி மற்றும் அரசியல் குழப்பம் காரணமாக ஆசியக் கிண்ண கிரிக்கெட் தொடரை இலங்கையிலிருந்து வேறு நாட்டில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இலங்கையில் எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக மின் உற்பத்தி பாதிக்கப்பட்டிருப்பதால், தினமும் குறிப்பிட்ட சில மணித்தியாலங்கள் மின்வெட்டு அமுலில் உள்ளது. இந்தச் சூழலில் அங்கு தொடர் நடத்துவது சரியானதாக இருக்காது என ஆசிய கிரிக்கெட் பேரவை கருதுவதாக கூறப்படுகிறது. எனவே, ஆசியக் கிண்ணத் தொடர் இலங்கையிலிருந்து வேறு நாட்டில் நடத்தப்படலாம் எனத் தெரிகிறது.

ஆசியக் கிண்ணத் தொடர் ஆரம்பிக்கப்பட்ட 1984ஆம் ஆண்டிலிருந்து இந்தியா ஏழு முறை பட்டத்தை வென்றுள்ளது. ஐந்து பட்டங்களை வென்ற இலங்கை இரண்டாவது இடத்தில் உள்ளது. இறுதியாக கடந்த 2018இல் நடைபெற்ற தொடரில் இந்திய அணி சம்பியன் பட்டத்தை வென்றிருந்தது.

# மார்ச் மாதத்தின் சிறந்த வீரரான பாபர் அஸாம்



சர்வதேச கிரிக்கெட் பேரவையினால் மாதந்தோறும் சிறந்த வீரர்கள் கௌரவிக்கப்பட்டு வருகின்றனர்.

அந்தவகையில் கடந்த மார்ச் மாதத்திற்கான சிறந்த வீரர் யார் என்பதை அடையாளம் காண்பதற்கான வீரர்களின் பெயரை சர்வதேச கிரிக்கெட் பேரவை அண்மையில் பரிந்துரைத்தது.

இதில் ஆடவருக்கான பரிந்துரையில் பாகிஸ்தான் அணியின் தலைவர் பாபர் அஸாம், மேற்கிந்திய தீவுகள் அணியின் கிரைக் பிராத்வேட் மற்றும் அவுஸ்திரேலிய டெஸ்ட் அணியின் தலைவர் பெட் கம்மின்ஸ் ஆகியோர் இடம்பெற்றிருந்தனர். அதேபோல் மகளிருக்கான பரிந்துரை பட்டியலில் சோபி எக்ளேஸ்டோன், லாரா வால்வோர்டட் மற்றும் ரேச்சல் ஹெய்ன்ஸ் ஆகியோரின் பெயர்கள் பரிந்துரைக்கப்பட்டன.

இந்நிலையில், மார்ச் மாதத்திற்கான சிறந்த கிரிக்கெட் வீரராக பாகிஸ்தான் அணியின் தலைவர் பாபர் அஸாமும் சிறந்த வீராங்கனையாக அவுஸ்திரேலியாவின் ரேச்சல் ஹெய்ன்ஸும் தெரிவுசெய்யப்பட்டனர்.




விளையாட்டு செய்திகள்
thamilansports@gmail.com

S R G
போட்டியை காண

# தென்னாபிரிக்காவின் சுழலில் சுருண்ட பங்களாதேஷ்





தென்னாபிரிக்க அணிக்கு எதிரான 2ஆவது டெஸ்டில் 413 ஓட்டங்களை இலக்காகக்கொண்டு இரண்டாவது இன்னிங்ஸில் ஆடிய பங்களாதேஷ் அணி 80 ஓட்டங்களுக்குள் சுருண்டுபோக டெஸ்ட் தொடரை 2-0 என தென்னாபிரிக்க அணி முழுமையாக வென்றது.

முன்னதாக நடைபெற்ற ஒருநாள் தொடரை 2-1 என பங்களாதேஷ் அணி கைப்பற்றியது. இதையடுத்து இரு அணிகளுக்கும் இடையிலான 2 ஆட்டங்கள்கொண்ட டெஸ்ட் தொடர் நடைபெற்றது. டர்பனில் நடைபெற்ற முதல் டெஸ்ட்டை 220 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தென்னாபிரிக்க அணி வென்றது.

போர்ட் எலிசபெத்தில் நடைபெற்ற 2ஆவது டெஸ்டில் முதல் இன்னிங்ஸில் தென்னாபிரிக்க அணி 453 ஓட்டங்கள் குவித்தது. பதிலுக்கு முதல் இன்னிங்ஸில் பங்களாதேஷ் அணியால் 217 ஓட்டங்களே எடுக்க முடிந்தது. 2ஆவது இன்னிங்ஸில் 6 விக்கெட் இழப்புக்கு 176 ஓட்டங்கள் எடுத்து டிக்ளேர் செய்தது தென்னாபிரிக்க அணி. இதனால் பங்களாதேஷ் அணி வெற்றிபெற 413 ஓட்டங்கள் இலக்கு நிர்ணயிக்கப்பட்டது.

போட்டியின் 3ஆம் நாள் முடிவில் பங்களாதேஷ் அணி, 3 விக்கெட் இழப்புக்கு 27 ஓட்டங்களை எடுத்திருந்தது. இந்நிலையில், நேற்று முன்தினம் தென்னாபிரிக்க அணியின் பந்துவீச்சை சமாளிக்க முடியாத காரணத்தால் 23.2 ஓவர்களில் 80 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது பங்களாதேஷ் அணி. இதனால் 2ஆவது டெஸ்ட்டையும் 332 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வென்ற தென்னாபிரிக்க அணி, டெஸ்ட் தொடரை 2-0 என முழுமையாக வென்றது.

2ஆவது இன்னிங்ஸில் 7 விக்கெட்டுகளை வீழ்த்திய கேஷவ் மஹாராஜ் ஆட்ட நாயகனாகவும் தொடர் நாயகனாகவும் தெரிவுசெய்யப்பட்டார். இந்த இரண்டாவது டெஸ்ட்டில் 9 விக்கெட்டுகளும் மொத்தமாக டெஸ்ட் தொடரில் 16 விக்கெட்டுகளும் அவர் வீழ்த்தினார். ஐ.சி.சி. உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரின் புள்ளிகள் பட்டியலில் தென்னாபிரிக்க அணி தற்போது இரண்டாவது இடத்திற்கு முன்னேறியுள்ளது.

# ஐ.சி.சி. T20 உலகக்கிண்ணத் தொடரில் முதல் முறையாக 20 அணிகள்




ஆம் ஆண்டு அமெரிக்கா மற்றும் மேற்கிந்திய தீவுகளில் நடைபெறவுள்ள ஐ.சி.சி. இருபதுக்கு 20 உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரில் 20 அணிகள் பங்கேற்கும் என ஐ.சி.சி. அறிவித்துள்ளது.

குறித்த தொடரில் 12 அணிகள் நேரடியாகத் தகுதிபெறும் என ஐ.சி.சி. அறிவித்துள்ளது. அவுஸ்திரேலியாவில் இந்த வருடம் நடைபெறும் இருபதுக்கு 20 உலகக்கிண்ணத் தொடரில் முதல் 8 இடங்களைப் பிடிக்கும் 8 அணிகள் அடுத்த உலகக்கிண்ணத் தொடருக்கு நேரடியாகத் தகுதிபெறும். போட்டியை நடத்தும் நாடுகளான அமெரிக்காவும் மேற்கிந்தியத் தீவுகளும் நேரடித் தகுதியை அடைந்துள்ளன. மீதமுள்ள இரு அணிகள், தரவரிசையின் அடிப்படையில் தெரிவாகும்.

ஒருவேளை மேற்கிந்தியத் தீவுகள் அணி முதல் 8 இடங்களில் இடம்பெற்றுவிட்டால், தரவரிசையின் அடிப்படையில் மூன்று அணிகள் தெரிவு செய்யப்படும். இதர 8 அணிகளும் தகுதிச்சுற்றின் அடிப்படையில் தேர்வாகவுள்ளன. ஐ.சி.சி. இருபதுக்கு 20 உலகக்கிண்ண வரலாற்றில் 20 அணிகள் பங்கேற்கவிருப்பது இதுவே முதல்முறையாகும்.

# அடுத்த மகளிர் இளையோர் T20 உலகக்கிண்ணத் தொடர் தென்னாபிரிக்காவில்

2023ஆம் ஆண்டுக்கான 19 வயதிற்குட்பட்ட மகளிர் இருபதுக்கு 20 உலகக்கிண்ண கிரிக்கெட் தொடர் தென்னாபிரிக்காவில் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தொடர் கடந்த வருடம் இடம்பெறவிருந்த நிலையில், கொரோனா வைரஸ் தொற்று நிலை காரணமாக மறுஅறிவித்தல் வரை பிற்போடப்பட்டிருந்தது. இந்நிலையில், குறித்த தொடரை அடுத்த வருடம் ஜனவரி மாதத்தில் நடத்தவுள்ளதாக தென்னாபிரிக்க கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

அதேநேரம்,சர்வதேச மகளிர் இருபதுக்கு 20 உலகக்கிண்ணத் தொடர் அடுத்த வருடம் பெப்ரவரி மாதம் 9ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள நிலையில், அதற்கு முன்னர் இந்தத் தொடர் இடம்பெறும் என தென்னாபிரிக்க கிரிக்கட் சபை தெரிவித்துள்ளது.

# கிழக்கு மண்ணுக்கும், நிந்தவூருக்கும் பெருமை சேர்த்த மொஹமட் அஸான்



தியகம மஹிந்த ராஜபக்ஷ விளையாட்டரங்கில் அண்மையில் நிறைவுக்குவந்த 100ஆவது தேசிய மெய்வல்லுனர் சம்பியன்ஷிப் தொடரில் ஆண்களுக்கான டெகத்லன் எனப்படுகின்ற 10 அம்சப் போட்டிகளில் பங்குகொண்ட கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த மொஹமட் அஸான் 7 ஆயிரத்து 172 புள்ளிகளை எடுத்து தங்கப் பதக்கம் வென்றார்.

இதன்மூலம் குறித்த போட்டிப் பிரிவில் 7 ஆயிரம் புள்ளிகளைக் கடந்த இரண்டாவது இலங்கை வீரராக சாதனை படைத்து அஸான் வரலாற்றில் இடம்பிடித்தார். முன்னதாக 2018ஆம் ஆண்டு டெகத்லன் தேசிய சம்பியனான அஜித் கருணாதிலக்க 7,355 புள்ளிகளை எடுத்து இலங்கை சாதனை படைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதனிடையே 2018ஆம் ஆண்டுமுதல் தேசிய ரீதியில் நடைபெற்று வருகின்ற டெகத்லன் போட்டி நிகழ்ச்சியில் தொடர்ச்சியாக பங்குகொண்டு வருகின்ற அஸான், தேசிய அளவில் தங்கப் பதக்கமொன்றை வெற்றிகொண்ட முதல் சந்தர்ப்பம் இதுவாகும்.

10 வகைப் போட்டி நிகழ்ச்சிகளை உள்ளடக்கியதாக 100 மீற்றர் (11.31 செக். – முதலிடம்), நீளம் பாய்தல் (7.16 மீற்றர் – இரண்டாமிடம்), குண்டு எறிதல் (12.72 மீற்றர் – முதலிடம்), ஈட்டி எறிதல் (54.25 மீற்றர் – இரண்டாமிடம்), 1,500 மீற்றர் (4 நிமிடங்கள். 42.69 செக் – முதலிடம்), தட்டெறிதல் (38.43 மீற்றர் – முதலிடம்), கோலூன்றிப் பாய்தல் (4.30 மீற்றர் – முதலிடம்), 400மீற்றர் (51.90 செக். – முதலிடம்), 110 மீற்றர் சட்டவேலி ஓட்டம் (14.90 செக். – முதலாமிடம்), உயரம் பாய்தல் (1.81 மீற்றர் – இரண்டாமிடம்) ஆகிய போட்டி நிகழ்ச்சிகளில் பங்குகொண்டு அஸான் திறமைகளை வெளிப்படுத்தினார்.

இதன்படி 7,172 புள்ளிகளை எடுத்து இம்முறை 100ஆவது தேசிய மெய்வல்லுனர் சம்பியன்ஷிப்பில் தங்கப் பதக்கத்தை வென்றார். கிழக்கு மாகாணம் நிந்தவூரைச் சேர்ந்த மொஹமட் அஸான் தனது மாகாணத்திற்கும் தனது ஊருக்கும் பெருமை தேடிக்கொடுத்துள்ளார்.

# 2026 பொதுநலவாய விளையாட்டு விழா அவுஸ்திரேலியாவில்



4 ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும் பொதுநலவாய விளையாட்டு விழாவில் 2026ஆம் ஆண்டுக்கான போட்டியை அவுஸ்திரேலியா நடத்தும் என அறிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி பொதுநலவாய விளையாட்டுப் போட்டிகள் அவுஸ்திரேலியாவில் 6ஆவது முறையாகவும், விக்டோரியா மாகாணத்தில் இரண்டாவது முறையாகவும் நடைபெறவுள்ளது.

அவுஸ்திரேலியாவின் விக்டோரியா மாகாணத்திலுள்ள ஜீலாங், பெண்டிகோ, பல்லாரட், கிப்ஸ்லாண்ட் ஆகிய பகுதிகளில் 2026ஆம் ஆண்டுக்கான பொதுநலவாய விளையாட்டுப் போட்டிகள் நடைபெறவுள்ளன. இதனிடையே 2022 பொதுநலவாய விளையாட்டுப் போட்டிகள் இங்கிலாந்தின் பேர்மிங்காமில் எதிர்வரும் ஜூலை 28 முதல் ஓகஸ்ட் 8 வரை நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7